சிவதொண்டன் வெளியீடு.

ஓம்

# சிவநெறிச் சிந்தனைத் திரட்டு



சிவதொண்டன் நிலையம்
யாழ்ப்பாணம்.

சிவ

சிவதொண்டன் வெளியீடு - 5

வெள்ளி விழா மலர்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சிவநெறிச் சிந்தனைத் திரட்டு

★

சிவதொண்டன் நிலையம்
யாழ்ப்பாணம்
1962.

உரிமை பதிவு

ஸ்ரீ லங்கா அச்சகம்
234, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்

விலை ரூபா 1 - 00.

உ
சிவமயம்

# அணிந்துரை

நிகழும் சுபகிருது ஆண்டு சித்திரைத் திங்கள் பதினாரும் நாள் (29-4-62) ஞாயிற்றுக்கிழமையன்று **கொழும்பில் நடைபெற்ற சிவதொண்டன் வெள்ளிவிழாக்** கொண்டாட்டத்தின்போது அதன் ஞாபகார்த்தமாக எதனை அன்பர்களுக்கு அளிக்கலாம் என எண்ணினேம். எண்ணினேமாகிய எமக்குச் **சிவநெறிச் சிந்தனைத் திரட்டு** என்னும் சீரிய மலரொன்றை வெளியிட்டுதவுவதே பொருத்தமுடைத்தெனத் திருவருட் சம்மதமாகத் தோன்றிற்று. அதன் பலனாகவே இம்மலர் வெளிவருகின்றது.

சைவவாழ்வு, சைவசித்தாந்தம், காப்பது விரதம், குருவின் பெருமை, சிவ தொண்டு, குருபரன் திருமொழிகள், என்றின்னோரன்ன அரிய பல கட்டுரைகளைக் கொண்டு இம்மலர் மிளிர்கின்றது. அக்கட்டுரைகளே தம்முடைய சிறப்பைத் தாமே காட்டா நிற்கின்றன. இவற்றுட் சில காலத்துக்குக் காலம் அறிஞர்களால் **'சிவதொண்டன்'** இதழ்களுக்கு எழுதியுதவப் பெற்றவையாம்.

செந்தமிழ் நலனும் சிவநெறி அறிவும் உளநூல் வளனும் பயக்கும் இவ்வரிய கட்டுரைகள் அன்பர்களுக்கு இன்பமூட்டுவதன்றியும் கல்லூரிகளில் சமயபாடம் கற்கும் உயர்தர மாணவர்கட்கும் சமய நுண் பொருள்களை அறிவதற்குப் பெரிதும் பயன்படுவனவாகும். ஆகவே, செந்தமிழ் அன்பர்கள் அனைவரும் இதனை வாங்கிப் படித்துப் பயனடைவார்களாக.

சிவதொண்டன் நிலையம்,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
சிவதொண்டன் நிர்வாக சபையார்

# பொருளடக்கம்


| பொருள் | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | சமயம் முளைக்கும் முறை | ... | ... | 1 |
| 2. | சைவ வாழ்வு | ... | ... | 7 |
| 3. | சைவ சித்தாந்தம் | ... | ... | 12 |
| 4. | ஆக்கந் தரும் வாழ்க்கை | ... | ... | 20 |
| 5. | நாம் யார்? | ... | ... | 29 |
| 6. | பழக்கம் | ... | ... | 31 |
| 7. | காப்பது விரதம் | ... | ... | 36 |
| 8. | ஓவியமும் காவியமும் | ... | ... | 39 |
| 9. | தூய்மை | ... | ... | 42 |
| 10. | ஒழுக்கமுடையார் மாண்பு | ... | ... | 50 |
| 11. | அத்துவா மார்க்கம் | ... | ... | 53 |
| 12. | குருவின் பெருமை | ... | ... | 66 |
| 13. | நான் கண்ட காட்சி | ... | ... | 69 |
| 14. | எப்போதோ முடிந்த காரியம் | ... | ... | 72 |
| 15. | சிவதொண்டு | ... | ... | 75 |
| 16. | தியானம் | ... | ... | 80 |
| 17. | திருவாசகத்திற் சில பாடச் சிதைவு | | ... | 89 |
| 18. | மனிதனும் மகானும் | ... | ... | 95 |
| 19. | குருபரன் திருமொழிகள் | ... | ... | 98 |

# 1. சமயம் முளைக்கும் முறை

பல்வேறு சமயங்களும் கிரியாமுறைகளில் தம்முள் எத்துணை வேற்றுமைப்படினும் அவற்றிற்கிடையே பல ஒற்றுமைகளும் உள. அவற்றின் வேற்றுமைக்குள்ளும் யாம் ஒற்றுமையைக் காணுதல் சாலும். மலையொன்றையும் நதியொன்றையும் ஒப்புநோக்குவோமாயின், அவற்றிற்கிடையே ஒற்றுமை காண்டல் அரிது. ஆயின், ஒரு நதியை மற்றொரு நதியோடு ஒப்பிடுமிடத்து, அவ்விரண்டனுக்குமிடையே உள்ள ஒற்றுமைகள் இவையிவை என்று கூறுதல் சாலுமன்றோ? அவ்வாறே சமயங்களுக்கிடையே ஒற்றுமை காணலுமாம். என்னை? அவை அடிப்படையில் ஒருதன்மைய வாகலின், அவை ஆன்ம வர்க்கங்களின் வெவ்வேறு நிலைகளைக் குறிக்கின்றன எனினும் ஆம். எனவே, அவை ஒவ்வொன்றும் தத்தமிடத்தில் உபயோக முள்ளவையேயாம், அனைத்துச் சமயங்களும் உலகில் ஆன்ம ஈடேற்றத்துக்கு ஆக்கந் தருவனவேயாம்.

எந்தச் சமயத்தையும் இழித்துக் கூறுதல் எமது நோக்கமன்று. சமயங்களெல்லாந் தத்தம் இயல்பின் எவ்வாறு ஆன்ம ஈடேற்றத்திற்கு உதவியாயின என்பதே ஈண்டு ஆராயப்படுவதாகும். இறைவன் ஒருவனே. அவனே தனித்தனி அறுவகைப்பட்ட புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என்னுஞ் சமயங்களில் நிற்போர்க்கும் அவ்வச் சமயத்தவர் கொண்ட முதற்பொருளாய் நிற்பன்; வெவ்வேறு சமயத்தினர் கொண்ட வெவ்வேறு இலக்கணத்தனும் நிற்பன்; வேதாகமங்களின் கருத்துக்கு அப்பாற் பட்டவனும் நிற்பன்; அறிவினுக் கறிவாகியும் நிற்பன்; அவ்வறிவின்கண் வியாபக அறிவைப் பயப்பிக்கும் சக்தியாயுஞ் சிவமாயும் நிற்பன்; எங்கும் செறிவு ஒழியாது நிற்பன். இதனை,

> "அறுவகைச் சமயத் தோர்க்கு மவ்வவர் பொருளாய் வேறுங்
> குறியது வுடைத்தாய் வேதா கமங்களின் குறியி றந்தங்
> கறிவினி லருளான் மன்னி யம்மையோ டப்ப னாகிச்
> செறிவழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்"

என்னுஞ் சிவஞான சித்தியார்ச் செய்யுளாலுணர்க.

சிவசமய நூல்கள் கூறும் அறுவகைச் சமயங்களே யன்றி, உலகிலுள்ள எல்லாச் சமயங்களையும் ஒருங்கு நோக்குவோமாயின்,

அவை சிறப்பாக நான்கு பிரிவுக்குள் அடங்கும். அவற்றுள் ஒரு பிரிவு அச்சத்தை விளைப்பதாகவும், மற்றென்று மண்ணுலக விண் ணுலக இன்பங்களைப் பெறுவான் கைம்மாறு கருதும் அன்பை விளைப்பதாகவும், பிறிதொன்று கைம்மாறு கருதாத தூய அன்பை விளைப்பதாகவும், நான்காவதொன்று ஞானமே அல்லது அறிவே முடிந்த முடிபு என்று போதித்து அதனையே வளர்ப்பதாகவும் இருக்கக் காணலாம். ஆயின், இப் பிரிவெல்லாம் தெளிவாக இன்னின்ன சமயத்திற்குத் தான் உண்டு என்று யாம் அறுதி யிட்டுக் கூற முன்வரவில்லை. ஆயின், பொதுவாக நோக்குமிடத்து, மேற்குறித்த சமயங்களுள் ஒரு பிரிவில் அச்சமே விஞ்சி நிற்கும்; மற்றென்றில் அன்பே விஞ்சி நிற்கும்; பிறிதொன்றில் அறிவே விஞ்சி நிற்கும்; அம் முறைபற்றியே அவை நான்கு பெரும் பிரிவு களுள் அடங்கும் என்க. ஆயின், பெரும்பாலான சமயங்களுள் வெவ்வேறு அளவுக்கு இக்குணங்களனைத்தும் ஒருங்கே அமைந் திருத்தலைக் காணலாம்.

இவற்றுள் இரண்டாவது பிரிவே பெரும்பாலோராற் சமயமா கக் கருதப்படுகின்றது. முறையே இரண்டாம் மூன்றாம் பிரிவுகளிற் கூறப்படும் கைம்மாறு கருதும் அன்பும் கைம்மாறு கருதாத அன் பும் தனித்தனி சகோதரர் அல்லது மக்கட்டொகுதியார் மாட்டுக் கொள்ளும் அன்பென்றும் தந்தை அல்லது கடவுள்மீது கொள்ளும் அன்பென்றும் இரு பிரிவின. பௌத்தமதம் கடவுண்மீது வைக்கும் அன்பினும் மக்கண்மீது வைக்கும் அன்பையே அதிகமாக வற் புறுத்துவதாகத் தெரிகிறது. கிறீஸ்து மதத்திலோ இவ் விரண்டுக்கு மிடையே ஒரு சமநிறை இருத்தலைக் காணலாம். பொதுவாகச் சைவர்களுள்ளும் இந்நிலை இருத்தலைக் காணலாம். ''ஆங்கிலேயர் களே! செங்போல்ஸ் கதீட்ரலுக்குப் பின் எத்தனை கதீட்ரல்களை நீங்கள் கட்டியிருக்கிறீர்கள்?'' என்று றஸ்கின் என்னும் ஆங்கில அறிஞர் வினவுகின்றார். கிறீஸ்தவ நாட்டிற் பழங்காலத்திற் கட்டப் பெற்ற சத்திரங்களையும் கட்டிடங்களையும் பற்றி யாம் நூல்கள் வாயிலாக அறிகின்றோமல்லவோ? எம் நாட்டிலும் இந்தியாவிலும் உள்ள சத்திரங்களும் சாவடிகளும் இதற்குச் சான்று பகரும். இதுவேயுமன்றி உணவருந்துதற்கு முன், காக்கைக்கு உணவளித் தல், பசுவைத் தெய்வஅம்சம் பொருந்தியதாகக் கொண்டு ஓம்புதல் முதலியவையுங் காண்க. அன்றியும் எம் சமய நூல்களில் அறம் வலியுறுத்தப்பட்டிருக்கும் முறையையும் நோக்குக. அந்தணச் செல்வராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளை இறைவன் மானுடச் சட்டை சாத்தி வந்து ஆட்கொண்டருளினர் என்றும் வணிககுல திலகமாகிய காரைக்காலம்மையார்க்குச் சிவபிரான் மாங்கனியைக் கொடுத்து மறுமையின்பத்தைத் தரவல்ல ஞானத்தையும் உடனளித்தார் என்றும்

கூறப்படுஞ் சரிதங்களும் சிவதொண்டர்கள், ஞானிகள், பெரியோர் கள் ஆதியோரின் சரிதங்களும் பிறவும் சைவமக்கள் மக்கள்மீதும் மாக்கள்மீதும், கடவுள்மீதும் அன்புவைக்க வேண்டுமென்பதை வற்புறுத்துவன வல்லவோ?.

ஈண்டு எடுத்துக்காட்டிய நான்கு பிரிவுகளுள் முதற்கணுள்ள பிரிவிற் கூறப்படும் அச்சமே சகல சமயங்களுக்கும் ஆரம்ப ஸ்தானமாகும். மின்னலும் இடியும், விண்ணின் விரிவும், உடுக்களும், நாஸ்திகரைத் தானும் கடவுட்பயங் கொள்ளுமாறு செய்யவல்ல கொடிய நள்ளிரவின் தனிமையும், பாதியிரவிற் பயத்தை விளைக்கும் நீரொலியோடு கூடிய மதகும், அக்கினிமலையும் கெந்தகச் சுவாலையும் நிரம்பியதாகக் கூறப்படும் நரகமும், இறந்தவரது ஆவேசங்கள் கால்நிலந் தோயாமற் காற்றிற் பறப்பதாகவும் இராப்போழ்திற் கதவிற் புடைப்பதாகவும் கூறப்படும் கதைகளும், மலைபோன்ற புயமும் இருள்போன்ற நிறமும் நீண்ட மீசையும் நெறித்த புருவமும் கோரப் பற்களும் அக்கினி காலும் நோக்கு முடையவனுகிய எமன் என்பான் நரக உலகில் வீற்றிருக்கின்றான் என்றும் அவன் பக்கத்தில் மகன் அன்றன்று செய்யுங் நன்மை தீமைகளைச் சித்திர குப்தன் என்பான் கணக்கெழுதிக் கொண்டிருக்கின்றானென்றும், பொறாமை, செருக்கு சுயநலம், தீமை ஆதியவற்றிற்கேற்ற கொடிய தண்டனைகளை இயமன் விதிக்கின்றான் என்றும் கூறப்படுவனவும் ஆகிய இவை யெல்லாம் ஒருங்குசேர்ந்து ஏழை மகனை இறைவனையே புகலிட மாகக் கொள்ளுமாறு செய்கின்றன. கொலை செய்ய உன்னுவோ னுக்கும் கத்தியை ஓச்சுமாறு தூண்டிய நரம்பு அதே சமயத்தில் அச்சத்தாற் படபடக்கின்றது. இந்த அச்சமே எல்லா அறிவுக்கும் ஆரம்ப ஸ்தானமாகின்றது. மகனை எள்ளளவும் பொருட்படுத்தா மல் நதி பாய்கின்றது. தீ சுழித்து ஓங்கி எரிகின்றது. அஃது எங்கிருந்து வந்தது என்பதை மகன் அறியான். நல்ல வளனோடு கூடிய நகர்களைப் பூகம்பங்கள் பொடிபடுத்துகின்றன; எத்தனையோ ஆண்டுகளாக மகன் அருமையிற் சேகரித்தவற்றையெல்லாம் எரிமலைகள் இம்மென்னு முன்னே அழித்தொழிக்கின்றன. மகன் அஞ்சுகின்றான்; நடுங்குகின்றான்; "ஆம். எங்கும் நிறைந்த கடவுள் ஒருவர் இருத்தல் வேண்டு" மென்று தன்னுட் சொல்லிக்கொள் கின்றான். தீயை ஸ்தோத்திரிக்கிறான். நீரைப் போற்றுகிறான்; வளியை வழுத்துகின்றான், வெளியைத் துதிக்கின்றான். இவ்வாறே அவனது வழிபாடு ஆரம்பமாகின்றது.

முதலில் அச்சமாக இருந்தது. பின்னனர் அன்பாக - பக்தி யாக - மாறுகின்றது. பக்தி முதலிற் சுயநலங் கருதியதாக இருக்

கின்றது உதாரணமாக, அச்சத்தால் இறைவனைச் சரணடையும் ஒருவன் தனது பாதுகாப்புக்காகவும் தன் பகைவரை அடக்குவதற்காகவும் இறைவனைத் தோத்திரிக்கின்ருன். "இறைவா! எத்துணைக் காலத்துக்கு இத்தீயவர்கள் அநியாயஞ் செய்யப் போகின்றனர்! கடவுளே! அவர்கள் இறந்துபடக் கடவது" என்று வேண்டுகின்ருன். ஆயின் பழிக்குப்பழி செய்தல் "தீயகருமம்" என்றும், அது பின்னர்த் தன்னையே வந்து சூழ்கின்றதென்றும் அவன் அறிகின்ருன், எனவே, அது கைவிடப்படுகின்றது. தன் பகைவனைத் தண்டிக்க வேண்டுமென்று பிரார்த்தித்த அவனே பின் அவனை மன்னிக்க வேண்டுமென்றும் கடவுளைப் பிரார்த்திக்கத் தலைப்படுகின்ருன். கடவுளை வழிபடுவோரில் பாதிக்குமேற்பட்டோர் கடவுளோடு பண்ட மாற்றுச் செய்வோரே யாவர். மாணவனொருவன் தான் பரீகைஷயிற் சித்தி பெறுவதற்காகப் பிள்ளையாருக்குத் தேங்காயடிக்கின்ருன். மகனது வருத்தம் நீக்குதற்காகத் தாய் அம்மன் கோவிலுக்கு நேர்த்திக்கடன் செய்கின்ருள். கடவுளின் உண்மைத் தன்மையை ஒரு சிறிது உணர்ந்தாலுங் கூட இத்தகைய பண்டமாற்றுக்கள் ஒழிந்து விடுகின்றன.

சமயத்தின் மூன்ருவது பகுதி தூய அன்பாகும். கடவுளின் பேரருட்டிறத்தை உணர்தலால் உண்டாம் இன்பத்தைத் துய்த்தலால் இந்த அன்பு வளரப் பெறுகின்றது. மக்களிற் பெரும்பாலார் விக்கிரக ஆராதனை புரிபவரே யாவர். நம் நோக்குப் புறத்தே செல்லும் இயல்பினது. அதனை அகநோக்காக்குதற்குப் பிரயத்தனம் வேண்டும். குணுதீதராகிய கடவுளை அவரது அருவநிலையில் அறியும் அநுபூதி பெறும்வரை ஒருவன் சமயங்களையும் அவை கூறும் கடவுளிலக்கணங்களையும் விக்கிரகாராதனை முதலியவற்றையும் புறக்கணிக்க முடியாது," என்று ஒரு பெரியார் கூறுவாரரயினர்.

**"சொல்லினுஞ் சொல்லின் முடிவிலும் வேதச் சுருதியிலும்**
**அல்லிலு மாசற்ற வாகாயந் தன்னிலு மாய்ந்துவிட்டோர்**
**இல்லிலு மன்ப ரிடத்திலு மீச னிருக்குமிடங்**
**கல்லிலுஞ் செம்பிலுமோ விருப்ப னெங்கள் கண்ணுதலே"**

என்று பாடிய பட்டினத்துப் பிள்ளையாரே பிறிதோரிடத்து நடராசப் பெருமானது சிவந்த சடாமுடியையும் அபயகரத்தையும் நெற்றிக் கண்ணையுந் துதிக்கின்ருர். மற்ருேரிடத்து "ஆற்ருேடு தும்பை யணிந்தாடுமம்பல வாணர்தமைப் போற்ருதவர்க் கடையாள முண்டோ?" என்றும் கூறுகின்ருர். பக்தர்கள் பல்வேறு வித

மாகக் கடவுளைப் பாவனை செய்து வணங்குவர். "எந்த எந்த விதமாக மக்கள் என்னை வழிபடுகின்றார்களோ அந்த அந்த வடிவமாக யான் அவர்களுக்குக் காட்சியளிப்பேன்" என்பது கண்ணபிரான் வாக்கு. "யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகன்றானே வருவன்" என்ற வாக்கையும் நோக்குக. கடவுளைக் குழந்தை வடிவாகப் பாவித்துத் தொட்டிலில் இட்டு ஆட்டி மகிழ்ந்த பக்தர்களும் இருந்திருக்கின்றனர். வெங்கடேசப் பெருமாளையன்றி வேறொருவரையும் மணஞ் செய்வதில்லையென்று வைராக்கியம் பூண்டிருந்த பிராமணப் பெண்ணும் ஒருவர் இருந்தார் என்று அறிகின்றோ மல்லவோ? அந்தப் பக்தையின் கனவில் மாதவன் தோன்றி அவளை மணஞ்செய்து கொண்டார். அந்தப் பக்தை வசித்த இடமாகிய ஸ்ரீ வில்லி புத்தூரில் அப்பெண்ணின் சந்ததியார் வீட்டுக்கு வெங்கடேசப் பெருமாள் மணமகனாகப் போய் ஸ்ரீதனமும் பெற்றுத் திரும்பும் விழா இன்றும் நடைபெற்று வருகின்றது. திருவிடை மருதூரில் சிவபிரான் திருச்சந்நிதானத்திற்குச் செல்லும் பக்தர்கள் மிதித்துச் செல்லக் கூடியதாகத் தாம் இறந்தபின் தமது தலையோடு அங்கு கிடத்தல் வேண்டும் என்று வரகுண தேவராகிய அரசர்பிரான் இரந்தார் என்று அறிகின்றோ மல்லவோ? நம் சமயாசாரியருள் ஒருவர் இறைவனைத் தோழனாகக் கண்டார். மற்றொருவர் ஆண்டானாகக் கொண்டார். ஆகவே, அன்பு பலவகை வடிவங்களைப் பெறும் என்பது கண்டாம்.

பல்வேறு வடிவங்களைத் தாங்கினும் அன்பு ஒன்றேயாம். பக்தனது கண்களில் அனைத்தும் இறைவன் மயமாகவே தோன்றும். காக்கையும் கடவுள்தான்; மாலைநேரத்தில் மேலைத்திசையில் வீழும் ஞாயிறும் கடவுள்தான்; மரக்கொம்பரில் வதிந்து மருவி விளையாடும் மழலை மொழிக் கிள்ளைகளும் கடவுள்தான். தடாகங்களிலுள்ள மலர்களிற் படிந்து இசை மிழற்றும் வண்டினங்களும் கடவுள்தான். அனைத்துலகும் கடவுளேயாம். பத்தியின் மந்திர வலியாற் பக்தனுக்கு உலகனைத்தும் இறைவன் மயமாகவே தோற்றுகின்றது. இத்தகைய அன்பு ஆசைகளைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்தத் தக்கதன்று. என்னை? அதன் இயல்பே துறவாகு மாகலின்.

இந்த நிலையிற் பக்தன் கடவுளை அழைத்தற்குத் தந்தை, தாய், தாரம், மகவு, தமர் என்னுஞ் சொற்கள் போதாமையை உணர்கின்றான். அக்கடவுளோடு இரண்டறக் கலத்தலையே அவாவுகின்றான். அன்பேவடிவமாக - சிவவடிவமாக - விரும்புகின்றான்.

ஈண்டு அன்பு ஒளிமயமாகின்றது. இஃது ஒப்புயர்வற்ற அறிவை அளிக்கின்றது. அவன் பரம ஞானியாகின்றான் என்பர் பெரியோர். ஞானியே மற்றெவரினும் பார்க்கக் கடவுளை அறிந்தோனுவன். அத்தகைய மகா ஞானிகள் இருக்கும் இடந்தானும் பரிசுத்த மடை கின்றது. அத்தகையோரே உலகுக்குப் பரமோபகாரம் புரிபவர். ஓர் ஆன்மாவை மலவிருளின்றுங் கைதூக்கிக் காத்துவிடுதல் உலகம் முழுவதையும் வீழவிடாமற் கைதூக்கிக் காத்து வைப்பது போலாம். இத்தகைய ஞானிகள் தமது தொடர்பினல் எத்தனைபேரை நல்வழிப் படுத்துகின்றனர். எத்தனைபேரைக் கைதூக்கி விடுகின்றனர், ஞானியின் உள்ளத் தாமரைக்குள் உலகமுழுதும் அடங்குகின்றது. இந்த நிலையையே பெரியோர்கள் இறைவன்பால் வேண்டி நின்றனர்.

''குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே''

என்றார் மணிவாசகப் பெருமானும். சைவ சமயத்தில் இங்குக் கூறப்பட்ட பல்வேறு நிலைகளும் அடங்கும். பயத்தால் வழி படும் நிலையும் ஒன்றுண்டு. அன்பால் வழிபடும் நிலையும் ஒன்றுண்டு. உண்மை ஒளியாற் கண்டு வழிபடுதலும் உண்டு. மெய்யுணர்ச்சியால் உண்டாம் அநுபவத்தால் வழிபடுதலும் உண்டு. இவையெல்லாம் ஒன்றற்கொன்று சோபான முறையாகப் பொருந்தியிருத்தலுங் காண்க. இதனாலேயே சிவமதம் எல்லோரையும் தழீஇ நிற்கின்றது. எல்லாக் கொள்கையினரையும் தன்னுள் அடக்கிக் கொண்டும் நிற்கின்றது. எல்லோர்க்கும் அவரவர்க்குரிய இடத்தை அளித்தும் நிற்கின்றது. எனவே, சமயம் முளைக்கும் முறையும் வளரும் முறையும் ஒரு சிறிது கண்டாம். சைவசமயம் முதனின்று கடைசிவரை கடவுளை அடைதற்குரிய முறையிலேயே அமைந்திருக்கின்றது. மேற்கூறிய நிலைகள் ஒவ்வொன்றும் சோபான முறையானே மக்களைக் கடவுள்பாற் கொடுசென் றுய்க்கின்றவையே யாம் என அறிக.



# 2. சைவ வாழ்வு

உயிர்க்குள்ள இயற்கைக் குணங்களுள் துணை வேண்டி நிற்றலுமொன்று. உண்மைத் துணையாம் பொருளை உணர்ந்து அதன் தலைமைக்கீழ் வாழ்க்கை நடத்துஞ் சிறப்பியல்பு மக்களை ஏனைய உயிர்களினின்றும் உயரச்செய்கின்றது. அவ்வுணர்வும் வாழ்வுமே சமயமாகின்றன. அத்துணையையே கடவுள் என்னுஞ் செஞ்சொல்லாற் குறிக்கிறோம்.

சிறப்புடைமகன் சிவம் என்னுஞ் செம்பொருளின் தலைமைக் கீழ் ஒழுகும் செம்மை யொழுக்கமே சைவவாழ்வு எனப்படும். உண்மை, வாய்மை, மெய்ம்மையென, செம்மை முத்திறப்படும். உள்ளத்தின் நன்மை உண்மை. சொல்லின் நன்மை வாய்மை. செயலின் நன்மை மெய்ம்மை. அன்பு, எண்ணத் தூய்மை, நிறைவு என்பன உண்மையின் உறுப்புக்கள். இறைவனிடத்து ஊறி நிறையுங் காதலும் உயிர்களிடத்து உள்ளுடைந்தோடுமருளும் பொறையும் பணிவும் அன்பின்பாற்படுவன. கேட்டற்கினிதாதலும் உறுதிபயத்தலுமுடைய சொல்லையே யாண்டுங் கூறுதல் வாய்மை. கரத்தலும் தீங்குவிளைத்தலுமின்றிப் பிறவுயிர்க்கு நலமேபயக்குஞ் செயல்களைச் செய்தலு முடற்கண் நோயும் அழுக்கு மின்றியிருத்தலும் மெய்ம்மை. செம்மை யொழுக்கமே அழகு வாழ்வு. செம்மைக்கண் அன்புக்குத் தனிச்சிறப்புண்டு.

பல்வேறு சமயங்களும் தரும் இன்பநிலையினையும் அவ்வின்பத்தை யடையும் வழியின் திண்மையையுங் கொண்டே அவற்றின் உயர்வு தாழ்வுகள் அளக்கப்படுகின்றன. எனினும், அறிவுடை மக்கள் கொண்டொழுகுஞ் சமயங்களெல்லாம் ஒரே இயல்பினவாய உயர்ந்த அடிநிலைகளிற்றான் நிற்கின்றன. அருளுடைமை, கொல்லாமை, வாய்மை முதலா முயர்குணங்கள் உயர்ந்த சமயங்கள் பலவற்றைத் தாங்கி நிற்கின்றன. மக்களுடைய அறிவாற்றல்கள் எப்போதும் பலதிறப்பட்டே யிருப்பனவாகலின் அவராற் கொள்ளப்படுஞ் சமயங்களும் பலதிறப்படுதலியல்பே. சைவம் அச்சமயங்களையெல்லாந் தழுவிக்கொண்டு தலைமையெய்தி நிற்கின்றது.

சமயவாழ்வுடையவன் இடையீடில்லாத உயர்ந்த இன்பத்தை யுடையனுதலோடு தன்னுயிரையும் உயர்த்திச் செல்கிறுன். இந்த இன்பத்தையுந் திருத்தத்தையும் அவன் அயலாரிடத்தும் நிகழ்த்துகிறுன். அவன் இறைவனை இருவழியாகத் தழுவுகிறுன்; ஒன்று

தானும் பிறவுயிர்களும் நல்வழிப்பட்டு அத்தலைவனிடத்தே அன்பு சிறந்து நிற்க வேண்டுமென்று இரந்து நிற்றல்; மற்றையது, அத்தலைவன் தனக்கும் மற்றெல்லாவுயிர்க்கும் வேண்டிய யாவற்றையும் இயல்பாகவே தந்து நிற்கும் பேரருள் கண்டு அவனிடத்தே காதல் சிறந்து மனமுருகி நிற்றல். சமயங்கலவாத வாழ்வு துன்பமயமானது. கடவுள் அருளுவான் என்னும் மனவுறுதி யொன்றே வாழ்க்கையின் இன்னல்களைப் போக்கிவிடும். 'என்னுடைய தவறுகளையும் துன்பங்களையும் இடையூறுகளையும் என்னிறைவன் நீக்குவான்; யான்வேண்டிய நிலையையடைய என்னால் முடியும்; எனக்குத் தீங்கிழைக்க ஒருவராலும் முடியாது' என்றெண்ணும்போது சமயவாழ்வுடையவனுள்ளம் இறைவனடிக்கீழ் இறுமாந்து நிற்குமன்றோ? ஏனையோர்க்குச் சிறுசெயலாகவும் வெறு வினையாகவுந் தெரிவனவற்றிலும் இறைவன் நின்று தனக்குத் துணை செய்வதாக அவனுணருகிறான்; ஞாயிற்றின் வெங்கதிர்கள் உடலுள் நுழையும்போது இறைவனின் திருவருட்கதிரே தன்னுட்புகுவதாக உணருகிறான். சமயக்கொள்கையற்றவன் இறைவனுண்மையையும் ஒப்புக்கொள்ளாது அவன் தனக்களித்திருக்குந் தலைமையையுமுணராது தன்மயக்கவுணர்வுக்குப் புலனாகும் பிறபோலியேதுக்களையே உலக நிகழ்ச்சிக்குக் காரணமாகக்கொண்டு தாழ்வடைந்து வறுமையெய்தி நிற்கிறான். சமயி துன்பங்களினூடேயும் இன்பத்தைக் காணுமறிவை வளர்க்கிறான். இயற்கைக் காட்சிகளினிடையே இறைவனின் அழகையும் அருளையும் பெருமையையுங் கண்டு இன்புறுகிறான். அக்காட்சி அவ்விறைவனிடத்தே காதலை மிகுவித்து நலந்தருகிறது. துன்பப்பட்டுக்கொண்டிருப்பவன் இறைவனை இகழ்ந்து வெறுத்தவனுவன். உண்மையான சமயக்கல்வியை நூல்களாலடையமுடியாது. சமயவாழ்வு நடத்தும்போதுதான் அதனைப்பெறலாம்.

மெய்யறிவு உண்மையழகை நுகர, அழகினுள் உயிராய்நிற்குமிறைவனை நல்லுயிர் தழுவும்போது பேரின்பம் பிறக்கிறது. அழகு இருவகைத்து; உண்மை உள்ளழகு; அதன் புறத்தோற்றம் வெளியழகு. அன்பு, நீதி, ஊக்கம், நிறைவு, பிறர்நலவேட்கை, மெய்ம்மை முதலிய குணங்கள் உள்ளத்திலுள்ள அழகான ஓவியங்கள். மெய்யறிவு அவற்றைப் புலனாக்கும் ஒளி. உடலும் சொல்லும் செயலும் உள்ளழகை உட்கொண்டிருக்கும் பளிங்கு அல்லது கண்ணாடிகள். நன்மகனிடத்தே இம்மூன்றினூடாகவும் அவனுள்ளழகைக் கண்டு நுகர்ந்து நாம் இன்புறுகிறோம். இன்னும் மேலே சென்றால்,

மெய்யறிவல்ல, இறைவனென்னும் ஒளிவளர்விளக்கே உள்ளத்து நின்றொளிர அக்குணங்கள் பேரழகுடன் பொலிகின்றன எனல் வேண்டும். அப்போது அவை தம்மை யுடையானையும் பிறரையும் ஒருங்கு இன்புறுத்துகின்றன.

இனி, உள்ளழகு இறைவன்; வெளியழகு உலகம். சைவன் இறைவனுக்குப் பின்புறத்தே அவனுக்கூடாக உலகைக்காண்பான். அப்போது அவனுக்கு உலகமுழுதும் அழகுமயமாயிருக்கும். அவன் பசிய வெளிகளிலே மாலைக்காலத்து நின்று இவ்வுலகே பொன்னுலகாகத் தானும் சிறிதுநேரம் கடவுளரிலொருவனுவதாக உணருகிறன். 'சிறிதுமுன் வற்கென்றிருந்த அந்த முல்லைப்போது கட்டுவிட்டு விடு தலையடைந்து மணம் நிறைந்து தூய்மையேயாகி மலர்கின்றதே! அதன் மலர்ச்சி அந்திவானின் தோற்றமறைவுபோல விரைவாகவும் கட்புலனுகாதும் நிகழ்கின்றதன்றே? என் தலைவனே மறைந்துநின்று இதனைச் செய்கிறன்' என்று பெருமையும் அத்தலைவனிடத்து வேட்கையுமிக்கு நிற்கிறன். இப்போது எளியவாழ்வினனுய அவனுள்ளமும் அம்முல்லை மலர்போல மலர்கின்றதன்றே? ஒன்றுக்கொன்று பொருத்தமுண்மைதான் அழகு. இதற்கிது பொருத்தமில்லையென்று நாம் கூறுந்தறைபாடு இயற்கையிலில்லை. இறைவன் நாம் நுகருமாறளித்த அழகு இயற்கைத் தோற்றங்களிலும் வல்லவனது நல்லிசையிலும் குழந்தைகளதும் மழலையிலு மகளிரது இளமை வனப்பிலும் நின்றுவிடவில்லை. நம்முடைய சூழ்ச்சிகளையெல்லாங் கடந்து துன்பம் அடுக்கிவந்து நம்மை நெருக்கும்போதும் அழகு விளங்குகிறது. தன்னைமுழுதும் மறந்து ஒருவன் சினமுதலியவற்றல் விழுங்கப்பட்டிருக்கும் நிலையிலும் அழகு பொலிகிறது.

அழகனுகிய இறைவன் எங்கும் நிறைந்திருக்கும்போது எங்கும் அழகு புலப்படவேண்டியதே. சைவனது அழகிய உள்ளம் எங்கும் அழகை நுகர்ந்து இன்புறுகின்றது. அவனே உள்ளழகன். அழகே கடவுள் நமக்கு நேர்நிற்குமிடம்; அழகே கடவுள்.

அழகும் இன்பமும் அறிவுநிலைக்கேற்ப வேறுபடுவன. அறிவுடைய மகனுக்கின்பமாவன ஈத்துவக்கு மின்பம், பிறர்மிகைபொறுத் தெய்துமின்பம், பிறவுயிர்க்காகத் தன்னலங் கெடுத்துணருமின்பம், புலனடக்கி வெற்றிபெறுமின்பம், மேலான தலைவனை நினைவுகூர்ந் துறுமின்பமென்றற் ரெடக்கத்தவே. சிலர் கூறுமாறு ஐம்புலவேட் கையை நிறைப்பதும் கல்வியும் பிறவும் மக்கட்கியல்பா யமைந்தன வாதலின் வேண்டப்படுவனே என்று கொள்ளுதல் தவறு. அவ்

வின்பங்கள் அறிவிற்குறைந்த விலங்குகட்கே ஏற்றன. சைவனுக்குப் புலனடக்கம் மிகவேண்டப்படுவதொன்று. அவன் பிறவுயிர்களின் நலத்துக்காகவே உடலோம்புதலும் இல்வாழ்தலுஞ் செய்வான்.

சிவம் என்பது எல்லாநலத்தையுங் குறித்து நிற்பதொரு கடவுட்சொல். எனவே, சைவர் என்னும்போது அவர் எல்லா நலமுடையராதல் வேண்டுமென்பது பெறப்படும். நலமென்பது அறிவு குணஞ் செயல்களது நலத்தையும் உடல் நலத்தையுமல்லது உலக நலத்தையன்று. உயர்ச்சியும் ஒரு நலம்; சைவர் தமது நிலையிலிருந்து உயர்ந்துஞ் செல்லவேண்டும். கடவுள், சிவம், அழகு என்பன தமிழ்த்தாயின் மூன்று செல்வங்கள்.

தம்முள் ஒழுக்க நெறி வெவ்வேருக இருந்தபோதும் ஒரே சமயத்தவரென்று கூறப்படுவாருட் பூசல் விளைவதில்லை. சைவத்துட் பல சமயங்கள் அடங்கியிருத்தல் போலச் சைவரெனப் படுவாருட் பிறசமயத்தவர் பலர் இருக்கிருர்கள். கொள்கையும் ஒழுக்கமுமே சமயம்; ஒரு பெயரின் கீழ் நிற்குஞ் சமயக்கூட்டத்தினருட் பிற சமய ஒழுக்கமுடையாரிருத்தலியல்பே. அவ்வாருகவும், சமயத்தின் பெயர் வேறுபாடுகொண்டு பூசல் விளைப்பதற்கு ஒருவகை மயக்கவுணர்வே காரணமாமன்ரே? வாழ்நாளின் ஒவ்வொரு சிறியபகுதியும் உயிர்களுக்குத் தொண்டுசெய்யவும் தன்னை வழிபடவும் பயன்பட வேண்டுமென்பதல்லது சமயப்பூசல் விளைத்துக் காலங்கழிக்க வேண்டுமென்பது இறைவன் குறிப்பன்று. அவ்வாறு செய்பவன் தன்சமய விதியினின்றும் விலகினவனுவான்.

சைவாசார விதிகள் ஆழ்ந்த கருத்துடையவை அறிவியல் நூற்புலவராற் பாராட்டப்படுபவை. அவ்விதிகளின் கருத்துக்கள் அறியப்படாவழி அவற்றின் வழியொழுகுதலும் பயன் பெறுதலும் நன்கு கைகூடா. ஆராய்ச்சியின்றி ஒப்புக்கொள்ளும் வழக்கமுங் குறைகிறது. உள்ளுணர்வற்ற ஆசாரம் சமயத்தைப் பொருளற்றதாக்கித் தாழ்வுறுத்தும். ஆதலின், சமய விதிகளின் கருத்துக்களைப் பலருமறியுமாறு வெளிப்படுத்த வேண்டும். காலநிலைக்கேற்ப ஆக்கப்பட்டனவாய், இப்போது இயைபின்றிநிற்கும் விதிகளை ஆராய்ந்து ஒழித்தல் வேண்டும். அவ்வாறே, புதியவிதிகளை ஆக்கவும் வேண்டும். எளியவாழ்வு சமயச்சட்டமாக வலியுறுத்தப்படவேண்டும்.

மெய்கண்டநூல்கள் செவ்விய இயற்றமிழுரை நடையிலெழுதப்பட்டு இளஞ்சிருர்க்குச் சிறப்பாக அறிவுறுத்தப்பட வேண்டும். சிறுவன் கட்டாயப் படிப்பினின்று விடுதலை யடையும்போது, எழுதவும் வாசிக்கவும் ஆற்றலடைந்திருப்பது போலச் சைவத்தைப்

பற்றித் திருத்தமானதும் பொதுவானதுமான விளக்கமுடையவனு யிருத்தலும் வேண்டும். அதற்குமுன்னரே கொல்லாமை, புலாலுண் ணுமை, தூய்மை, ஆலயவழிபாடு, வாய்மை, என்னும் விதிகளில் அவன் பயிற்றப்பட்டிருத்தல் வேண்டும். மாணவரைச் சைவராக்குதற் கென்றே அறிவும் ஆசாரமுமுடைய நல்லாசிரியன்மார் பள்ளிக் கூடங்கடோறும் நியமிக்கப்படல்வேண்டும். பிறமதங்களின் பிழை யற்ற கொள்கைகளைத் தொகுத்துச் சைவத்தின் புறநூல்களாகத் தழீஇக்கொண்டு அவற்றையும் சிறுவர்க்கு விளக்கவேண்டும். இதனுற் பிறமதத்தினர்க்கும் சைவர்க்கு மிடையே கேண்மை வளரும்.

இறைவனை வேண்டலும் (பிரார்த்தனை) அவனை உள்ளலும் (தியானம்) சமயியின் இருகண்கள். நாடோறும் அருணூல்களில் ஏற்றபகுதிகளை ஓதிவருதல் அவ்விரண்டையும் எளிதாக்கும்; பணி வுள்ளத்தைத் தரும். ஓதமுன்னிருந்த நிலையோடு பின்னைய நிலையை ஒப்பிடின் திருத்தம் வியப்புக்குரியதாயிருக்கும். ஆதலால், அருணூல் களிற் சிறந்த பகுதிகளுக்கு வல்லாரைக்கொண்டு நல்லுரை காண் பித்து வெளிப்படுத்திச் சைவரொவ்வொருவரும் நியமமாகப் பண் ணேடு ஓதச்செய்தல் வேண்டும்.

சைவச்செல்வியைப் பொருந்தா விதிகளாற் சிறைசெய்து கொண்டு சிறப்புச் செய்கிறேமென்றெண்ணுவது தவறு. அவ் விதிச்சிறைநீக்கி அவள் பெருமையை விளக்கி அவள் குறிப்புவழி நின்று தொண்டாற்றுதலே சைவர் அவட்குச் சிறப்புச் செய்யுநெறி. திருமுறைச் செல்வங்களை நல்லுரைவகுத்து உலகுண்ண வழங்கி மெய்கண்ட நூல்களின் விதிக்கமைந்து அவட்குப் பணிசெய்யுமாறு அவ்வுலகை அன்பாற்றமுவி அழைப்பதே அவட்குத் தலைமைவழங்கு முறை. தம்மிற்றாழ்ந்தாரைத் தழுவிக் காப்பதே தலைவர்கடன்; சைவம் அவ்வாறு செய்யும்போது பிறமதங்கள் அதனை மனமுவந்து வழி படத் தவரு. பிறமதங்களோடு தொடர்புபடுத்திப் பேசும்போது மாத்திரம் சைவன் என்னும் பெயரைத் தாங்கிநிற்றல் பொருந்தாது. வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் சைவம் உயிர்நாடியாக ஓடவேண்டும். அதுவே சைவவாழ்வு.

# 3. சைவ சித்தாந்தம்

**சை**வசித்தாந்தம் என்பது மும்மொழித்தொடர். அது சைவம் சித்தம் அந்தம் எனப் பகுக்கப்படும். சைவம் என்பதற்குச் சிவசம் பந்தமுள்ளது என்பது பொருள். அது ஈண்டுச் சிவபெருமானே மெய்ப்பொருளாகிய பதியெனக் கொண்டு வழிபட்டொழுகும் சமயத்தை யுணர்த்தி நின்றது. சித்தம் என்பதற்கும் அந்தம் என்பதற்கும் முறையே முடிந்தது என்றும் முடிபு என்றும் பொருளாம். எனவே சைவசித்தாந்தம் என்பதற்குச் சைவசமயத்தின் தீர்க்கமான முடிபு என்பது தெளிபொருளாம். அங்ஙனமாயின் சித்தம் என்ற அளவினமையாது அந்தமென்றுங் கூறியதென்னை யெனின்? அச் சமயமானது, சைவம் பாசுபதம் மாவிரதம் காளமுகம் வாமம் வைரவம் எனப் பலமுடி கோடலின் அவற்றையெல்லாங் கடந்து உன்னதமாய் மீளிர்வது சித்தாந்த சைவமெனப் பெயரிய தாஞென்றுமே யாகலின் என்க.

வேதாந்தமுஞ் சித்தாந்தமும் உண்மையுணர வல்லார்க்கு ஒன்றேயாயினும் அஃதிலார்க்கு வெவ்வேறே என்க. வேதாந்த மதக் கூற்றை யுணர்வோர் ஆராய்ச்சிக் குறைவாற் சித்தாந்திகளையும் சித்தாந்த மதக்கூற்றை யுணர்வோர் ஆராய்ச்சிக் குறைவால் வேதாந்திகளையும் நிந்திக்கிறார்கள். நிந்தனைக்கு எப்போதும் அறிவுக் குறைவே காரணமென்பது வெள்ளிடைமலை. சித்தாந்த சைவசமய பதார்த்தங்களாவன பதி பசு பாசம் எனத் திரவியம் மூன்று. பதி கிருத்தியம் பசுகருமம் பசுபோகம் முத்திசாதனம் முத்தி எனக் கருமம் ஐந்து. பதியாவான் சுவ தந்திரசேதன கருத்தாவாகிச் சகல ஆன்மாக்களையுங் கருணையாற் காப்பான். விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என பசு முத்திறப்படும்; இவர்கள் முறையே ஒரு மலர், இருமலர், மும்மலர் என்றுஞ் சொல்லப்படுவர். ஆணவமல மொன்றுடையவர் விஞ்ஞானகலர்; ஆணவம் கன்மம் என்னு மிரு மலமுடையவர் பிரளயாகலர். ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மல முடையவர் சகலர். அட்டவித்தியேசுரர் முதலாயினோர் விஞ்ஞானகலர். சிறீகண்டேசுவரர் முதலாயினோர் பிரளயாகலர். பிரமா விட்டுணு முதல் எறும்பு ஈறுகவுள்ள ஆன்மாக்களெல்லாஞ் சகலரெனப்படும். பதியாகிய பரமான்மா நித்திய வியாபக சச்சிதானந்தமாய ஒருவனே. பசுக்கள் நித்தியமாய் வியாபகமாய்ப் பாசத்தடையுள்ள சேதனமாயிருக்கும்; அவை அளவிறந்தன. பாசம் நித்தியமாய் வியாபகமாய் அனேக சத்திகளையுடையதாய் அசேத

னமாய் ஒன்றுயிருக்கும், அது ஆணவம் எனப்படும். ஆன்மாக்க ளின் அறிவை மறைத்து அவற்றை அணுத்தன்மையுறச் செய்து நிற்றலால் அது அப்பெயர் புனைவதாயிற்று. பதிகிருத்தியமாவது பதியினுடைய தொழிலாம். அது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என வைந்தாம். பசுகருமமாவது ஆன்மாக் கள் செய்யுந் தொழிலாம்; அது புண்ணியம், பாவம் என இரு வகைப்படும். பசுபோகமாவது ஆன்மாக்கள் தாம் செய்த வினைப் பயன்களை ஏற்றவிதமாகச் சுவர்க்க மத்திய பாதலங்களில் அனு பவித்தலாம். முத்திசாதனமாவது முத்தியைத் தருங் கருவியா யுள்ள சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்குமாம். இவற்றுள் (முறையே) ஒன்றும் இரண்டும் மூன்றும் நான்கும் அநுட் டித்தவர்கள் முறையே சாலோக சாமீப சாரூப சாயுச்சிய முத்திகளைப் பெறுவார்கள். சாயுச்சியமொன்றே. பரமுத்திஅற்றேல் பரமுத்தி யாகிய சாயுச்சியத்திற்கு ஞானமே சாதகமாதலின் நான்கும் என்றது மிகையாம் பிறவெனின், அற்றன்று:- "சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சார்வார்" என்பது ஆகமப் பிரமாணமாகலின். முத்தியாவது அநாதிபெத்தராகிய ஆன்மாக்கள் அநாதி முத்தராகிய பரமேஸ்வரனுடைய திருவருளினலே பாசநீக்க முற்றுப் பரமேஸ்வரனைத் தரிசித்து பரமானந்தத்து அழுந்துதலாம். இதுவே பரமுத்தி. இதற்கு நேர்சாதனம் அடிஞானமே. அது பெறுதற்குச் சரியை கிரியை யோகங்கள் இன்றியமையாச் சாத னங்களாகலின் அவையும் ஒருதலையான் வேண்டப்படுமென்க.

பதியாகிய ஈசுவரன் சர்வஞ்ஞத்துவம், சருவகருத்திருத்து வம், பேரருளுடைமை முதலிய இறைமைக்குணங்களை யுடையராகலின் ஆன்மாக்கட்குக் கன்மத்தைப் புசிப்பித்துப் பாசத்தை யறுத்து முத்தியைக் கொடுக்கத் திருவுளங்கொண்டு "குறித்ததொன்றுக மாட்டாக் குறைவிலனுகலால்" கருணையினலே தாமே பிரமா விட்டுணு முதலிய பஞ்ச கருத்தாவுமாகித் தமது பரிக்கிரக சத்தியாகிய மாயை முதற்காரணத்தினின்றுஞ் சகல அண்ட புவனங்களையுஞ் சிருட்டித்து, ஆதாரமாகிய அவ்வண்ட புவனங்களில் வசித்து வினைப் பயன்களைப் புசித்தும் வினைகளை ஈட்டியும் வருதற்கேதுவாகத் தேவர் மனிதர் முதல் மரம் புல் ஈறுகவுள்ள பல்வகை யோனி பேத சரீரங்களையும் அம்மாயா காரியமாகிய பஞ்சபூதங்களிடமாகக் கொடுத்து, அவ் வான்மாக்களுட் பக்குவமேலீட்டினுலே தேவ மனித சரீரங்களைப் பெற்றவர்கள் செய்வன தவிர்வன வறிந்து உய்தற் பொருட்டுத் தம்முடைய ஈசானமுதலிய ஐந்து திரு முகங்களா

லும் வேத சிவாகமங்களையும் அருளிச் செய்து அவற்றை உரிய பக்குவிகளுக்கு உபதேசித்து மருளினுர். அவ்வேத முதலிய கலை களைக் குருமுகமாக ஓதியுணர்ந்து விதித்தன செய்து விலக்கிய வொழிந்து ஆன்மா சரீரம் என்பவற்றின் நித்தியாநித்தியங்களின் உண்மையுணர்ச்சி வாயிலாக அநித்தியமாகிய சரீராதிகளி னுவர்ப் புத் தோன்றப் பெற்றவர்கட்கு ஈசுவரன் குருவழியாகத் தீக்கை செய்து பாசமறுத்து முத்தியின்பத்தைக் கொடுத்தருளுவர். ஏனை யோர் அப்பக்குவம் வருங்காறுந் திரிலோகங்களினும் வினைக்கீடா கப் பிறந்திறந் துழல்வர். சிவபெருமானுடைய திருவடிக் கலப்பாகிய முத்தியெனுங் கரையைச் சார்தற்கு அப்பெருமானுடைய திருமூல மந்திரமாகிய பஞ்சாக்கரமே வாய்ப்புடைத் தோணியாகுமென்க. பஞ்சாக்கரமாகிய தோணியைக் குருமுகமாகப் பெற்று அதனை யூரும் வகையையுங் குருவருளா னுணர்ந்து ஊரும் மாணவகன் குறித்த முத்தியாகிய கரையைச் சேர்தலில் ஒருபோதுந் தவறுன்.

சிவபெருமான் ஆன்மாக்களை ஈடேற்று நிமித்தமாகச் செய்யும் பஞ்சகிருத்தியமும் இரு திறனுகும், தாமே செய்தலும் அதிட்டித்து நின்று செய்தலுமென. அதிட்டித்து நின்று செய்தல், மற்றொரு வரை நிலைக்களமாகக் கொண்டு நின்று செய்தல். அது உமாபதி சிவத்தை நிலைக்களமாகக் கொண்டு நின்று பெற்றுன் சாம்பானுக் கும், முள்ளிச் செடிக்கும் முத்தி கொடுத்தாற் போல்வது. திருவாத வூரடிகட்கு முத்தி கொடுத்ததோவெனின் அது சிவபெருமான் தானே குருவாய் வந்து தீக்கை செய்து முத்தியருளுதலின் அன்ன தன்றென்க. அதனையும் நன்கு ஆராயின் அதுவும் அதிட்டான வாயிலென்று கோடலே ஆகமநூன் மாறுபாடின்மையாம்; எங்ஙன மெனின்? சிவபெருமான் சுத்த மாயாதத்துவம், அசுத்தமயாதத்து வம், பிரகிருதி மாயாதத்துவமெனத் தத்துவங்களை மூன்று கூறுக் கிச் சுத்தமாயாதத்துவத்துக் கிரியைகளைந்தையும் தாமே செய்த ருளுவார். அங்ஙனம் செய்யும்வழித் தோன்றிய பஞ்சகருத்தாக்க ளும் சிவமேயாகலின் சம்புபட்சம் எனப்படுவர். ஏனையர் அநு பட்சமே. அசுத்தமாயையிற் கிரியைகளைந்தையும் அநந்தேசுவரரை அதிட்டித்து நின்று செய்தருளுவார். பிரகிருதி மாயையெனப்படுங் குணதத்துவக் கிரியைகளைந்தையும் அநந்தேசுவரர் வாயிலாகச் சிறீ கண்ட பரமேசுவரரை யதிட்டித்து நின்று செய்தருளுவார். ஸ்ரீகண் டரும் பிரமாவை யதிட்டித்து நின்று படைத்தலும் விட்டுணுவை யதிட்டித்து நின்று காத்தலும் கால ருத்திரரை யதிட்டித்து நின்று தாமாகவுஞ் சங்கரித்தலைச் செய்தருளுவர். திரோபவ வநுக்கிரகங்

கள் எங்கும் சிவனருட் செயலே. இங்ஙனமாகலின் சிவபெருமானைச் சாதாக்கிய வடிவமாகிய பீடலிங்கவருட்குறியில் மலர் மஞ்சன தூப தீப நைவேத்தியாதி உபகரணங்களை அகம் புறமென்னு மீரிடத்தும் மானத சூக்கும தூலமுறையாகக் கொண்டு எவ்வாறு பூசித்த வழியும் இது குணதத்துவமாகலானும் குணதத்துவம் ஸ்ரீ கண்டர் வழித்தாகலானும் ஸ்ரீ கண்டர் வழியாகவே எமக்குத் திருவருள் புரிவார் என்பது துணிபாயிற்று. ஆகவே திருவாதவூரடிகளும் கயிலைக்கணங்களி லொருவராய்ப் பிரளயாகலரைச் சார்ந்தவராய் முத்திக்கு ஏற்ற பக்குவம் மருவியவழிப் பூமியில் திருவவதாரஞ் செய்திருப்பச் ஸ்ரீ கண்டர் கயிலைக்கணங்கள் தொளாயிரத்துத் தொண்ணூற்றென்பதின்மரோடு மனித குருவடிவாய்த் திருபெருந்துறையில் அவருக்குத் தீக்கைசெய்து ஆட்கொண்டு சிதம்பரத்தில் முத்தி கொடுத்தருளினர். ஈண்டுச் ஸ்ரீ கண்டர் வாயிலாகச் சிவபெருமானே முத்தி கொடுத்தருளினர் என்பது கருதலளவையாற் றுணியக் கிடத்தலின் அதுவும் அதிட்டான வாயிலென்பதே தெளிவு. நாம் பூமியில் வழிபடும் விநாயகர் சுப்பிரமணியர் முதலிய தோற்றங்களெல்லாம் ஸ்ரீ கண்டர் தோற்றமே. மார்க்கண்டேயர் முதலிய முனீந்திரர்கள் சாதாக்கிய வடிவிற் பூசித்த வழியும் வெளிவந்தருளிய மூர்த்தியும் ஸ்ரீ கண்ட சிவனே. இங்கே நாங்கள் படிக்கும் புராண முதலிய நூல்கள் கூறும் பிரம விட்டுணுக்கள் சகல வருக்கத்து ஆன்மாக்களே தபோபலத்தால் தேவ சரீரமும் அதிகாரமும் பெற்றுச் ஸ்ரீகண்ட சிவன் வழி நின்று கிருத்தியங்களை நடத்துகின்றார்கள். ஆன்மாக்கள் பெறும் சாலோக சாமீப சாரூபமாகிய மூன்றும் நிலையுடையனவல்ல; ஆகலின் அவை அபர முத்தியெனப்படும். சாயுச்சிய மொன்றே பரமுத்தி. இதுவே அத்துவிதம் எனப்படும். அத்துவிதம் என்பது ஈண்டு இரண்டன்மை யெனப் பொருள்படும். முத்திநிலையிற் பாசமின்மையிற் சிவத்தோடு ஆன்மா அபின்னமாக நிற்றலின் வேதாந்திகள் இன்மைப்பொருள் கொண்டு ஆன்மாவாகிய வஸ்து ஒன்றேயென்பர். யான் சிவபரம்பொருளின் வேறாகிய வான்மா என்னும் நினைவு நிற்கும்வரையும் ஆன்ம வாசனை நீங்காதாகலின் அவ்வளவும் முத்தி சித்தியாதென்பதே வேதாகம நூல்க ளனைத்திற்குந் துணிபாகலின் அவ்வாசனை யொழிக்கு முபாயமாக அத்துவிதமென்பதற்கு வேதாந்தத்தில் அவ்வாறு பொருள் கொள்ளப்பட்டதேயன்றிப் பிறிதில்லையென்க.

அம்முத்திதான் ஒருவற்கு எக்காலத்து உளதாகுமெனின்? மேற்கூறியவாறு மலவாசனையறுதற்கேற்றவாறு சமாதி கைகூடுங் காலத்து உளதாமென்க. அது தானும் இருவினையொப்பு மலபரி பாகம் சத்திநிபாதம் என்னுமிவை கைகூடுங்காலத்துக் குருவருள் கைகூட அதனுற் சித்திப்பதாகும். அற்றேல் இருவினையொப் பென்பது யாதோவெனின்? பிறவிக்குக் காரணமாகிய நல்வினை தீவினையென்னும் இருவினைப்பயனுந் தராசுகோலின் இரு தட்டுக் களிலினும் வைக்கப்பட்ட சமநிறைப் பொருள் போலத் தம்முளொத்து வருதலென்ப. அஃதாமாறு எங்ஙனமெனிற் காட்டுதும். ஆன்மாக் களை அநாதியே பந்தித்திருக்கும் பாசமறுத்து அவ்வான்மாக்களின் இயற்கை வடிவாகிய மெய்ஞ்ஞான விளக்கத்தை விளங்கச்செய்து சிவானந்தானுபவமாகிய முத்திப்பேற்றை அளித்தருளுமாறு ஈசனுல் அவ்வான்மாக்கட்குக் கொடுக்கப்படுஞ் சனனபேதம் எண்பத்து நான்கு நூருயிரமென்ப. எண்பத்துநான்கு நூருயிர யோனிபேதத் துள்ளுஞ் சிறந்த அருமையான பிறப்பு மக்கட்பிறப்பே. தேவப் பிறவியோவெனின், அது ஒருவராற் செய்யப்பட்ட இருவினைப்பய னுள் நல்வினைப்பயனை மாத்திரம் அனுபவிக்குமாறு கொடுக்கப் பட்ட பிறவியாகலானும், அவ்வினைப்பயன் அனுபவித்து முடிந்த வழிப் பூமியில் வந்து பிறக்கவேண்டி யிருத்தலானும், அவர்கள் முத் திப்பேற்றை விரும்பிய வழியும் பூமியில் வந்து சரியையாதி நாற் பாத நெறியொழுகியே பெறவேண்டியிருத்தலானும் அதனினும் இருவினைகளை ஈட்டவும், அவற்றின் பயன்களைத் துய்க்கவும், அவை சமமுற்ற வழி ஞானத்தாலடையுஞ் சிவசாயுச்சியமாகிய பர முத்தியையும், ஏனை அபரமுத்திகளையும் பெறுதற் கேற்றது மனி தப்பிறவி யொன்றுமேயாகலின் அதுவே எல்லாப்பிறவியினும் அரு மையான பிறவியென முத்திநெறி கைகண்ட சிவஞானச் செல்வ ராயமர்ந்த அருணந்தி சிவாசாரியார் முதலிய மகான்களெல்லாரா லும் எடுத்துக் கூறப்படுதலினென்க. அங்ஙனம் அருமையாகிய மனித சரீரத்தை யெடுத்து முன் செய்வினைகளையும் அவற்றின் பயன்களையும் அநாதியாகிய மலமறைப்பினுல் அறியவுந் துய்க்கவு மியலாதிருக்கும் ஓரான்மாவுக்கு அவற்றையறிந்து ஊட்டுஞ் சிவ சத்தியானது அவ்வான்மாவால் முன் ஈட்டப்பட்ட வினைகளுள் எடுத்தவுடம்பான் முகந்து கொள்ளப்பட்ட இருவினைகளுள் நல் வினையிலொன்று தீவினையிலொன்று ஆக இருவினைகளையெடுத்து இவற்றுள் முன் அனுபவிக்கற்பாலதெது பின் அனுபவிக்கற் பால தெது என நோக்கும்வழி அவ்விரண்டும் ஒரேகாலத்து அனுபவித் தற் கேற்றனவாய்ப் பக்குவப்பட்டிருக்குமாயின் அவற்றுள்

ஒன்றை முன்னும், ஒன்றைப் பின்னுமாக அனுபவிக்கக் கொடுத் தல் நடுவன்மையின் அவ்விரண்டையும் அழித்துவிட்டு அப்படியே பின்னும் வேறிரு வினைகளை எடுத்து நோக்கும்வழி அவையும் அவ் வாறிருக்குமாயின் அவற்றையு மழித்துவிட்டு மேலும் அவ்வாறே இரண்டிரண்டாக எடுத்து நோக்கும் வழியெல்லாம் அவைகளும் ஒரேகாலப் பக்குவமுடையனவா யிருக்குமாயின் அனைத்தையும் ஒருங்கு அழித்துவிட்டு மற்றோருடம்பினிமித்தம் வைக்கப்பட்ட சஞ் சிதத்தை இவ்வுடம்பா லூட்டுவித்த லாகாமையின் போகத்தை அனுபவிப்பித்தல் காரணமாகத் திரோதான சத்தியாய் நின்ற சிவ சத்தியானது அநுக்கிரக நிமித்தம் அருட்சத்தியாய் மாறும். அங் ஙனம் சத்திமாறு மவசரமே சத்தி நிபாதமென்று சொல்லப்படுவது. திரோதான சத்தியாய் மறைத்துநின்ற சிவசத்தியானது அருட் சத்தியாய் மாறியவழி ஆணவ மலசத்தியானது தன்காரிய மியற்ற மாட்டாது தத்தளிக்குமவசரமே மலபரிபாகமென்று சொல்லப்படு வது. அச்சமயத்து அவ்வான்மாவுக்கு நல்வினைப்பயனாகிய சுகமுந் தீவினைப்பயனாகிய துக்கமுமின்மையினாலே முறையே அவற்றை யனு பவித்தற் கருவிகளாகிய பொருள், இன்மை, பிணி முதலியவற் றில் விருப்பு வெறுப்பின்மையும் செயலறுதியுந் தோன்றும். இவ் வவசரமே ஓடுஞ் செம்பொனு மொக்க நிறுக்கு மவசரமாகும். இங் ஙனம் இருவினை யொப்பு மலபரிபாகம் சத்தி நிபாதமாகிய மூன்று மொத்தவழி அவ்வான்மாவோடு அத்துவிதமாய் உண்ணின்று தனது தாதான்மிய சத்தியினாலே அவ்வான்மாவின் அநுக்கிரகநிமித்தம் மூவிதபக்குவமும் விளைவித்த னிமித்தமாகத் தனுகரண புவனபோ கங்களைக் கொடுத்துப் பலவித கன்மங்களையும் நானாவித போகங் களையும் இயற்றுவித்தும் இயற்றியும், ஊட்டியும் உண்டும் பக்கு வம் விளையுமவசரத்தை அவ்வான்மாவை உய்யக்கொள்ளு நிமித் தம் எதிர்நோக்கி நின்ற பரம்பொருளாகிய சிவமே குருவெனத் திருவருட்கோலங் கொண்டு வெளிவந்தருளி நயன பரிசமுதலிய தீக்ஷைகளினால் மாயையினையே இடமாகக் கொண்டு புத்தி தத்து வம் பற்றுக்கோடாக விருந்த சஞ்சிதவினை யிடித்து ஆகாமியவினை தடுத்துச் சிவமாகிய தமது சொரூபமெனப்படும் உண்மைநிலையினை யும், சகசமல மருட்கையினாலே மெய்ஞ்ஞான சொரூபமாகிய தன் னிலையுணரமாட்டாது தயங்கி நின்ற அவ்வான்மாவுக்கு அறிவுரு வாகிய அதன் உண்மை நிலையையுங் காட்டிச் சிவானந்தமாகிய சுத்த அனுபோகத்தையு மூட்டிப் பேரின்பப் பெருவாழ்வில் அமிழ்ந்தச் செய்தருளும்; அங்ஙனம் பேரின்பப் பெருவாழ்வி லமிழ்ந்திய அவ் வான்மாவுக்கு இது பொழுது சிருட்டியாதி பஞ்சகிருத்தியங்களையு மியற்றுதற்கேற்ற சர்வஞ்ஞதை, முடிவிலாற்றன் முதலிய இறைமைத்

குணங்களெல்லா மொருங்குளவாயினுந் துன்பமே யனுபவித்துழன்ற தனக்குச் சிவானந்தானுபவமாகிய இப்பேரின்பமொழிய மற்றொன்று பயனுடையதாகத் தோன்றாமையானும், பஞ்சகிருத்தியமும் ஆன் மாக்களை ஈடேற்று நிமித்தமன்றி மற்றொரு பயனிமித்தமன்றாகலா னும், அதற்குத் தன்னை ஆட்கொண்டருளிய சிவமே யமையுமாக லானுந் தான் அதிகாரநிலை கருதாது சிவபோகத்தழுந்தி யிருத்த லாகிய இறைவனடந் தரிசித்தின்புறுதலையே மேற்கொண்டமையு மென்ப. இதுவே சைவசித்தாந்தவுண்மை முத்திநிலையாகும். முத்தியும் சாலோக சாமீப சாரூப சாயுச்சியமென நான்கு விதமாகும். ஈண்டு உண்மை முத்திநிலையென்றது சாயுச்சியத்தை. முத்திசாதனமும் நான்கு விதமாகும் சரியை கிரியை யோகம் ஞானமென. இவற் றைத் தனித்தனி யனுட்டித்தவர்கள் முறையே சாலோக சாமீப சாரூப சாயுச்சியங்களைப் பெறுவார்கள். சாயுச்சியமொழிந்த ஏனை மூன்றும் அபரமுத்தியென வுரைக்கப்படும். சாலோகமாவது ஆன் மாக்களிடத்து முகிழ்த்த பெருங்கருணையினாலே ஈசன் திருவுருக் கொண்டு எழுந்தருளியிருக்குமுலகு எத்துணை நின்மலமும் அழகும் செல்வமும் வாய்ந்ததாயிருக்குமோ அத்துணை நின்மலமும் அலங் காரமுஞ் செல்வமு முதலியவற்றாற் குறைவற வுயர்ந்த வுலகின்கண் மூப்பு, பிணி, சாக்காடு முதலிய துன்பமொன்றுமின்றி இனிது வாழ் தலாகும். அங்ஙனம் வாழுங்காலத்துச் சாரூப முதலிய ஏனையவற்றில் விருப்பங்கூடுமாயின் சிவானுக்கிரகத்தாற் பூமியில் வந்து தவஞ் செய்தற்குரியதோர் சாதியில் அவதரித்துக் கிரியை யனுட்டித்ததன் மேல் சாமீபத்தை யடையுமென்க. சாமீபமாவது ஈசன் ஆன்மாக்கள் பொருட்டுக் கொண்ட திருக்கோலத்தை நேரே தரிசித்துக்கொண்டு அதன் சமீபத்து வசித்தலாகுமென்க. ஈசன் சமீபத்து வசித்தலாகு மென்னுமோ வெனின்? என்னும்; என்னை: ஈசன் ஆன்மாக்களோடு என்றும் அத்துவிதமாய் நின்றருளுவன் என்னுஞ் சுருதியோடு முரணுமாகலின் என்க. அங்ஙனஞ் சாமீபமுற்று இன்புற்றிருக்குங் காலத்துச் சாரூபத்து மனஞ்செல்லுமாயின் பின்னரும் பூமியில் வந்து குருவருளால் யோகநிலையுணர்ந்து சத்துவம் ரசசு தமசு என்னும் மூன்று குணங்களையும் சத்த ஸ்பரிச ரூப ரச கந்தமென்னு மைம்புலன்களையு மடக்கி இடைபிங்கலை என்னும் நாடிகளிரண்டை யும் பிராணாயாம நெறியானடைத்துச் சுழுமுனை நாடியைத் திறந்து அதுவழியாகச் செல்லும் போது கேட்கும் நானாவித மங்கலகோஷத் தான் மயங்காது செல்லின் ஈசனது நடனச் சிலம்பொலி புலனாகும். அச்சிலம்பொலி வழியே சென்று ஈசனடந் தரிசித்து இன்புறும் சமாதி கைகூடப்பெற்றுச் சாரூபத்தை யடையுமென்க. சாரூப மாவது ஈசன்கொள்ளும் மான் மழு சதுர்ப்புயம் காளகண்டம் முதலிய திருக்கோலத்தைத் தானுமுற்றிருத்தலாகும். சாரூபமுற்

றிருக்குங் காலத்துச் சாயுச்சியத்து மனஞ் செல்லுமாயின் ஈசனருளால் அடிஞானந் தோன்றப்பெற்றுச் சாயுச்சியமாகிய பரமுத்தியை யடையுமென்க. இங்ஙனம் படிமுறையானன்றி ஒரு பிறவியிற்றனே சரியையாதி நாற்பாதமுங் கைகூடப்பெற்று வீடுபெறுதலு முண்டு. சரியை கிரியை யோகம் என்னும் முப்பாதமுஞ் செய்கையும், ஞானபாதம் செயலறுதியுமாகலின் நான்கு பாதமுங் கிரியை ஞான மென விரண்டா யடங்குதலும் தகும். மூவித கிரியையும் ஞான சாதனமும், ஞானமொன்றே முத்திசாதனமென்பதும் உண்மைநூற் றுணிபென்க. ஞானமும் பாசஞானம் பசுஞானம் பதிஞானம் என முத்திறனுகும். அவற்றுட் பசுபாச ஞானங்களினுல் சிவதரிசனமும் ஆன்மதரிசனமும் எய்தலாமையின் பதிஞானமொன்றே வீடுபேற்றிற்கு நேரே சாதனமாவதென்க. தன்னையுந் தலைவனையும் விசாரித் தறிதல் எவருக்கும் இன்றியமையாத தொன்றுகலின் அவ்வாராய்ச் சியே மேல்வரற்பாலதென்க. மேற்கூறிய ஞானம் கேட்டல் சிந்தித் தல் தெளிதல் நிட்டை கூடலென நான்கென்பதும் சைவசித்தாந்த நூற்றுணிபேயாகும். அவற்றுட் கேட்டலாவது நிகண்டு இலக்கணம் தருக்கம் முதலிய கருவி நூல்களைக் கற்று வல்லவனுய்ச் சமய தீட்சை பெற்றுப் புராண முதலிய இலக்கியங்களை ஆராய்ந்து பதி பசு பாசங்களை யுணரும் வேட்கையுற்ற மாணவகன் விசேட நிருவாண தீக்ஷைகளைப் பெற்றுக்கொண்டு ஆகம சாத்திரங்களைக் குருமுகமாகவோதி ஐயந்திரிபறவுணர்ந்த ஆசாரியனைச் சார்ந்து அடியேனுக்கு ஆகம சாத்திரங்களை உபதேசித்தருள வேண்டுமென விண்ணப்பஞ்செய்ய ஆசாரியனும் மாணவகனுடைய அன்பு அறிவு ஒழுக்கம் முதலிய பக்குவ நெறிகளை நன்கு ஆராய்ந்து பக்குவ னுயவழிச் சைவசித்தாந்த சாத்திரத்துச் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு பாதங்களையுஞ் சோபான நெறியானே போதித்து வருங்காலத்துச் சரியையாதி நாற்பாதங்களையும் அநுட் டித்து முத்திப்பேற்றைப் பெறுதற்கேற்ற மாணவகனும் முறையே சரியை கிரியைகளை அநுட்டித்து யோக ஞானநெறிகளைக் கேட்டல், கேட்டவழி அவற்றின் வகையைப் பலகாற் சிந்தித்தல், அங்ஙனஞ் சிந்திக்குங் காலத்துப் பஃறலையானிகழுஞ் சந்தேகங்களை ஆசாரியனை உற்றுப் பலகாற் கேட்டு அச்சந்தேகங்களைத் தெளிதல், அங்ஙனஞ் சந்தேகம் நீங்கிய வழியும் சிவானுபவங் கைகூடாமையின் அது கைவருமாறு நிட்டைகூடியிருத்தல் எனவரும் இந்நான்குமே அந் நான்காகும். இந்நான்கு மெய்தியவழியும் அடிஞான மான்மாவிற் றேன்றுவழி முத்தி சித்தியாதாகலின் "அவ்வடிஞானமே முத்திக்கு வித்தாகிய தலைஞானமென்பது சைவசித்தாந்தத் தெளிபொருளாகும்,

# 4. ஆக்கந்தரும் வாழ்க்கை

மக்கள் விலங்கு புள் முதலிய பிராணிகளெல்லாம் உயிர் வாழ்தலென்னும் பொதுத்தன்மையைத் தம்பாற் பெற்றுள்ளன. தோன்றியவகையுமறியா; காரணமுமறியா; ஆயினும், தோன்றியபின் இவையெல்லாம் உயிர்வாழவே முயல்கின்றன. உயிர்வாழ்தற்கண் ஊக்கமும் விருப்பமும் சீவராசிகளெல்லாவற்றின் கண்ணு மியல் பாகவே யமைந்திருக்கின்றன.

இவ் வுயிர்வாழ்தலும் உயிருக்குத் துன்பம் நீக்கிச் சுகம் தருவதையே தன் பயனாகவுள்ள முயற்சியாய் எங்கும் விளங்கும். தேயம் காலம்பற்றி எவ்வளவு வேற்றுமை யிருப்பினும் உயிர்களின் வாழ்க்கை துன்பம் நீக்கிச் சுகந்தரும் முயற்சி வடிவினதாகவே காணப்படும். உயிர்களின் வாழ்க்கை அறிவிச்சை தொழிலென முத்திறப்பட்டு நிகழ்வ துண்மையே. ஆயினும் சாமானியமாய் அறிவு மிச்சையும் தொழின்முயற்சியைப் பயனாகக்கொண்டே நிகழும். அறிவுநிகழ இச்சையும், அதன்பின் தொழிலுமாகவே எப்பிராணிகள் பாலும் வாழ்க்கை நடைபெறும். எனவே, எவ்வாற்றால் நோக்கினும் வாழ்க்கை முயற்சி வடிவினதாகவே கருதப்படல் வேண்டும்.

இனி இவ்வாழ்க்கை மக்களிடை சில சிறப்பியல்புகளோடு விளங்குவதும் அறியத்தக்கது. மக்களல்லாத விலங்கு புள் முதலிய பிராணிகளெல்லாம் உயிர்வாழ்தற்கண் தம்பாலியற்கையாயமைந்த காமம் வெகுளி யச்சமாதிய இயற்கையுணர்வின் வசப்பட்டேயியங்கும். நன்மை தீமைகளையும் அவற்றின் தாரதம்மியங்களையுமறியும் அறிவும் அவ்வறிவிற் கேற்றபடி தம்மையேவிநிற்கு மியற்கையுணர் வுகளை யாண்டு நடத்து மாற்றலதிகாரமு மிவைபாற் காணப்படா. தம் வாழ்க்கை ஓர் பயனை நோக்கி நிகழ்வது, அது இவ்வாறு அடையத்தக்க தென்றறிதற்கு வேண்டிய புத்தி விளக்கமும் இவை பாலில்லை. மக்களெனிலோ நல்லத னன்மையும் தீயதன்றீமையும் அவற்றின் தாரதம்மியங்களும் நுனித்தறியும் பகுத்தறிவோடு அவ் வறிவுக் கேற்றபடி தம் இயற்கையுணர்வுகளை யாண்டு நடத்தி வாழ்க்கையை நெறிப்படுத்தும் ஆற்றலதிகாரமுடையவராய், வாழ்க் கையாலடையும் பயனை நிச்சயித்ததற்கிசைய வாழ்க்கையைச் செப்பம் செய்யும் புத்திமேம்பாடு பெற்று விளங்குவர். நன்றிது தீதிது என்னும் பகுத்தறிவுடைமையால், மக்கள் எத்தொழிற்கண்ணும் நன்மை தீமை நிச்சயித் தொழுகும் கடப்பாடுடையர். எனவே, பொருளெனப் போற்றத்தக்க பயன் யாதென்று ஆராய்தலும்,

ஆராய்ந்து நிச்சயித்தபின் காமக் குரோதாதி யியற்கை யுணர்வு களின்வழி நின்றிடுக்கட் படாமற் றம்மை நெறிப்படுத்தித் தாம் தக்கதெனக் கருதிய பயனை யடைதற்கேற்றவாறு முயற்சி செய்தலும், மக்கள்தங் கடமையாகக் கொள்ளத்தக்கன என்பது பெறப்படும். பிறிதோர் வகையாலும் ஏனைய பிராணிகளுக்கில்லாத மேம்பாடு மக்கட்குண்டென்பதும் இங்கு குறிக்கத்தக்கது. குடி குலம் கோத்திரம் வருணம் சாதியென்று பலரொருங்கு கூடி வாழும் சமுதாய வாழ்க்கை யாலும் ஒலிவடிவிலும் வரிவடிவிலும் வழங்கும் மொழிகளை மக்கள் தம் கருத்து வெளியிடுதற்கும் விடயங்களை யாராய்வதற்கும் கருவி யாகப் பிரயோகிக்கும் சிறப்பியல்பினாலும், பிற பல பிராணிகளுக் கில்லாத சிறப்பு மக்கட் குண்டென்பது அறியத்தக்கது. சமுதாய வாழ்க்கை அறிவாற்றலால் மேம்பட்ட பெரியார் துணையை யேனை யோர்க் குதவும் சிறப்புடையது. ஆன்றோரறிவும் அநுபவமும் நம் மனோர்க் குபகாரமாவது சமுதாய வாழ்க்கையாலும், ஒலிவடிவிலும் வரிவடிவிலும் வழங்கும் பாஷைகளாலும், அப்பாஷைகளில் நிலவும் நூல்களாலுமென்பது பலருமறிந்ததே. தேயத்தாலும் காலத்தாலும் இடையிட்ட சான்றோர் பலரும் வாழ்க்கையின் பல துறைகளிலும் சென்று தாம் பெற்ற அறிவநுபவங்களை நமக் குதவுதற் குபகார மாயிருப்பதன்றி வேறு பல்வகையாலும் மனித வாழ்க்கை சிறப் படைவதற் கின்றியமையாப் பெருங் கருவியாய்ச் சமுதாய வாழ்க்கை நிலவுகின்றதென்பது சனசமூக நூலுணர்ச்சி வல்லோர் பலர்க்குமொப்ப முடிந்த உண்மை. இதுபற்றியே சமுதாய வாழ்க் கையைச் சீருற அமைத்தல் மக்கள் வாழ்வின்பொருட்டுப் பெரிதும் வேண்டப்படுமென்பர்.

துன்பம் நீக்கிச் சுகம் பெறுதல் கருதிச் செய்யப்படும் முயற்சி யாகிய இவ்வாழ்க்கை சடமுஞ் சித்துமா யுலகிடையுள்ள பலபொருட் களையும் நோக்காமல் நடத்தப்படத் தக்கதுமன்று. உலகில் இன்பந் தருவனவுந் துன்பந் தருவனவுமாய்ப் பல பொருளுண்டென்பது அநுபவசித்தம். ஆயினும் இன்ப துன்பங்கள் தருவனவாய பொருளுண்மை பற்றியும் இப்பொருள்கள் இன்பத் துன்பங்களைத் தரும் வகைபற்றியும் நாம் அறிந்தன சில; அறியாதன மிகப்பல. காட்சி கருதலளவைகளா லறியத்தக்கன சில; ஆன்றோரறிவநுபவ ரூபமான ஆகம வளவையானே யறியத்தக்கனவே பல. ஆதலின், அறிவாற்ற லநுபவங்களால் மேம்பட்ட ஆன்றோர் துணைக்கொண்டே வாழ்க்கை செப்பஞ் செய்யப்படத்தக்கது.

வாழ்க்கை துன்பம் நீக்கிச் சுகந்தரும் முயற்சி வடிவினதென் பதும், மனித வாழ்க்கை நன்மை தீமைகளை நுனித்தறியும் பகுத்

தறிவு, காமக்குரோதாதியிச்சை யுணர்வுகளை யடக்கி யாண்டு எத் தொழிலையும் நெறிப்படுத்திச் செல்லும் ஆற்றல், வாழ்க்கையின் குறிக்கோளை நெறியறிந் தெய்துதற்குரிய புத்தி விளக்கமாகிய இவற்றோடு கூடிய பெருமைப்பா டுடையதென்பதும், வாழ்க்கையைச் சீருற அமைப்பதற்குச் சமுதாய வாழ்க்கை யின்றியமையாதது என்பதும், வாழ்க்கை சிறப்படைய வேண்டின் அறிவாற்றலநுபவங் களால் மேம்பட்ட பெரியார்துணை வேண்டிக் கொள்ளற்பாலது என்பதும் மேல் ஒருவாறு ஆராய்ந்து வலியுறுத்தப்பட்டன. * சிறப் புடை மனிதவாழ்க்கை பல்லாற்றானும் செவ்விய முயற்சியின்பாற் படுமென்பதே கருத்தெனக் கொள்ளத்தகும்.

வாழ்க்கை முயற்சிவடிவின தெனவே, முயற்சி சீருறச் செய் யப்படின் வாழ்க்கையுஞ் சிறப்படையுமென்பது பெறப்படும். மக்கள் வாழ்க்கை யேனைய பிராணிகள் வாழ்க்கைபோலன்றிப் பயன் கருதிய தாகவே நிகழத்தகும். எங்கு செல்கின்றேன், என்ன பயன் கருது கின்றேன், என்னும் அறிவின்றி வாழ்வோன் உருவத்தில் மனித னேயாயினும் ஒழுக்கத்தால் விலங்கேயாவான். புத்தி விளக்கமுள்ள மனிதன் தான் கருதியதோர் பயனை நோக்கியே தன் வாழ்க்கையை நடத்தும் கடப்பாடுடையன். இனிப் பயன் கருதும் போதும் நன்றிது தீதிது என்று பகுத்தறியும் அறிவு விசேடமுடையவனாகை யால் மனிதன் நற்பயன் கருதியே முயற்சி செய்யத்தகும். நன்மை தீமைகளிலு மேற்றத் தாழ்ச்சிகளை யுணர்ந்து பெருநன்மைகளையே கடைப்பிடித் தொழுகல் வேண்டும். அவ்வாறொழுகாதான் பகுத் தறிவு புத்திவிளக்கமாதியன விருந்தும் அவையில்லாத விலங்கின் தன்மையைப் பெற்றவனாவன். ஆதலின், மக்கள் வாழ்க்கை பெரு நன்மை கருதிய முயற்சியாலேயே விளங்கத்தகும். அறிவு நிகழ இச்சையும் அதன்பின் முயற்சியும் நிகழும். வாழ்க்கையில் அறி விச்சை தொழிலென்னு மிம்மூன்றும் ஒன்றோடொன் றொவ்வாத நிலையிலிராமல் தம்முளொருப்பட்டு நிகழ்ந்தாலன்றி வாழ்க்கை சிறப் புறுமாறில்லை. தான் தக்கதென்று நிச்சயித்த பயனை யிலக்காகக் கொண்டே யிச்சை யெழவேண்டும். அவ்விச்சைக்குத் தகவே முயற்சியும் பிறக்கவேண்டும். அவ்வாறன்றி இவை தம்முள் முரண் பட்டு நிற்பின், அஃதாவது, ஒருயிரின் வாழ்வுக் குபகாரமாயமைந்த கருவிகள் தம்முள் மாறுபட்டு நிற்பின், வாழ்க்கை பாழ்போமன்றோ? இவ்வாறு உயிர்க் கருவிகளிடை யேற்படும் மாறுபாடு வலி கொண்டு

*மனித வாழ்க்கை பற்றிய உண்மைகளுள் இங்கெடுத்தாளப்படும் விடயத்துக் குப் பொருத்தமான சிலவே கூறப்பட்டன. தேசகால வர்த்தமானங்களை நோக்கிச் சில அபிப்பிராயங்களை வெளியிடுதலே யிக்கட்டுரையிடனோக்கம்.

நீகழுமாயின் சித்தப்பிரமை முதலிய பேரிடுக்கண்கள் வாழ்க்கையில் நேருமென்பது மனோதத்துவ சாத்திர முடிபு. அறிவிச்சை தொழி லென்னு மிவற்றி னொருமைப்பாடே மனிதவாழ்க்கையைச் சிறப்புச் செய்வதற்குப் பெரிதும் வேண்டப்படு மென்னு முண்மை நம் மனதிற் பசுமரத் தாணிபோற் பதிக்கத்தக்க தொன்று. நாம் நன்றென்று கருதிய தொன்றன்மே லிச்சையுஞ் செயலுந் தளர்வு சோர்வின்றிச் செல்லாதொழியின் வாழ்க்கை சிறப்புறுமாறில்லை. நன்றென்று கருதிய தொருபுறமிருக்க இச்சை யொருபுறமும் தொழில் வேறோர் புறமுமாகச் செல்லின் ஒருமுகமாய்ச் சென்று வாழ்க்கையின் நோக் கத்தை நிறைவேற்றற் குபகாரமாக வேண்டிய ஆற்றல்கள் சிதறுண்டு உயிர் தன் வலியிழந்து வாழ்க்கையின் பயனை நோக்குதலுமிழந்து நிற்கும். நன்று தீதறியும் பகுத்தறிவோடு நன்றென்று கருதிய பயனுக்குத்தக இச்சைகளை நெறிப்படுத்திச் செல்லு மாற்றலதிகாரம் பெற்ற மனிதன், தான் நன்றென்று கருதிய பயனை யடைதற் கேற்ற வண்ண மிச்சைகளைச் செலுத்தி வாழ்க்கையைச் செப்பஞ் செய்யா தொழிவனுயின் அவன் மனிதனுகக் கருதப்படுதற்கு முரிமை யுடையவனுகான்.

அறிவாற்ற லநுபவங்களாற் பெரிய ஆன்றோர் பலர் நாம் வாழ்க்கை நடத்துதற் குபகாரமாய், வாழ்க்கையின் பரமப்பிரயோசன சம்பந்தமான உண்மைகளைச் சமயநூல் வழியாகவும், வாழ்க்கை நடத்தும் முறைகளை விதிவிலக்கு ரூபமான நீதிநூல் வழியாகவு முதவியுள்ளார். இன்றும் தரும சங்கடமோ தடுமாற்றமோ ஏற்பட்ட வழிச் சதமுாய வாழ்க்கையைச் சீர்ப்படுத்தியும் பிறசெய்தும் நம் வாழ்க்கையைச் செப்பஞ் செய்தற் குபகாரமான நல்லுபதேசஞ் செய்யு மாற்றலறிவநுபவங்களா லுயர்ந்த பெரியார் உளர். இவ் வுபகாரமெல்லா மிருந்தும் சீருடைய வாழ்க்கை வாழ்கின்றேமோ? இதுவே இப்போது ஆராயத்தக்கது.

முதற்கண் நம் வாழ்க்கை முயற்சியோடு விளங்குகின்றதோ வென்பதை ஆராய்வாம். வாழ்க்கையில் கலைத்துறைகளென்றும் தொழிற்றுறைகளென்றும் பலவுளவே. இவற்றுள் நம்மவர் முயற்சி யெவ்வாறு செல்கின்றது? பிறர் நன்கு மதிக்கத்தக்க வுயர்வை யெத் துறையிலும் நம்மவரிலெவரு மிக்காலத்திலடைந்ததை நாமறியேம். இந்தச் சிறுமை நமக்கு முயற்சிக் குறைவால் வந்ததென்றே கூற வேண்டும். நம் வாழ்க்கையைப் பரிசோதனை செய்யுங்கால் தேகா ரோக்கியம் மதிவன்மை கல்வி முதலியவற்றோடு விளங்குவோரும், தமக்குரிய தொழிற்றுறைகளில் மேம்பட்டு விளங்காம லிருப்பதற்கு

முயற்சிக்குறைவே காரணமாதல் வேண்டுமென்பது புலப்படும். மனித வாழ்க்கை துன்ப நீக்கிச் சுகம் கருதிய முயற்சியாதல் வேண்டுமென்று மேற்கூறப்பட்டது. துன்ப நீக்கமும் சுகப்பேறும் பயனுய்க் கருதப்படும் வரையும் முயற்சி நிகழவேண்டுமாதலின் பரமப் பிரயோசனங் கைகூடாதிருக்கும் வரையும் முயற்சி நிகழ் தற்பாலதே. மனித வாழ்க்கையாற் பெரும் பயனே யடையத்தக்க தாதலின் அது பெருமுயற்சியோடு கூடியதாயே யிருத்தல் வேண்டும். ஆதலின் பயனுக்கேற்ற பெருமுயற்சியில்லாத வாழ்க்கை சிறப்புடைய வாழ்க்கையாகாது.

உற்று நோக்குங்கால் இம் முயற்சிக்குறைவும் மனவுறுதியின் மையோடு கூடிய சோம்பலே பெரும் பான்மையுங் காரணமாக வுள்ளது. சாமானியமாய் மனிதர்பாலுள்ள ஆற்றல் முழுதும் வாழ்க்கையிற் செய்யும் முயற்சியிற் பிரயோகமாவதில்லை யென்பது சாத்திர முடிபு. உயிரிடைமன்னு மாற்றல் பயன் படுத்தப்படாமை யினல் வாழ்க்கை பாழடைவது உலகப் பிரசித்தம். தளர்வு சோம்பல் ஊக்கக்குறைவுகளினுல் முயற்சிகுறைந்த வாழ்க்கையையுடையவ ஞய்த் தளர்வெய்திய வொருவன் சடுதியாய் நிகழ்ந்தவோராபத்தினு லெழுப்புண்டு முன்னிருந்த கீழ்மை நீங்கிப் பேராற்றலோடு பெரு முயற்சி செய்து பெருவாழ்வெய்தி வீறுடனிருப்பதைப் பன்முறையும் கேட்டிருக்கிறோ மன்ரோ? நம்மிடை மன்னு மாற்றல் முழுதும் வாழ்க்கையிற் பிரயோகப்படாமற் பாழ்போவதை யுணர்ந்து சோர் வடையாது மேலும் மேலும் முயலும் பயிற்சியினுல் வீறுடன் வாழலாம்.

இதுவன்றித் தம்மிடைமன்னும் ஆற்றல்களைத் திரட்டி ஒருமுகப் படுத்தித் தொழில்செய்து வாழ்க்கையின் பயனைக் கடிதிற் சென் றடையும் மார்க்கமறியாராய் வீண்தொழில்களிற் றம்மாற்றல்களைச் சிதறவிட்டுச் சன்மார்க்கநெறி நீங்கி வாழ்க்கையின் பயனடையாது தடுமாறிக்கெடுவாரும் பலர் நம்மவரிலுண்டு. பலகிளையாய்ப் பரந்து செல்லும் நதி அதிவிரைவில் வேகம் வலி முதலியனகெட்டுப் புனித நீரிழந்து மணலுள் மறைந்து கெட்டொழியும்; நீர்முழுதுமொருங்கு கூடி யொருவழிப்பட்டொழுகும் நதியோ மனிதர் விலங்கு புள் முதலியவற்றிற் கெல்லாம் புனித நீருதவிக் கழனி குளமெல்லாம் நிரப்பி யுலகினர் பாராட்டும் நன்மொழியும் பெற்று விளங்கும் ஆற்றல் சிதற விட்டாரும் அதனை யொருமுகப்படுத்தி வாழ்வாரும் இவ்வாறே யோகமார்க்கத்தில் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதியென்னும் முயற்சிகள் உயிரிடைமன்னு மாற்றல்களைத்திரட்டும்

பெரும் பயனைத் தருவன வெனவறிக. தம்பாலுள்ளவாற்றல்களை யொருமுகப்படுத்தி நல்வாழ்வெய்துதலேயன்றிக் குன்றாத ஆற்றற் பேருற்றொன்றின்பால் வேண்டிய ஆற்றல்பெற்று வீறுடன் வாழ்த லும் கூடுமென்பர் மேற்புல விஞ்ஞானிகளும் சிலர். இறைபணி நின்று அவனே தானாக ஒன்றித்துநின்றுவாழும் அடியார் பெருமை நம்மாற் கூறிமுடிக்கும் தரத்ததொன்றன்று.

இனி நம்மவர் தாம் தக்கதென்று கருதியதைக் கடிதிற்றேடி யடையவேண்டும் என்பதைத் தம்வாழ்க்கைமுறையாகக் கொண்டவ ராகக் காணப்படவுமில்லை. சிந்தனையின்றி யொழுகும் குழந்தைகள் போலப் பிறர்செய்வதைத்தாம் செய்வதன்றிச் செய்யத்தக்கதெது வென நிச்சயித்ததனையே கடைப்பிடித்து வாழ்க்கையை யவர் நடத்து வதில்லை. வாழ்க்கையின் நோக்கம் அதனையடையும் முறையாதிய வற்றைச் சிந்தியாதாரே மிகப்பலர். ஒவ்வோர் காலத்துச் சிந்திப் பவரும், பெரும்பான்மையுங் கருமமாற்றுங்காற் சிந்தித்தெய்திய முடிபொருபுறமிருக்கத் தாஞ் செய்வதெல்லாமயலார் செய்வதை யொட்டிச் செய்து அயர்ச்சியோடு வாழ்வர். இவர் வாழ்க்கையறி விச்சை தொழிலெல்லா மொற்றுமைப்பட்ட திறனுடை வாழ்க்கை யாகாது. பகுத்தறிவின்வழி யிச்சை தொழிலென்பன தம்முளொற் றுமைப்பட்டு நிகழும் பயிற்சிமிகுதியால் ஓர்வகை மனச்சாந்தியும் கைகூடி வாழ்க்கையும் மேம்படுதல் திண்ணம். நல்லனவற்றையே நாடியறிதலும் பயன்களின் ஏற்றத் தாழ்ச்சியறிந்து தக்கனவற்றையே விரும்புதலும் அவற்றையே கடிதிற்சென்று தேடியடைதலும் பகுத் தறிவுள்ள மக்கள் கடமையாகும். அறிவிச்சைசெயலென்னு மிவை மூன்று மொருமுகமாய் ஒற்றுமைப்பட்டுச் செல்லும் வாழ்க்கை அவாந்தரப் பிரயோசன நாட்டமும் பிரபஞ்சப் பொருட்பற்றும் கூடியதாயினும், கலங்காச் சித்தம், பேராண்மை, பேராற்றல் முதலிய பெரும் பேறுகளைத் தந்து அதிவிரைவில் உயர்ந்த சீவன் முத்தி நிலையை யுதவுதற்கும் சிறப்புடைய சாதனமாகும்.

நல்லன தீயன எவையென்றறிந்தும் தீயன விலக்கி நல்லன நாடுதலில் நம்மவர் ஈடுபடாமைக்குக் காரணம் ஊக்கமின்மையும் சோம்பலுமென்று மேற்கூறப்பட்டது. ஊன்றி யோசிக்குங்கால் நம் மவர்மாட்டுக் காணப்படு மிந்தக்குற்றம் சிரத்தைக் குறைவால் வந்ததென்றுங் கூறலாம். மதிநுட்பமும் நூலறிவு முடையராய்ப்

பல்கலைத்துறையிலும் பயின்று லௌகிகம் வைதிகமென் றிருபகு தியிலும் பிறர்க்குப் போதிக்குமாற்றல் படைத்தோரும் தம்மறிவிற் கேற்றபடி தம்வாழ்க்கையைச் செப்பம் பண்ணுமை யறிவுக் குறைவு ஊக்கக்குறைவாலன்று; சிரத்தைக்குறைவாலேயாகும். விதிவிலக்குக்களாயமைந்த கடமைகளை நிறைவேற்றுவதிற் சிரத்தை யில்லாதான் எத்துணை கற்றிருந்தானுயினும் அவன் வாழ்க்கை சிறப்புருது.

சாதியபிமானம் சமயாபிமானம் போதித்து ஞானமும் பேச லாம். ஆனுல், நாம் உண்மையிற் பொருளெனப் போற்றுவது யாதென்பது நம் வாழ்க்கை முறையா லினிது புலப்படும். மதிநுண் மையோடு பல்கலையறிவும் நிரம்பப்பெற்றிருப்பினும், நம்வாழ்க்கை உண்டி உறக்கம் மைதுனம் என்னும் முப்பகுதியதாயே விளங்கு கின்றது. மனிதவாழ்க்கையாலடையு முறுதிப்பொருளை யறிந்ததற் கேற்றபெற்றி வாழ்க்கை நடத்துதற்குபகாரமான பகுத்தறிவு புத்தி மேம்பாடிருந்தும் நம் வாழ்க்கை மிருக வாழ்க்கையின் பாற்பட்டே விளங்குகின்றது, விலங்கினங்கட்கில்லாத ஆற்றலறிவுகளிருந்தும் விலங்கினங்களின் வாழ்க்கையே வாழ்கின்றேம். உண்டி யுறக்கம் மைதுனமென்னுமிவையே விலங்கினங்களும் விரும்புவன. இதன் மேற் பட்டென்றும் பருத்தியென்றும் பல்வகையாயுடுத்து வாகன முமேறி யாடம்பரமும் பண்ணுவார் பலர். இந்த ஆடம்பரத்துக்குச் சிறிது பங்கம் வருமாயின் அறிவழிந்து கலங்கிநின்று பதறுவர். அந்தோ! இவர்நிலை பெரிதும் இரங்கத்தக்கது! தம்மைச் சித்துப் பொருளென்றும் அனுதி நித்தியவஸ்துவென்றும் செருக்கித்திரியு மிவர் சடமாய்த் தூல உருவுடையதாய் அழியுந்தன்மையதா யற்ப முயற்சியாற் பெறத்தக்கதான பொருளிழந்ததன் காரணமாக வருந்தி யவலப்பட்டு நிற்கும் நிலை வெகுவிந்தையே! பொருளல்ல வற்றைப் பொருளெனக்கருதுமிவர் வாழ்க்கை யெவ்வாறு செம்மை யுறும்! வாழ்க்கையின் பெருமையுஞ் சிறுமையு மவரவர் முயற்சியால் விளங்குமன்றே? "பெருமைக்கு மேனைச்சிறுமைக்குந் தத்தங்கரு மமே கட்டளைக்கல்" என்றூர் தெய்வப்புலவர். அறிவுமேம்பாடும் புத்திவிளக்கமுமுள்ள பெறுதற்கரிய மனிதப்பிறவியைப் பெற்றும் விலங்கினங்கள்போல உண்டி உறக்கம் மைதுனமென்பனவற்

றையே பொருளெனக் கொண்டு வயிற்றுவளர்ப்புக்காக மானக் கேடு நீதிக்கேடு கருதாது சிறுதொழில் செய்துவாழும் வாழ்க்கை சிறப்படைதலும் உண்டோ? இவ்வாழ்க்கைக்கும் சாதியபிமானம் சமயாபிமானம் பற்றிய பேருரைகளுக்கும் சம்பந்தமு முண்டோ? ''மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை—பீடழிய வந்த விடத்து'' என்றும் ''ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க—முயிரினு மோம்பப் படும்'' என்றும் நம் புலவர்பெருமான் கூறியன வற்றை யாராய்ந்து பார்க்கின், உயிர் வாழ்த லொன்றையே பொருளெனக்கொண்டு வாழ்தல் சிறப்புடைவாழ்க்கையன்று என் பது புலப்படும். இவ்வூனோம்பும் வாழ்க்கை தன்பொருட்டன்றி யெய்தும் பயனோக்கியே போற்றத்தக்கது. இவ்வுண்மை கடைப் பிடித்தாலன்றி வாழ்க்கை சிறப்புறுமாறில்லை. ''இரந்து முயிர்வாழ் தல் வேண்டிற் பரந்து கெடுக வுலகியற்றியான்'' என்றும் ''புக ழின்றாற் புத்தேணாட் டுய்யாதா லென்மற்-றிகழ்வார்பிற் சென்று நிலை'' என்றும் ஆற்றலும் வீறும் சேர்ந்த மொழிகளால் தெய்வப்புலவர் வலியுறுத்திய உண்மையிதுவேயன்றோ? இனியொருவர் வாழ்க்கை யின் பெருமையும் அவர் விரும்பும் பொருள், அப்பொருளை யடை தற்கவர்செய்யும் முயற்சியாகிய இவற்றைத் தனக்கெல்லையாகக் கொண்டு நிற்கும். சிறு பொருளை விரும்பிச் சிறுதொழில் செய் வோர் வாழ்க்கை சிறுமை யெய்தியே நிற்கும். பயிற்சி (மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றின் வழியாலும் பயிற்சி நிகழத்தக் கது) சகவாசங்களால் வாழ்க்கை உயர்வு தாழ்வடைதலை உயிர் சார்ந்ததன் வண்ணமாகும் தன்மையது என்னுஞ் சாத்திர உண்மை யாலு மறியலா மன்றோ? சிறுபொருள் விரும்பிச் சிறுதொழில் செய்யும் வாழ்க்கையிலும் அச்சம் கவலை கையாறுதியவற்றாற் கலங்கியறிவழிந்து செயல்கெட்டு நிற்கும்நிலை பெரிதும் இரங்கத் தக்கது. சிவயோகநெறிநின்று தாரணை தியானம் சமாதிகளால் மனச்சாந்திபெற்று ஊழிபெயரினுந் தாம்பெயரா நிலையினராய் வீறுடை வாழ்க்கை வாழுதற்குரிய சைவநன்மார்க்கச் சார்புடைய ராய்ப் பிறந்தும் சிறுவாழ்க்கை செய்யும்போது காமக்குரோதாதிக ளால் அறிவிழந்து செயல்கெட் டவலமடைகின்றோமே? உலக பயன் விரும்பிவாழும் வாழ்க்கையிலும் சிறப்பினமைத்த சமுதாய

வாழ்க்கை* யாற் கைகூடும் பயிற்சி சகவாச முதலிய நற்சாதனை களால் அறிவிச்சை தொழில் மூன்று மொருமுகமாய் ஒற்றுமைப் பட்டு நிகழப் பேராற்றலோடு வாழ்தல்கூடும். நாம் நடத்தும் வாழ்க் கையை யோர் அரசுரிமைத் தொழிலெனக் கருதுக. அவ்வாற்றலநு பவங்களாற் பெரிய ஆன்றோர்வழிவந்த ஆப்தவாக்கியங்கள் துணை யாக நன்மை தீமையறிந்து நன்னெறிகாட்டும் நல்லறிவை நமக்கு ரிய பேரமைச்சராகக் கருதுக. சப்தசமுத்திரங்களுங் கரைபுரண்டு மேல்வந்தாலொத்த பேரிடர் வந்தாலு முரனழியாது கடிதிற்சென்று கருமமுடிக்கு முள்ளக்கிளர்ச்சியைத் தரும் மானத்தை யுற்றுழியுத வும் உயிர்த்தோழனுகவும், மூலப்படையாகவுங் கருதுக. நெறி யல்லா நெறிக்கண் செல்லுங்கால் அடுத்துநின்று நல்வழிப்படுத் தும் மாண்புடைய நாணத்தை நல்லாறுய்க்கும் நற்குரவராகக் கரு துக. இவ்வாறு வாழ்க்கையைச் செம்மைசெய்யப் பெரும் பயன் கருதிய பெருங்கருமங்களையெல்லாம் அஞ்சாநெஞ்சமுங் கலங்காச் சித்தமு முடையராய்க் கடிதிற் சென்று முடிக்கும் வீரவாழ்க்கையும் கைகூடும். இவ்வீரவாழ்க்கை தனக்குரியதோர் மனச்சாந்தியோடு கூடி, நித்தியாநித்தியவஸ்து விவேகமும், மனமொழி மெய்களிற்றூய் மையும் உடையராய், சிவபரஞ்சுடரையே பொருளெனக் கொண்டு அவலம் கவலைகையா றச்சமாகிய கலக்கங்க ளறவே நீங்கி, சிவ போகப்பெருவாழ்வெய்திப் பேரின்பப் பெருக்கிற் றிளைக்கும் சிவ தொண்டர் நிலையைக் காலகதியிலுதவ வல்லதோர் சாதனமாகவும் கருதத்தக்கது.

---

*மனிதவாழ்க்கை சிறப்பெய்தும் பொருட்டுச் சமுதாயவாழ்க்கை செவ்விதி னமைக்கப்படவேண்டு மென்னுமுண்மை நம்முன்னோர் நன்கறிந்ததொன்று. "என் கற் புடை மனைவியும் நன்னெறி யொழுகும் மக்களு மறிவால் மேம்பட்டவர். என்னினை யாரும் என் சொல்வழிநிற்பர், அரசனே அறம்பேணி மறங்கடிந்து குடியோம்பி வாழ் வான். யான் வாழுமூரில் ஐம்பொறியடக்கல் முதலிய பெருமுயற்சிகளால் மனச்சாந்தி பெற்று நன்னெறிநிற்கும் ஆன்றோரும் பலர் உளர். ஆதலால் எனக்குச் சுகமேயன் றித் துன்பமில்லை" யென்னுங் கருத்தமையச் சீர்சால் சங்கப் புலவரொருவர் பாடிய செய்யுளொன்று சிறப்பினமைத்த சமுதாய வாழ்க்கை மனிதர் வாழ்க்கையைச் சீர்ப் படுத்தற்குப் பெரிது முபகாரமாகுமென்னு 'முண்மையை நன்கு வலியுறுத்தும்.

செய்யுள் வருமாறு:—

**யாண்டு பலவாக நரையில வாகுதல்**
**யாங்காகியரென வினவுதிராயின்**
**மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்**
**யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனு**
**மல்லவை செய்யான் காக்கு மதன்றலை**
**யான்றவிந் தடங்கிய கொள்கைச்**
**சான்றோர் பலர்யான் வாழுமூரே.**

# 5. நாம் யார்?

அல்லும் பகலும் லௌகீகவிடயங்களிலேயே மனத்தைச் செலுத்தி உண்மைக்குச் சேய்மையில் நிற்கும் நம்மனோரிற் பெரும்பாலோர்க்கு "நாம் யார்?" என்னும் இக்கேள்வி சிறிது சிந்தித்தற் கிடந்தருகின்றது.

சிலர் "இதுவென்ன பழங்கதை யாயிற்றே. தத்தம் மதம் நிறுத் தப்புகும் சமயநூல்வல்லார் யாவரும் இதைப்பற்றித் தானே பேசியிருக்கின்றார்கள்" என்று கருதக்கூடும். "நாம் யார்?" என்னவே சிலர் "நாம் மக்கள்" என்றும், சிலர் "நாம் பெற்றோரின் பிள்ளைகள்" என்றும், நகைச்சுவை ததும்பப் பதில் கூறி அமைதல்கூடும்.

ஆனால், இன்றே மற்றென்றே ஒவ்வொருவரும் இக்கேள்வியைத் தம்முள்ளே வினவவும், அதுபற்றி யாராயவும், ஆராய்ந்து அநுபவ வாயிலாக அறியவும் வேண்டியவர்களாக இருக்கின்றனர். ஏனெனில், வீடு பேற்றிற்கு இன்றியமையாத சாதனம் அதுவேயாம். "தன்னையறிந்தாற் றலைவனை யறியலாம்" என்பது பெரியோர் வாக்கு மாதலின்.

### உடலா?

நிலம், நீர், தீ, வளி வெளி என்னும் ஐம்பூதங்களாலாய இவ்வுடல்தானு நாமென்னின், நாம் உறக்கத்திலிருக்குங்கால் அறிவு நிகழக் காண்கின்றேமில்லை. மேலும், உடல் பிரேதமாய்க் கிடக்கும் போது உடலுக்கென ஓர் அறிவு நிகழக் காண்கின்றேமில்லை. ஆகவே, உடம்பு அறியமாட்டாது என்பது பிரத்தியட்சம். ஆனால், நாம் அறியுந்தன்மையுள்ளேம். அறியுந்தன்மையுள்ள நாம் உடலாதல் ஒருபோதும் சாலாது. எனவே, நாம் உடலின் வேறானவொரு விழுப்பொருள் என்பது வெள்ளிடைமலையாம்.

### ஐம்பொறிகளா?

இனி, உடலிலுள்ள மெய், வாய், கண், மூக்குச் செவிகளாகிய ஐம்பொறிகளையும் அடிப்படையாகக் கொண்டு எழும் ஐம்புலன்கள் தாம் நாமோவெனின், அவைதாமும் உறக்கத்தின்கண் விடயங்களை அறிய மாட்டாவாகின்றன. நாம் உறங்குங்கால், அவை ஒடுங்கி நிற்கின்றன. ஆனால், நாம் விழித்திருக்குங்கால், அவை ஒவ்வொரு பொறியாக விடயத்தை அறிகின்றன வன்றோவெனின், அற்றன்று; என்னை? அவை ஒன்றையொன்று அறியமாட்டா. நா ருசியையறியுமேயன்றி இன்னிசைக் கீதத்தை அறியமாட்டாது. அவ்வாறே, நறுமணத்தை மூக்கே முகருமன்றிக் கண் அதனை அறியாது. ஆகவே, மெய், வாய், கண், மூக்குச், செவியாதியவற்றைக் கொண்டு விடயங்களை அறியும் நாம் இவற்றினும் வேறுவோம் என்பதும் வெளிப்படை.

### பிராணவாயுவா?

இவ்வைம்பொறிகளையும் கொண்டு விடயங்களை அறியக்கூடியது பிராணவாயுவாகலின், நாம் பிராணவாயுவோ வெனின், அதுவுமன்று. என்னை, உடம்பு உறங்குமிடத்து பிராணவாயு இயங்கினும் விடயங்களை அறியமுடியாதாதலினென்க. ஆகவே, பிராணவாயுவை அடக்கியும் விட்டும் நிற்கும் யாம் அதனினும் வேருவோம் என்பது தேற்றம்.

### அந்தக்கரணங்களா?

பின், மனம். புத்தி, சித்தம் அகங்காரம் என்னும் அந்தக் கரணங்களே நாமாவோமா என்று ஆராய்ந்து பார்க்குமிடத்து, நாம் அவையுமன்று என்று தெரியக்கூடியதாக இருக்கிறது. ஏனெனில், அவையும் ஒன்றையொன்று அறியமாட்டா. தவிர, அவற்றுள் ஒன்று அறிவதை மற்றென்று அறிதலின்றி வெவ்வேறு தொழில்களைப் பொருந்தா நிற்கும். ஆனல், நாமோ அந்தக்கரணங்கள் நான்கினையும் அறிந்து, அவற்றை விடயங்களிற் செல்ல விடாது தடுத்தும், வேண்டுழி விடயங்களிற் செலுத்தியும் அவற்றின்வேருக நின்று "யான்" "எனது" என்று கூறும் நிலையில் நிற்கக்காண்கிறோம்.

### பஞ்சகோசங்களல்ல

இவ்வாறே ஆனந்தமயகோசம் விஞ்ஞானமய கோசம், பிராணமயகோசம், மனோமயகோசம் அன்னமயகோசம் என்னும் ஐந்து கோசங்களும் நாமல்லவென்று காண்கிறோம்.

### சித்தாகிய ஆன்மா

ஆகவே இவற்றினின்றும் வேருய், இவற்றோடுடனுறைந்து இவற்றைக்கொண்டு விடயங்களை அறியும் நாம் சித்துப்பொருளாவோம். சிததுப்பொருளெனினும் அறிவுமயமான பொருளெனினுமமையும். இப்பொருளை உயிர் என்றும், பசுவென்றும், ஆன்மாவென்றும், வழங்குவோர் ஆன்றோர். நாம் எல்லோரும் ஆன்மாக்கள். ஒரோவழி அன்னமயகோசம் முதலியவற்றையும் ஆன்மாவென அழைப்பதுமுண்டு. அது எதுபோலுமெனின். ஒளிகாலும் விளக்கிருந்த தகழியையும் விளக்கு என்றற் போலென்க.
இதுபற்றியே தாயுமான சுவாமிகளும்,

" ஐந்துபுல னைம்பூதங் கரணமாதி
யடுத்தகுண மத்தனையு மல்லை யல்லை
யிந்தவுட லறிவறியா மையுநீ யல்லை
யாதொன்று பற்றினத னியல்பாய் நின்று
பந்தமறும் பளிங்கனைய சித்துநீ"

என்று அருளிப் போந்தார்.

# 6. பழக்கம்

புதிய இலேகினி யலகால் எழுதுவதிலும், சிறிதுகாலம் பழகிய தொன்ருல் எழுதுவது இலகுவாயிருக்கின்றது ஒரு காகிதத்துண்டை ஒரு வகையில் மடித்தபின் அவ்வழியே மீட்டும் மடிக்க அது எளிதில் மடிகின்றது. புதுச்சட்டியில் அப்பஞ் சுடுபவள் அடிக்கடி எண்ணெய் பூசித் துடைத்துக்கொண்டு, ''இச்சட்டி பழகவில்லை'' யென வெறுப்புடன் கூறுகின்ருள். இங்ஙனம் சடப்பொருள்களும் சந்தர்ப்பத்திற்கேற்ப இசைந்து கொள்வதை நாம் வாழ்க்கையிற் காண்கிருேம்.

இனி விலங்கினம், பறவை முதலியனவும் சூழலுக்கியையப் பழகிக்கொள்வதையும் நாம் அறிகிருேம். பாடசாலையில் உணவு நேர மணியடித்தவுடன் நாய்களும் காகங்களும் அப்பாடசாலையைச் சூழ்ந்து விடுகின்றன. கோயிலிற் பூசையாகும்பொழுது மணி கிலுங்க நந்திக்கு வைக்கும் புற்கையை யுண்ணக் காகங்கள் கூட்டங் கூட்டமாய் வந்துவிடுகின்றன. நாள்தோறுஞ் சென்ற பழக்கத்தால் குறித்த நேரத்தில் உணவின்றி மணியடிப்பினும் அவை வந்து சேர்வது அவற்றின் பழக்கமாகின்றது. கூட்டிலடைக்கப் பட்ட புலியானது, ஒரு முறை கூடு உடைந்துபோக, புறப்பட்டு உலாவியபின்பு, தான் பழகாத வெளியிடங்களில் நிற்பதை விரும்பாது மீண்டும் அக்கூட்டை யடைந்தது. கோழி பன்னுள் குப்பை கிளறிய பழக்கத்தால், கற்பாறை யாயினுங் கிளறும். நெற்பொலி மேல் நிற்பினுங் கிளறும். இவ்வாறு விலங்கினங்களையும் பறவைகளையும் பழக்கம் நாளடைவிற் பிணித்துவிட அது அவற்றின் சுபாவமாக மாறுகின்றது.

இங்ஙனமே பழக்கமானது மனிதனையும் பிணித்து விடுகின்றது. காசநோய் படர்ந்த குருடர் கண்ணேய் தீர்ந்து விழித்த போதிலும் தாங்கொண்ட கோலைக் கைவிடார். ஆங்கில யுத்த வீரருள் தலை சிறந்து விளங்கிய வெலிங்ரன் பழக்கம் சுபாவத்திலும் பதின் மடங்கு வலியுடைத்தெனக் கூறினன். போர் முனையிற் பல்காற் பயின்ற அவனே அக்கூற்றின் உண்மையை நன்குணர்வன். போர்த்தொழிலிலிருந்தும் இளைப்பாறி யிருந்த ஒரு வீரன் ஒருமுறை கையில் ஒரு பொருளைத் தூக்கிக்கொண்டு வழி நடந்து செல்லும் பொழுது, இளஞ்சிருர் கூடி மறைந்து நின்று அவனைப் பரிகாசஞ் செய்தற் பொருட்டு' ''கவனம்'' என உரத்துக் கூற, உடனே கையிலிருந்த பொருளையும் நெகிழவிட்டு, அசையாது நிமிர்ந்து

னின்ருன் என்னும் கதையை யாவரும் அறிவர். பயிற்சிக் கழகத்தில் முன்னொருகாற் பழகிய பழக்கம் தள்ளாடும் வயதில் தெருவில் திரியும்பொழுதும் அவனைவிட்டு நீங்கவில்லை யென்பது இதனுற்றெரிகின்றது. ஆகவே, பழக்கம் நரம்பு மண்டலத்தை நாளடைவிற் பிணித்துவிட மூளையின் தொழிற்பாடின்றி அது பிரதிகரணத் தொழிலாய் விடுகின்றது.

சமுதாயத்தின் மரபினையும் வழக்கத்தினையும் வரம்பு கடவா வண்ணம் நிலைபெறச் செய்வதும் இதுவேயாகும். விதிகளுக்கிணங்க மக்களை ஒழுகச் செய்வதும், சிறிதும் விரும்ப முடியாத தொழில்களைச் செய்து வாழும் மக்களை அவ்வத் தொழில்களையே புரியச் செய்வதும், வாடை வீசினும் புயலடிப்பினும் சுக்கானை நெகிழவிடாது பிடித்திருக்கும் மாலுமியை அத்தொழிலில் நிலைநாட்டுவதும், வேறு எத்தொழிலைச் செய்கின்ருனே அவனை அத் தொழிலில் விருப்பமுறச் செய்வதும் இப்பழக்கமேயாகும்; ஏனெனில் தாம் பழகிய தொழிலைவிட வேறு தொழிலைச் செய்வதற்கு நாட்டமும் வன்மையுமிலராகின்றனர். வண்டியிழுக்கும் எருத்தின் கழுத்திற் காணப்படும் தழும்புபோல, வியாபாரி, நியாயதுரந்தரன் முதலியோரில் அவ்வத் தொழிலுக்கேற்ற குணங்கள் இருபத்தைந்தாமாண்டளவிலேயே தோற்றிவிடுகின்றன. ஆகவே, முப்பதாமாண்டளவில் ஒருவனின் ஒழுக்கமும் சிலையிலெழுத்துப் போலாகின்றது இதனை நன்குணர்ந்த ஔவையாரும்

''முப்பதா மாண்டளவில் மூன்றற் ஞெருபொருளைத்
தப்பாமற் றம்முட் பெருனயின் — செப்பும்
கலையளவே யாகுமாங் காரிகையார் தங்கண்
முலையளவே யாகுமா மூப்பு'', எனக் கூறினர்.

இருபதுக்கும் முப்பதுக்கு மிடைப்பட்ட காலம் தொழிலுக்கேற்ற வன்மையைப் பெற முக்கியமாதல் போன்று அதற்கு முற்பட்ட காலம் ஒருவனின் பழக்க வழக்கங்கள் மனத்திற் பதிவதற்கு முக்கிய காலமாகும். இவ்வயதில் எவ்வகைப் பழக்கத்தைப் பழகினும் அது ஒருவனை விட்டு நீங்காதென்பதை நாம் எமது அநுபவத்திற் காண்கின்ருேம். நாம் பெறவிரும்பும் பழக்கங்களையும் இக்காலத்திலேயே பழகி, எமது நரம்பு மண்டலத்தை எமக்குப் பகையாக்காது நட்பாக்கிக் கொள்ளுதல் வேண்டும். ஒழுக்கமென்னுந் திரவியத்தை இக்காலத்தில் ஈட்டினோர், தம் வாணுளெல்லாம் இன்பமாய்க் கழிப்பதை யெங்குங் காண்கிருேம். ஆகவே நாம் நாள்தோறும் புரியும் கடமைகளைப் பிரதிகரணத் தொழிலாக்கி

விடின், சிறப்புடை யெண்ணங்களில் எமது மனத்தை யீடுபடச் செய்வதற்கு எமக்குப் போதிய நேரமிருக்கும். உதாரணமாக, பல் விளக்கல், தலை சீவுதல், உடுத்தல் முதலிய தொழில்களெல்லாம் எமக்குப் பிரதிகரணத் தொழிலாகிவிட்டன. மூளையின் தொழிற்பாடு சிறிதும் வேண்டப்படாதிருக்கவே இத்தொழில்கள் நடைபெறுகின்றன. இவ்வாறே வலை பின்னுஞ் செம்படவனும், பெட்டி கடகமிழைக்கும் பன்னவேலைக்காரனும் மனத்தை வேறு விஷயங்களில் ஈடுபடுத்திக்கொண்டும் தத்தமது தொழில்களைச் செய்கின்றனர். இவர்களைப்போன்று நாமும் எமது தொழிலைப் பிரதிகரணத் தொழிலாக்கிவிடின், எமது மனத்தை மேலான எண்ணங்களில் ஈடுபடச் செய்யலாம்.

இனி ஒருவன் அவதானிக்க வேண்டியன இரண்டுள; ஒன்று புதிய நற்பழக்கமொன்றைப் பழகுதல், மற்றது முன் பழகிய தீய பழக்கத்தை நீக்குதல். இவற்றுள் எதனைச் செய்ய விரும்பினும் தீவிர வைராக்கியம் முதலில் வேண்டும். பழைய வாசனையோடு முரணும் கூட்டத்தை ஆக்கிக்கொள்ளுதலோடு புதிய பழக்கத்தை நிலை நாட்டுவதற்கு உதவி புரியும் ஏது எதுவுண்டோ அதனைக் கைக்கொள்ளல் வேண்டும். ஒரு தீய பழக்கத்தை விடவேண்டுமெனத் தீர்மானஞ் செய்யும்பொழுது, தான் அதனைக் கடைசி வரையும் நிறைவேற்றக் கூடுமோ என்பதை நன்கு ஆராய்ந்து அங்ஙனம் நிறைவேற்றக் கூடுமாயின் அதனை யாவருமறியப் பிரசித்தம் செய்து வலியுறுத்தல் வேண்டும். பின்பு பெலவீனத்தால் அதனை நெகிழவிட நினைக்கும் வேளைகளில் உலகம் தன்னை மதிக்க மாட்டாது என்ற எண்ணம் ஒரு வேலியாய் நின்று இத்தீர்மானத்தைக் காத்துக்கொள்ளும். அத்தீய பழக்கத்தை விட்ட பழக்கம் நிலைத்துவிட அப்பெலவீனமும் அற்றுவிடும். ஒரு புதிய பழக்கத்தைத் தொடங்கும்பொழுது அதனை அழிக்கும் ஏதுக்கள் தடை செய்யாவண்ணம் பாதுகாத்தல் வேண்டும். அத்தடைகள் நாளுக்கு நாள் பின்போடப்பட, புதிய பழக்கம் சிறிது சிறிதாய் வலியூன்றத் தொடங்கும். பின் எது வந்து தாக்கினும் அது வலி குன்ருது நிலைத்துவிடும். ஆகவே அது கைவரமுன் புற நடைகள் ஏற்படுமாயின், கையில் வைத்துச் சுற்றப்படும் நூற்பந்தை ஒருமுறை வழுவவிடின் அதிற் பலமுறை சுற்றிய சுற்றுக் குலையுமாறுபோல, இவனது வளர்ச்சியும் தேய்வுறும். மூளையின் தொழிற்பாடின்றி நரம்புகள் தாமாகவே அப்பழக்கத்தைப் பிழையின்றிச் செய்யும், அதன்மேற் கண்ணுங்கருத்துமுடையனு யிருத்தல் வேண்டும்.

இளமையில் தீய பழக்கமொன்றைப் பழகிய ஒருவன், தனது அறிவு முதிர்ச்சியால் அதனை நீக்க முயலும்பொழுது இரண்டற்கு மிடையே போர் நிகழ்கின்றது. அதன்கண் அறிவு ஒரு முறையாயினும் தோல்வியடையாதிருத்தல் வேண்டும். அங்ஙனம் பன்முறை வென்ற பயிற்சியினுல் அது எப்பொழுதும் வெல்லும் சக்தியைப் பெற்றுவிடும். இதுவே மனோ வளர்ச்சிக்கு ஒரு முக்கிய வழியாகும். முதலிலேயே அறிவு தோற்றுவிடின் மனத்தின்கண்ணுள்ள உற்சாகமும் அழிந்துவிடும். தான் முன் பழகிய பழக்கத்தை விட்டுவிட விரும்புவோன், போதிய ஆற்றலுடையனுயின் தொடக்கத்திலேயே முற்றிலும் விட எத்தனிக்க வேண்டும். தினந்தோறும் ஒரு கட்டுச் சுருட்டுக் குடிப்பவன், அப்பழக்கத்தை அறவே ஒழிக்க விரும்புவானுயின் அதனை ஒவ்வொன்ருய்க் குறைத்து வருவதிலும் பார்க்க, முதன் முறையில் முற்ருய் விட்டுவிடுதல் நன்று. இவ்வாறே இலாகிரி வஸ்து முதலியன உபயோகிப்பவனும், அவற்றைச் சிறிது சிறிதாகக் குறைப்பதிலும் பார்க்க முற்றிலும் விட்டுவிடுதல் இலகுவாயிருக்கும். கொஞ்ச நாட்களுக்குக் கஷ்டப்படுவானேனும் பின்பு சந்தோஷப்படுவான். கம்பங்கூத்தாடியைப் போன்று தான் கொண்ட விரதத்திற் கண்ணுங்கருத்துமாயிருப்பதோடு ஒரு முறையாயினும் தோல்வியடையாவண்ணம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளல் வேண்டும். தனது தீய பழக்கத்தை விடவேண்டுமென நாளுக்கு நாள் தீர்மானஞ் செய்வதிலேயே காலத்தைக் கழிப்பவன், ஒரு கிணற்றைக் கடக்கவிரும்பி ஓடிச்சென்று அதன் கட்டிலேயே நின்று பன்முறை திரும்பிச் செல்பவனை ஒப்பான். தான் எண்ணியதை ஒருபொழுதும் முடிக்கமாட்டான்.

நல்லொழுக்கத்தைப் பற்றிய அறிவு நிரம்பப் பெற்றவனுயினுஞ் சரி, அதற்கேற்ற மனோநிலையுடையனுயினுஞ் சரி ஒழுகலாற்றிற்கேற்ற சந்தர்ப்பம் வாய்த்தவிடத்தில் அதனை உபயோகியாது விடுவானுயின் அவன் ஒருபொழுதும் திருந்தமாட்டான்.

ஒருவன் நல்ல விஷயங்களில் ஈடுபடக்கூடிய மனப்பான்மையுடையோனுய்த் தோன்றியும் அவ்வாறே போதித்தும், பின்பு சந்தர்ப்பம் நேரிட, தான் போதித்ததைத் தானே செய்துகாட்டாது விடுகின்ருன். அவனைப் போன்று யாவராலும் வெறுக்கத்தக்கவன் வேறெவனுமில்லை. சைவப் பிள்ளைகள் சைவப் பாடசாலையிற் கற்க வேண்டுமென மேடைகளில் நின்று போதனை செய்துகொண்டு தனது மகனைக் கிறிஸ்தவ பாடசாலைக்கனுப்பும் ஒரு தந்தையை இதற்குதாரணமாகக் கொள்ளலாம். நாடகங்களைப் பார்க்கும்பொழுதும்

கதைகளை வாசிக்கும்பொழுதும் கண்ணீர் ததும்பக் கரைந்துருகு வாராயினும் பக்கத்து வீட்டினுள்ளோர் பசியால் வருந்தப் பார்த் திருக்கும் வன்கண்மையுடையோரும் இவரேயாவர். மனத்தில் நல் லுணர்ச்சி தோன்றின் அதனைச் செயல்மூலம் செலவிடல் வேண் டும். அங்ஙனம் செய்யாது விடுவானுயின் அதுவே பழக்கமாகி, நல்லுணர்ச்சி யெல்லாம் வீணே கழிந்துவிடும். மனத்தினை இப் பொழுது அலையய விடுவானுயின் அது எப்பொழுதும் அலைந்து திரியும் பழக்கத்தைப் பெற்றுவிடும். ஆகலின் ஒருவன் எப்பொழு தும் நற்காரியங்களில் முயற்சிப்பவனுயிருத்தல் வேண்டும். சிறிய காரியங்களைச் செய்யும்பொழுதும் வரம்பும் வரையறையு மிருத்தல் வேண்டும். மன அடக்கத்தைச் சிறிய காரியங்களிலேயே பழகி வருவானுயின் பெரிய காரியங்கள் சம்பவிக்கும்பொழுதும் சோதனை யென்னும் சண்டமாருதம் வீசும்பொழுதும் யாவரும் சருகுபோற் சுழல இவன் மலைபோன்று கலங்காது நிற்பன்.

தீய பழக்கங்களைப் பழகுவதால் ஒருவன் இம்மையில் அநுப விக்கும் துன்பத்திலும் பார்க்க, அவனுக்கு மறுமையில் சம்பவிக் கும் நரகம் கொடிதன்று. முதுமையில் இவ்வுடம்பு பழக்கத்துக்கே கொள்கலமாகிவிடும் என இளைஞர் உணர்வாராயின், மூளை மெதுவா யிருக்கும் காலத்திலேயே நற்பழக்கங்களைப் பழகிக்கொள்ள எத்த னிப்பர். நல்லதாயினுஞ் சரி அல்லதாயினுஞ் சரி நமது விதிக்கு நாமே காரணமாகின்றேம். ஒவ்வொரு செயலும் மூளையில் ஒவ் வொரு தழும்பினை ஆக்குகின்றது. கட்குடிகாரன், "இன்று குடிப் பதைக் கணக்கில் வையாது விடுவோம்" எனச் சொல்லிக்கொண்டு குடிக்கிறன். அவன் அதைக் கணக்கில் வையாது விடக்கூடும். சித்திரபுத்திரனும் கருணையால் மறந்துவிடவுங் கூடும். ஆனல் அவனது நரம்புகளோ ஒருபொழுதும் மறக்கமாட்டா. மறுமுறை சோதனை வரும்பொழுது அவை அவனுக்கு மாறுகத் தொழிற்படும். நாம் செய்வதொன்றும் அழிந்து போவதில்லை. தினந்தோறுங் குடிக்க ஒருவன் குடிகாரனுவதுபோல, நற்காரியங்களிற் பழக அவன் தூயவனுகின்றுன். உலகத்தில் முடியாத காரியமென ஒன் றில்லை. கருதியவதனையே சிந்தையில் வைத்துப் படிப்படியாக ஏறுவானுயின், தான் கருதிய குறிக்கோளென்னும் மலையின் உச்சி யில் நிற்கக் காண்பான்.

---

# 7. காப்பது விரதம்

ஆத்தி சூடியின் அச்சாணிபோலத் திகழும் இச்சிறு சொற்றொடருக்குப் பலரும் பல்வேறு விதமாக உரைகண்டனர். விரதத்தைக் காப்பாயாக என்பதேயிதன் பொருள். 'காப்பது' வியங்கோளாதற்கு இலக்கணம் இலக்கண நூலகத்துக் கண்டிலமாதலின், இவ்வுரை பொருந்துமா றெங்ஙனமெனிற் கூறுதும். "உள்ளப்படுவன வுள்ளி........." எனுந் தொடக்கத்துத் திருக்கோவைச் செய்யுள் உரையில் மறப்பது என்பது 'வியங்கோள்' என அரியதோர் நுட்ப இலக்கணக் குறிப்பினைப் பேராசிரியர் பெய்திருத்தல் கண்டின்புறுக. இதனையறியாதார் காப்பது என்னும் வியங்கோள் வினைக்குத் தத்தம் மனம் போனவாறு உரை கண்டிழுக்குற்றனரென்க.

இப்பொழுது பலவாறு இடர்ப்பட்டுப் பொருளுரைக்கப்படுகின்ற 'ஆறுவது சினம்' என்பதற்கும் இனிது பொருள் விளங்குதல் பெற்றும். இவ்வாத்திசூடி நூலில் ஓதப்பட்டுள்ள எல்லா ஒழுக்கங்களும் உடம்பாட்டாலும் எதிர்மறையாலும் முன்னிலை ஏவலொருமை வாய்பாட்டானே வந்துகொண்டிருப்ப, இவ்விரண்டு செய்யுள்மட்டும் ஆறுவதெனவும் காப்பதெனவும் வேறு வாய்பாடு போல்வனவற்றுற் காணப்படுகின்றன. இனம்பற்றி இவையும் முன்னிலையொருமையேவல் வினைச்சொல்லாகவே நூலாசிரியர் கருதியிருத்தல் வேண்டுமென்பது தெற்றெனத் துணியக்கிடக்கும். இவ்வாற்றுனும் இவை முன்னிலையொருமை யேவற்பொருள் பயக்கும் வியங்கோள் வினையாகக் கொள்ளுதலே தகுதியுடைத்தென்பது காண்க. வியங்கோள் வினை ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவினை; ஈண்டு இனம்பற்றி முன்னிலையேவ லொருமைமேல் நின்றது. ஈண்டுவந்த வியங்கோள் விதித்தற்பொருளில் வந்தது. ஏவலும் விதித்தற்பாற் படுமாதலின், ஈங்கு விதித்தற்பொருளை ஏவற்பொருளெனத் தெரிந்துகொள்க.

இனி, விரதம் என்பதனை நோக்குவாம். அந்தக் கரணங்கள் பொறிவாயிலாற் புலன்களிற் செல்லாது தூயவாதற்பொருட்டு அநுட்டிக்கப்படுவது விரதம். திருக்குறளாசிரியர் இவ்விரதத்தைச் செவ்வனே தொகைவகைப்படுத்தி விரித்துக் கூறியிருத்தலின் அவர்தம் நூலினையே ஈண்டு நோக்குவாம். இவ்வாசிரியர் துறவறப் பகுதியில் விரதத்தைத் தவமும் தவங்காத்தலும் என வகுத்து இவ்விரண்டற்கும் காரணமாகிய அருளுடைமையினை முதற்கண் விளக்

கின்றார். புலால் மறுத்தலும் தவமும் தவமெனவும் ஏனைய அதிகாரங்கள் தவங்காத்தலெனவுங் கொள்க. அந்தக்கரணங்கள் புலன்களிற் செல்லாது நிற்றற்குதவி புரிவது புலால் மறுத்தல் முதலாய தவங்களாம். பசித்துன்பம் பொறுத்தற் பொருட்டுப் பட்டினி கிடத்தலும் தவத்தின்பாற்படும். "உண்ணாது நோற்பார் பெரியர்" என இஃது எடுத்தோதப்பட்டுளது. இந்நூற்றாண்டில் விளங்கிய காந்தியடிகள் உண்ணாமையைப் பன்முறை தாமே செய்து காட்டியதுமன்றி அதன் இன்றியமையாமையினையும் நன்கு விளக்கியுள்ளார். கிறிஸ்துநாதரும் உண்ணாமை விரதத்தை மேற் கொண்டொழுகிய பெரியாராவர்.

புலான் மறுத்து உயிர்கண் மேல் அருண் முதிர்ந்துழிச்செய்ய வருவது தவம். இது, மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கலும், கோடைக்கண் வெயினிலை நிற்றலும் மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு, அவற்றால் தம்முயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்துப் பிறவுயிர்களை யோம்புதல் என்பர் பரிமேலழகரும். இங்ஙனம் நோற்றலால் ஒருவன் தன்னுயிரைத் தனக்குரித்தாகப் பெறுவன். அங்ஙனம் நிற்புழிக் கூடாவொழுக்கம், கள்ளல், பொய்மை, வெகுளி, இன்னாசெய்தல், கொலை முதலிய பல தாக்கல்கள் வாசனைபற்றி வந்து தாக்கும். தாக்குழி அவ்வெல்லைக்கண் தாம் மேற்கொண்ட தவத்தைத் தமக்கு ஐயுற நின்றாற்றலால் தளர்ச்சி தோன்றிக் கைவிட வேண்டுவது போற்றோன்றும். தோன்றுங்கால் கூடாவொழுக்கம் முதலியவற்றைக் கடிந்து அவற்றால் தம் தவம் அழியாமல் காத்தல் வேண்டும்.

இங்ஙனம் கூடாவொழுக்கம் முதற் கொல்லாமையீறாகக் கூறப்பட்டன. தவம் அழியாமற் காத்தலன்றி யோக நூலாசிரியர் பதஞ்சலியார் கூறுமாறுபோலத் தவத்திற்குக் காரணமல்ல என்பதனைக் குறிப்பித்தற்பொருட்டு ஆசிரியர் வள்ளுவனார் அவற்றைத் தவத்தின்பின் வைத்துக் கூறினார். யோக நூலார் அவற்றை இயமமெனத் தொகுத்து நியமத்தின்பாற்படும் தவத்திற்குமுன் வைத்துக் கூறுவர்.

முதற்கண் இல்லறத்தில் பிற உயிர்கண்மேலுள்ள அன்பு, அருள்களால் கூடாவொழுக்கம் முதலியன மேற்கொள்ளப்படும். ஆனால் அவை அங்கு மறக்கப்படுவதில்லை. நினைப்பின்கண் இருத்தலன்றியும் முற்றாகச் செய்யப்படுதற்கு முடிவனவுமல்ல. செய்து கொண்டு வரும் அளவிற்கேற்ப, தவத்தின்கட் பற்றுண்டாகித்

தவம் மேற்கொள்ளப்படும். பின் தம்பாற்கிடந்த கூடாவொழுக்கம் முதலியன தவத்தின் வலியால் முற்றுக ஒழிக்கப்படுகின்றன. அருளுடைமையும் புலால் மறுத்தலும் துறவறத்திற்குக் காரணம் என்பது துறவறத்தின்கட் கூறப்பட்டனவாயினும் அவை இல்லறத்தின் ஒழிபெனவுங்கொண்டு அவை இல்லறத்தார்க்கும் உரியவெனக் கொள்க. ஆசிரியர் வள்ளுவர் தவம் என்றது யோகத்தின் எட்டுறுப்புக்களின் இரண்டாம் உறுப்பாகிய ஐவகைப்பட்ட நியமத்தின் வகையாகிய தவ நியமத்தையேயன்று யோகத்தின் எட்டுறுப்புமாமெனக் கொள்க. இங்ஙனம், "ஐம்புல வேடரின் அயர்ந்தனை" என மெய்கண்ட நாயனரும் தவமென்னும் பெயரால் யோகத்தைக் குறித்திருத்தல் ஈண்டுக் கவனிக்கற்பாற்று நிற்க,

முன்னர் குறிப்பிட்டாங்கு தவங் காப்புழி அதன் பயனுகிய ஞானமுண்டாகும். ஞானமாவது வீடு பயக்கு முணர்வென்பர் பரிமேலழகர். முதற்கண் தோற்றமுடையனயாவும் நிலையுதலிலவாந் தன்மையுடையனவென உணர்ந்து, புறமாகிய செல்வத்தின் கண்ணும் உளதாம் பற்றினை அவற்றின் நிலைமை நோக்கித் துறந்து பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் ஐயந்திரிபகற்றி ஒரோவழித் துறக்கப்பட்ட புலன்கண்மேற் பழைய பயிற்சி வயத்தான் நினைவு செல்லாது மெய்ப்பொருளுணர்வான் அறிந்தவிடத்து அவனுக்கு அப்பொழுதே எஞ்ஞான்றும் ஒரு நிலையனும் இயல்புண்டாகும். இதுவே வீடுபேருகும். எனவே விரதங் காப்பதின் முடிந்த முடிபு வீடடைதலாதலின், இச்சிறு சொற்ருெடரை ஒவ்வொருவரும் மனத்திற் படியச்செய்து அதன்படி ஒழுகவேண்டும். பண்டைக்காலத்தில் சிறுபிள்ளைகட்குப் பயிற்றும் பாடம்போல வைத்துப் பாடிய சிறு சொற்ருெடர் ஒவ்வொன்றைப் பற்றியும் ஒவ்வொரு நூல் எழுதலாம். இக்காலத்தில் இளைஞர் பாடித்திரியும் பாடல்களுக்கும் பண்டைப் புலவர் இளைஞர்கட்கென வகுத்த பாடல்களுக்குமுள்ள வேற்றுமையிதுவே. இளமைதொட்டே பிள்ளைகளை அறநெறியில் வளர்த்துவர வேண்டுமென்ற பெருங் கொள்கையுடையராய் அறப்போதனைகளைச் சிறுசிறு சொற்ருெடரில் அமைத்தார்கள். ஆனுல் இக்காலத்தில் வெறுங் காட்சிப்பயனென்றையே கருதிப் "பனைமரமே! பனைமரமே! ஏன் வளர்ந்தாய் பனைமரமே?" என்பதுபோன்ற சிறு பாடல்களைப் பயிலவேண்டுமென இக்கால ஆசிரியர்கள் வற்புறுத்துகின்ருர்கள். ஊன்றிப் பார்த்தால் உண்மை புலப்படும்.

# 8. ஓவியமும் காவியமும்

'ஓவியம்' என்பது தமிழ்ச் சொல். துகிலிகைக் கோலினுலும் வண்ணத்தினுலும் எழுதப்படும் உருவங்கள் எல்லாம் ஓவியம் எனப்படும். காவியம் என்பது வடமொழியில் 'தத்திதாந்தப்' பெயர்ச் சொல். தமிழில், காவியம் என்னும் சொல்வழக்குக் கடைச் சங்க காலத்திற்குப் பலயாண்டுகளுக்குப் பின்னரே உண்டாயிற்றென்று சொல்லல்வேண்டும். ஏனெனின், சீவக சிந்தாமணிக்கு உரைகண்ட ஆசிரியர் நச்சினுர்க்கினியர் ஓரிடத்திலே தொடர்நிலைச் செய்யுள் என்பது காவியம் அன்றென்றும் இரண்டன் இலக்கணமும் வேறு படுமென்றும், தொடர்நிலைச் செய்யுளென்பது தமிழுக்குச் சிறப்பு என்றும் கூறியிருக்கின்ருர். சிலப்பதிகாரம் சிந்தாமணி போல்வன தொடர்நிலைச் செய்யுள் நூல்களாகும். இவையிற்றை ஒப்ப வட மொழியில் வான்மீகமும் அதனை ஒப்பனவும் இருந்தன; பிற்றை ஞான்றைய வாசிரியன்மார் தொடர்நிலைச் செய்யுள் நூல்களை யும் காவியம் என்று வழங்குவாராயினர் என்க. எங்ஙனமாயினும், காவியம் என்பது பொருள் ஆழமும் படிக்குநர்க் கினிமையும் மெய்ப்பாடும் பயப்பதாய்ச் செய்யுளாலாக்கப்படும் நூல் என் பது தெளிவாகின்றது.

இனி, நான்மாடக்கூடலில் நிலைஇய அங்கயற்கண் அம்மை யாரின் உருவ எழிலை எடுத்து இனிது தெருட்டுவொன்வந்த பேராசிரிய ரான குமரகுருபரஅடிகள் 'தொடுக்குங்கடவுள்' என்ற முதலையுடைய செய்யுளில் ஓரிடத்தே "திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப்பார்த் திருக்கும் உயிர் ஓவியமே" என்று நாக்குளிர நயந்தெடுத்துக் கூறினுர். இந்த இடத்திலே ஓவியத்தின் செவ்விய இயல்பு சொல் லப்பட்டிருக்கின்றது; ஓவியத்தின் திருந்திய வரைவு இலக்கணம் இவ்வாசிரியர்போல் பிறர் எவராலும் தமிழிற் சொல்லப்பட்டிலது. அழகு ஒழுக எழுதப்படுவதுதான் ஓவியம் என்று பலர் கருதுகின் ருர்கள். ஆனுல், அஃது ஓவியத்தின் செவ்விய பெற்றிமையன்று, மற்றென்னையோவெனின், ஒரு பொருளின் பெற்றிகுறித்து அது சிறிதும் மாருமல் எழுதினுலும் அதன் இயல்பு உயிரில்லாதவழிச் சிறவாது; உயிரை ஓர் ஓவியம்வல்ல புலவன் யாங்ஙனம் வரைய மாட்டுவான்; மாட்டானன்றே. உயிரில், எல்லாவுறுப்புக்களும் சிறந்து அழகு துறுமிப் பிறரைக் கவரச் செய்தவழித்தான் புலப்படுமென்க. எழுதப்பட்ட ஓவியத்துக்கு உயிர் உண்டோ இல்லையோ என்று படிப்பார்தம் உள்ளத்தில் ஐயத்தைத் தோற்றுவிப்பதாகும். இக்

கருத்துணர்ந்தே குமரகுருபர அடிகளும் தமது மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழில் "உயிர் ஓவியமே" என அம்மையாரின் திருவழகினை எடுத்து மணிவாய் மலர்ந்தருளினர் என்பது. "திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப்பார்த்திருக்கும் உயிர் ஓவியமே" என்பதில் பார்த்திருக்கும் என்ற தொடரைப் பார்த்து இருக்கும் என்று பிரித்துக்கொண்டு பார்த்தலே ஆண்டு அமையவும், 'இருக்கும்' என்பதை என்கருதிப் பெய்தாராலெனின், அம்மையாரின் அருளொழுகும் திருவழகின் நோக்கத்திலே முற்றும் தங்கண்களைப் பதியவைத்து அவைதம்மைப் பிறண்டுச்செலுத்தாது சிறிதுகாலம் அவ்வழகினை நுகர்தலிலே கருத்தூன்றினராகலின் அச் சொற்பெய்தாரென்க. அதனுன் அவ்வோவியம் கண்டாரான் விரும்பப்படும் தன்மை நோக்கமாகிய திருவாற்றுறுமியதென்பதூஉம் அதுவே உண்மை ஓவியம் என்பதூஉம் பெறப்பட்டவாறு கண்டுணர்க. கம்பர் என்னும் புலவர்பெருமானும் தமது இராமாயணத்திலே அயோத்திநகரச் சிறப்பை எடுத்துரைப்பார், நகரப்படலத்திலே

"தாவில் பொற்றலத்தில் நற்றவத்தினேர்கள் தங்குதாட்
பூவுயிர்த்த கற்பகப் பொதும்பர்புக் கொதுங்குமால்
ஆவிஒத்த அன்புசேவல் கூவவந் தணைந்திடாது
ஓவியப் புருவின்மா டிருக்கவூடு பேடையே"

என அயோத்தி நகரத்தின் ஓவியச் சிறப்பினை எடுத்துக் கூறியிருக்கின்ருர். இந்தச் செய்யுளிலே புறவுப் பேடு ஒன்று தனதினிய சேவலைக் காணுதாக, வருந்தி அதனைத் தேடிப் போயிற்று. போயது, நகரக் கோட்டைமதிலில் அழகிய பெண்புறவு உருவத்தையணைந்து சேவல் இருப்பக்கண்டு தன் குரலில் சேவலைக் கூவவும் அஃது அவ்வுருவமே தனது இனிய பெட்டையென்று அதனையே நோக்கி வாராதிருப்ப, அதுகண்டு தன் சேவலோடு ஊடல் உண்டாகிய பேடை புலன்களை அடக்கிய திருவினையாளர் தங்கும் கற்பகச் சோலையில் போய் இருந்தது என்னும் பொருள் நன்கு சொல்லப் பட்டிருக்கின்றது. இங்கு மதிலில் ஓவியமாகச் செய்யப்பட்ட பெண் புருவை அஃது ஓவியமென்று அறியமாட்டாத புருச்சேவல் அதனை அணைந்து இருந்தது என்பது கம்பர் என்னும் புலவர்பெருமான் ஓவியத்தின் சிறப்பை விளக்கவந்த பகுதியாகும். ஈண்டும் ஓவியம் என்பது இதற் குயிருண்டு என்று கண்டவர் கருதும்படி எழுதப்படும் எழில் ஒழுகும் வடிவாம் என்பது இனிது புலனுகாநிற்கும். ஆதலால், ஓவியம் மக்களின் புறக்கண்ணை இன்புறுத்தும் ஒரு பொருள் என்று கடைப்பிடிக்க.

இனிக் காவியம் என்பது படிப்பார் மனத்திலே

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
உவகையே அச்சம் பெருமிதம்" என்ற

மெய்ப்பாடுகளைத் தோற்றுவிக்கும் ஒரு பொருளாம். சிந்தாமணி சிலப்பதிகாரம் இராமாயணம் கந்தபுராணம் பிரபுலிங்கலீலை முதலி

யன, படிப்பார்தம் உள்ளங்களில் அவரவர் நெஞ்சப் பான்மைக் கேற்ப மெய்ப்பாடுகளைப் பிறப்பிப்பனவாம். கம்பர் இராமாயணத் திலே கோசிக முனிவர் இராமனைத் தரும்படி தயரதனைக் கேட்டார்; கேட்டதும், தயரதன் பட்ட துன்பத்தை எடுத்துச் சொல்லுவார்,

**"ஆருயிர்நின் றூச லாடக் கண்ணில்லான்**
**பெற்றி ழந்தான் எனஉழந்தான் கடுந்துயரம்"**

என்றெடுத்து உரைத்தார். சிந்தாமணியிலும் இவைபோல்வன பல வுண்டு. சிலப்பதிகாரத்தில் வழக்குரைகாதை போன்றனவும் பெருங் கதையில் 'யூகி' யிறந்தான் என வெடுத்த காதைப்பகுதியும் மெய்ப் பாடுகளை நனிதோற்றுவிப்பனவாம் என்றுணர்க.

ஆதலால், ஓவியம் வல்ல புலவனும் செய்யுள்வல்ல புலவ னும் ஒருவரை யொருவர் ஒப்பர்; துகிலிகைக் கோலும் வண்ண மும் கிழியும் ஓவியம் எனப்படாவாறு போல எதுகையும் மோனையும் வண்ணமும் அடியும் தொடையும் செய்யுள் எனல் சாலாது. ஓவி யம் பார்ப்பவர் உள்ளத்து உணர்வை மிகுவிக்கும். செய்யுள் கருத்தூன்றிப் படிக்குநர் உள்ளத்து மெய்ப்பாட்டை மிகுவிக்கும்.

தேவார திருவாசகங்கள் முதலிய இறைவன் நூல்களும் மெய்ப் பாடுகளை உண்டாக்கலால், அவை தாமுங் காவியம் எனப்படுமோ வெனின், படாவென்றே யறிதல் வேண்டும். என்னையெனின், இவை இறைவன்பால் அன்பு முறுகிய தொண்டர்கள் அவன் அருள்வழி நின்று தமக்கு அவன் உணர்த்த உணர்ந்தவற்றைச் சொல்லிப் போந்தாரல்லது ஒன்றனை அழகுபெற எடுத்துப் புனைந்து உரைத் தாரல்லராகலின் அவை காவியம் எனப்படாவென்க. அற்றன்று, அவையும் ஒரோவழி அழுகை முதலிய மெய்ப்பாடுகளைப் பிறப்பிக் கின்றனவன்றே யென்னில், பேதாய்! அழுகை காவியங்களில் இரக்கத்தாலும் அச்சத்தாலும் வந்தனவல்லது அருளான் வந்தன அல்ல; தேவாரத் திருப்பாட்டுக்களிலோ அவை அருள்நெறியில் நில்லார்க்கு ஒருஞான்றும் மெய்ப்பாட்டை உண்டாக்கா வாதலா னும் அன்பு அருள் என்பன மெய்ப்பாடுகள் அல்லவாதலானும், இவ்விரண்டும் பிறவித்துயரால் கழிந்த வினையின் பகுதியாய் எய் தினார்க்குமட்டுமே அன்புமருளும் உண்டாமல்லது ஒருவர்தேடிப் பெறுதல் சாலாது. ஆதலாலும் அது கடாவன்று என மறுக்க.

காவியம் வல்லார்க்கு ஓவியம் வாய்த்தலும் வாய்வதோ என் பது ஒருவினா? ஆனால் இரண்டும் ஒருவர்க்கு வாய்த்தல் இயற் கைக்கு மாறுபடாது. மற்று, ஒன்று வரப்பெற்றார்க்கு மற்றொன் றில் ஊக்கம் உண்டாதல் இல்லை. என்றாலும், ஓவியத்தில் எழில் நலத்தைச் செய்யுள்வல்ல புலவர் எளிதில் கூர்ந்து அறிய மாட்டுவர்.

இனிக் காவியம் ஓவியம் போன்றும் ஓவியம் காவியம் போன் றும் பிரித்தறிதற்கு அருமையாய் இருப்பது மிகவும் பாராட்டத் தக்கதாம் என்பது.

---

6

# 9. தூய்மை

நெறியல்லா நெறிக்கட் செல்லுதலின்றி யறிவுடை யான்றோ ராணை வழி நின்று சிந்தைசொற் செயல்கள் தம்முண் மாறு படாம லொழுகு மொழுக்கமே தூயவாழ்க்கை யெனப்படும். சிந் தையின் விளைவாயே சொல்லும் செயலும் நிகழ்தலின் சிந்தை சொற் செயல்கள் தம்முளொத்த லாவசியகமென்க. உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசியும் பிறகபடங்கள் செய்து மொழு கும் வேடதாரிகள் தூயவாழ்க்கையின ரெனக் கருதப்படார். "மனத் துக்கண் மாசில ளுத லனைத்தறம்" என்றும் "புறந்தூய்மை நீரான மையு மகந்தூய்மை-வாய்மையாற் காணப்படும்" என்றும் "வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்-ஐந்து மகத்தே நகும்" என் றும் கூறிப்போந்தார் செந்நாப்போதாரும். வாழ்க்கைக்கண் தரும சங்கடமோ தடுமாற்றமோ ஏற்பட்டவழி, உலகிய லறிவும் மெய்ஞ் ஞான வநுபவ முதிர்ச்சியும் பெற்ற பெரியோற் துணைக்கொண்டே சிற்றறிவுடைய நம்மனோரது வாழ்க்கை செப்பஞ் செய்யப் படத் தக்கதாதலின், அறிவுடை யான்றோ ராணைவழி நிற்றல் வேண்டப் படுமென்க.

அறிவு நிகழ இச்சையும் அதன் பின் தொழிலுமாகவே மக்கள் வாழ்க்கை நடைபெறுதலின், இச்சா ரூபமான உணர்வின் விளை வாயே மனித ஒழுக்கம் நிலைபெறும். மக்கள் வாழ்க்கை சிறப்ப டைய வேண்டுமாயின் இடம் காலம் முயற்சிக்கும் முயற்சி செய் வான் நிலைக்கு மேற்ற வண்ண மிச்சை யுணர்வுகள் தத்தமக்குரிய எல்லைக்குள் நிற்கும்படி யடக்கி யாளப்படுதல் வேண்டும். காமம் வெகுளியச்சமாதிய இச்சை யுணர்வுகளை யடக்கி யாளுதலின்றி யவை வசப்பட்டு நிற்பான், வாழ்க்கைப்பயனை யுணர்ந் ததற்கேற் கத் தன் சிந்தைசொற் செயல்களைச் செப்பஞ் செய்யு மாற்ற லில னாகிப் பல்வகைச் சிறுமையையு மெய்துவன். உடலையும் பிரபஞ் சத்தையுமே போற்றி யவைசார்பான ஆசையால் மெலிவெய்தி நிற்போன் எத்துணைச் சிறுமைகள் வரினும் ஊனோம்பும் வாழ்க்கை யைப் போற்றி நிற்ற லியல்பே. மனம் ஆசையைப்பற்றி நின்ற வழி சிந்தைசொற் செயலெல்லாம் ஆசைக்கிலக்காய பொருட் சார்பாகவே செல்லும். இவ்வாறு பொருளல்லாப் பொருண்மேற் சென்ற ஆசையி லழுந்தி நின்று அப்பொருட் சார்பாகத் தன்சிந்தை சொற் செயலெல்லாவற்றையும் செல்லவிடுவான் எத்துறைக் கண்ணு முண்மை தேறுமாறில்லை. இவன் சிந்தை சொற் செயல்கள் தூய்மை

யடைதலுமில்லை. உடலையும் பிரபஞ்சத்தையு மவை சார்பான பிற வற்றையும் பொருளென மயங்கி யொழுகும் ஒழுக்கம், அச்சம் வெகுளி கவலை யழுக்காறு முதலியவற்றைத் தந்து மனத் தூய் மையைக் கெடுத்தலே யன்றி வாழ்க்கையைப் பல்லாற்றானுந் தீரா விடும்பைக்கு நிலைக்களமாக்குந் தகையதென்பது மிங்கவதானிக் கத் தக்கது. நிலையில்லாத இவ்வற்ப பொருட்களைப் பெற்றவழி யிவை யழியுமோ என்ற பயம், இவற்றிற்குக் கேடு செய்வார் மாட் டுக் கோபம், கேடு நீக்கிக் காக்கும் கவலை, இவற்றைப் பெற்று வாழ்வார்மாட் டழுக்காறெனத் துன்பம் மேலும் மேலும் பெருகத் தூய்மையும் குறைந்து கொண்டே போம். இத்தகைய வாழ்க்கை, வீரம் தியாகம் மெய்யுணர்வு முதலியவற்றாற் பொலிவுற்று விளங் குத லசம்பாவிதம். காமக்குரோதாதிகளாற் கலக்குண்டு சலிப் பெய்தாத மனச்சாந்தியோடு மெய்ப்பொருட் சேர்க்கையை நோக் கியே தூயவாழ்க்கை நடைபெறும். பேராசை யச்சம் அழுக்காருதியன ஆடல் செய்து நிற்கும் மனம் தூய்மையுடையதாகாது. மனம் தூய்மை யில்லாதவிடத்து வாழ்க்கை தூய்மையடைவது மில்லை.

ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகுந் தன்மையது என்பதும், உறைப்பாக நிகழும் பாவனையால், பாவிப்பான் பாவிக்கப்படும் பொருளின் தன்மையை யெய்துதல் திண்ணம் என்பதும், அறி வுடையோர் பலர்க்கும் ஒப்ப முடிந்த உண்மைகள். "நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்" என்றும் "உறவுகோல்நட் டுணர் வுக் கயிற்றினுல்-முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே" என்றும் வரும் அருள்வாக்குகள் சிந்திக்கத் தக்கன. நிலையில்லா அற்ப பிரபஞ்சப் பொருட்களின் சார்பால் துன்பமும் சிறுமையு மடைத லியல்பே. ஐம்பொறியா லலைந்து பேராசை யச்சம் கவலை யழுக்கா ருதியவற்ரு லழுக்குண்டு சலிப்பெய்திய மனத்தினர் வாழ்க்கை யெவ்வாற்றானும் சிறப்படையாது. அவர் மனச்சாந்தி பெறுதலும் உண்மை யுணர்தலுமில்லை. அந்தக்கரணசுத்தி முத் திக்கு இன்றியமையாச் சாதனமாகும். "அந்தக்கரணசுத்தி தானுவ தவாவற்றிடுதலே" என்பது பிரபுலிங்கலீலை. "உடம்பைக் கர ணத்தை யுடலைத் தானென் றுழலாமலடங்கத் துறந்து" பிரபஞ்ச வைராக்கியமும் மனச்சாந்தியும் பெற்று மெய்யுணர்வு கைவந்து சிவத்தையே பொருளெனக்கொண் டதனையே தியானித்தல் பாவித் தல்களைச் செய்யும் சிவஞானச் செல்வர் சிவமாந்தன்மையை யெய் திப் பேரறிவு பேராற்றல்களோடு விளங்கிப் பேரின்பப் பெருவாழ் வடைதல் சாலவும் பொருத்தமானதே. "பேரின்பப் பெருவாழ் வடைந்த பின் விரும்பத்தக்க தொன்றில்லையாதலின், விரும்பியதை

யடைதற்க ணிடையூறு செய்வார் மாட்டுச் செல்வதாகிய கோப மும், தாம் விரும்பிய பொருள் கிடையாமற் போமோ என்று கொள்ளு மச்ச மவலமும், விரும்பியபேறு கிடையாதவழித் தோன் றும் சோகமும், தமக்குக் கிடையாதபேறு பிறர்மாட்டுக் கண்ட வழித் தோன்றும் அழுக்காறுமென் றின்னனபல சிறுமைநீங்கி வீறு டைவாழ்க்கை வாழ்தல் மெய்ஞ்ஞானப் பெரியாரிறைவன் சேர்க்கை யாற் பெற்ற பயனென்பது வெளிப்படை". ஒருவர் பேரின்பப் பெருவாழ்வடைதலால் பிறர்க்கு நன்மை விளைதலின்றிக் கேடி ல்லை யென்பதும் அந்தக்கரண சுத்தியால் நித்தியாநித்திய வஸ்து விவேகம் பெற்று மெய்ப்பொருள் நாட்டம் செய்வார்பால், பொருள் புகழ்பற்றி யெழும் அழுக்கா றவா வெகுளி முதலியன தோன்றுதற் கேதுவில்லை யென்பது மிங் குணரத் தக்கவை. அந்தக் கரணசுத்தி மேலும் மேலும் வளர அடியார்பால் அறிவாற்றல்கள் விசேடமாக விளங்குதலை யவர் வாழ்க்கையைச் சிறிதேனும் நோக் கினூர் நன்கறிவர். இச்சிவாநுபூதிச் செல்வரும், சிந்தைசொற் செயல்களிற் றூய்மையுடைமையே வாழ்க்கை சீரடைதற்குத் தம் சாதனமாகு மென்னு முண்மையைத் தம் சொற் செயல்களால் வலி யுறுத்திக் காட்டுவர்.

**சினமுத லியமயல் தீர மாற்றுபு**
**வினைதபு வாய்மையா மெழுக்கை யன்பெனும்**
**புனலொடு விரவியே பூசி னல்லது**
**மனமெனு மணியிடை வராதி லிங்கமே**

— (பிரபுலிங்கலீலை

என்றும்

**"மெய்வந்த நெஞ்சி னல்லாலொரு காலும் விரகர்தங்கள்**
**பொய்வந்த நெஞ்சிற் புகவறி யாமடப் பூங்குயிலே"**

— (அபிராமியந்தாதி)

என்றும் வரும் ஆன்றோர் வாக்குக்களு மிவ் வுண்மையை வலி யுறுத்தும்.

இனி, குலம் குடி கோத்திரம் சாதியெனப் பல ரொருங்கு கூடி வாழும் சமுதாய வாழ்க்கையில், எல்லா வருணத்தார்க்கும் ஆச்சிரமத்தார்க்கும் ஒரே வகையான ஒழுக்கம் உரியதாதல் இல்லை. வருணம் ஆச்சிரமம் இடம் காலம் வசதி முதலியன பற்றி ஒழுக்க மும் பல்வேறு வகையாய் விகற்பப்படும். எல்லாப் பகுதியினர் வாழ்க்கைக் கண்ணும் தூய்மை சமமாக ஓரளவினதாதல் வேண் டும் என்னும் நியதியுமில்லை, அறிவாற்றல்களி னேற்றத் தாழ்ச்

சிக்குத் தக்கபடி வாழ்க்கைக்கண் வேண்டப்படும் தூய்மை கூடி யுங் குறைந்து மிருத்தல் தகுமென்பது அறிஞர் பலர்க்கு மொப்ப முடிந்த உண்மை. ''இல்வாழ்வார்க் காயின் தமரோடு விளையாட்டு வகையால் அவரை வஞ்சித்துக் கோடற்கியைந்த பொருள்களை யங் ஙனம் கொள்ளினும் அமையும். துறந்தார்க் காயின் அதனைக் கரு தியவழியும் பெரிதோ ரிழுக்காம் ஆதலின், இது துறவறமாயிற்று'' என்று கூறுங்காற் பரிமேலழகரு மிவ்வுண்மையை வலியுறுத்துதல் காண்க.

நித்தியாநித்திய வஸ்து விவேகமும் மெய்ப்பொருள் நாட்ட மும் தந்துதவியதன்பின் சற்குருநாதன் துணையால் மெய்ஞ்ஞான வநுபவத்துக்குச் சாதனமாய் நிலவும் அந்தக்கரணசுத்தி, வருணச் சிரம தருமம் பேணலாகிய கருமத்தாலும் அட்டாங்கத்தோடு கூடிய யோக மார்க்கத்தாலும் கைகூடுமென்பதிங் கறியத்தக்கது.

**''அந்தக்கரண சுத்திதா னறிவை யறிதற் சாதனமாம்**
**அந்தக்கரண சுத்திதனக் கறையுங் கரும மாரணங்கள்''**

என்றும்,

**''கருமமும் யோகந்தானுங் கரணத்தைப்புனிதமாக்கிப்**
**பொருமிடர் வாயில்தோறும் புக்குழல் கறங்குபோலத்**
**தெருமரா துண்ணிறுத்துந் தெளிந்தவக் கரணந்தன்னால்**
**நிருமல னுருமீச னித்தனென் றுணர்வுதிக்கும்''**
**''நித்திய னிமல னென்னும் நினைவுறி னநித்தமாகிப்**
**பொய்த்தழி யுடம்புடம்பைப் பொருந்திய பொருள் வெறுத்து**
**மெய்த்தருள் குரவன் றன்னை விரும்பினன் சென்று சார்ந்து**
**தத்துவ முதறி நின்ற தனியறி வினையே சாரும்''**

என்றும் பிரபுலிங்கலீலையில் வருவனவற்றை நோக்குக,

வருணச்சிரம முதலியன பற்றி ஆன்றோர் விதித்தன செய்து விலக்கியன வொழிதலாகிய தருமம் பேணச் சித்தசுத்தி கைகூடுவ தெவ்வாறெனில், காமக்குரோதாதி இச்சை யுணர்வுகள் செலுத்திய வழிச் செல்லாது, ஆன்றோ ராணைவழி நின்று, சரியிது பிழையிது என்றறியும் பகுத்தறிவு கருவியாகத் தன் கடமையை நிறைவேற்று முகத்தானே, ஒருவன் தன்னிச்சைகளைத் தானேவியவழி நடத்தி யடக்கி யாளும் சித்த சுத்தியைக் காலகதியி லடைவனென்க, இங் குக் கூறிய கருமத்தால் இச்சைகளின் வலி கெட்டடங்குதல் அறிக. எனினும், இவ்வாறெய்தும் சித்தசுத்தி வாழ்க்கையின் பரமப் பிரயோ சனத்தை யுதவுந் தகையதன்றாதலின், உயிர்க்குறுதி பயக்குந் தகை யதாகு மந்தக்கரணசுத்தியைப் பெறுதற்கு இயமம், நியமம், ஆச

னம், பிராணுயாமம் பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி யென்னு மட்டாங்கத்தோடு கூடிய யோகப் பயிற்சியே பெரிதும் வேண்டப்படும். சித்தாசன முதலிய சில ஆசனப்பயிற்சி சிற்றின்ப நோக்கிய காம இச்சை யடக்குதற் குபயோகப்படுமென்ப. பிராணவாயுவி னடக்கம் மனோநிக்கிரகத்தை யுதவு மென்றும், பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி யென்னுமிவை மனோநிக்கிரகத்தைப் படிப்படியாய் முதிரச்செய்து நின்மல துரியாதீத மெனப்படும் நிர்க்குண சமாதியைத் தருமென்றும் கூறுப. இவ் யோக சாதனையின் விரிவுகள் நுட்பங்களை யோகநூல் கற்றும், அநுபூதிப் பெரியார்பாற் கேட்டும் தெளிக.

மனிதன்பாலுள்ள ஆற்ற லறிவுகள் காமக் குரோதாதிகளாற் சிதறிப் போகாம லவற்றை ஒரு முகப்படுத்திப் பெருக்கியும், இறைவனருட் சத்தியின் தொழிலுக்கு மனிதனை நிலைக்களமாக்கி யதுவாயிலாக அவனுக்கு இகபர சுகங்களெல்லா முதவியும் சிறந்து நிற்பது அந்தக்கரணசுத்தி. ஆதலின், இது பல்லாற்றானும் முயன்று பெறற்பால தொன்றாகும். விசேட ஆற்ற லறிவநுபவங்களில்லாத சாமானிய மக்களும் சித்தசுத்தி யடையு முபாயமாகக் கையாளத்தக்க முறைகள் சில இப்போது ஆராயக்கிடந்தன.

இச்சை யுணர்வுகள் மனிதன்மாட்டுத் தோன்றும் முறையை யறிந்தே யவற்றை யடக்கி யாளும் முறை நிச்சயிக்கத்தக்கது. அறிவு நிகழவே யிச்சை நிகழும், அறிவெனப் படுவதை விடய உணர்ச்சியெனக் கொள்க. இவ் விடய உணர்ச்சி கண்டு கேட்டுண் டுயிர்த் துற்றறிதலாகிய ஐவகை யாயும் நிகழும். இவ்வாறு ஐவகையாயும் நிகழும் இந்திரியக் காட்சியாற் றோன்றும் விடய உணர்ச்சி பலவகையான இச்சைகளையும் எழுப்புதல் நாமநுபவத்தி லறிந்த தொன்று. பல வேறு இச்சை யுணர்வுகளும் தமக்கேற்ற விடய உணர்ச்சிகளின் விளைவாய் நிகழும். இவற்றில் வெகுளியைத் தருவன சில உணர்ச்சி; அச்சம் தருவன சில; காம இச்சையைத் தருவன வேறுசில. இவ்வாறே ஏனைய இச்சை யுணர்வுகளும் தோன்றும், ஒருவகை விடய உணர்ச்சி பன்முறையும் நிகழுமாயின் அவ்வுணர்ச்சியால் எழும் இச்சையும் பன்முறை பயின்ற பயிற்சியின் பயனாய் வலிமை பெற்று முதிருமென்பர் மனநூற்புலவர். எனவே, இச்சைகள் வலிமைபெற்று வளராதபடி தடுக்கவேண்டுமாயின், அவை பன்முறையும் எழாதபடி காக்க வேண்டும்; அதாவது, அவற்றைத் தோற்றுவிக்கும் விடய உணர்ச்சி நிகழாமற் காக்க வேண்டும். சிற்றின்பம் நோக்கிய காம இச்

சையை யடக்க வேண்டுமாயின், ஆடல் பாட லலங்காரங்களால் ஆடவரை மயக்கும் மாதர் தொடர்பை நீக்க வேண்டுமென்றதன் கருத்திதுவே.

இந்திரியக் காட்சியால் விளையும் விடய உணர்ச்சியே யன்றி, இச்சை யுணர்வுகள் சம்பந்தமான பழைய அநுபவத்தின் ஞாபக மாய்த் தோன்றும் விடய உணர்ச்சியும் இச்சைகளை விளைவிக்த மியல்பின. நமக் கிடர்செய்த பகைவனை நினைந்த போதும் வெகுளி யுணர்வு தோன்றுதல் நாம் அநுபவத்திலறிந்ததொன்று. இதுவே யன்றி, நம் பகைவனை ஞாபகப்படுத்தும் எந்த உணர்ச்சியும் நம் பால் வெகுளியைத் தோற்றுவிக்குந் தகையதென்ப தறியத்தக்கது. பகைவன் பெயரைக்கேட்டும் அவன் உறவினர் பெயரைக் கேட்டும் அவன் வசிக்தும் ஊரின் பெயரைக் கேட்டும் வெகுளி தோன்றுதல் கூடும். இச்சை யுணர்வுகள் சம்பந்தமாகப் பன்முறையும் நிகழ்ந்த அநுபவத்தின் விளைவான வாசனைகள் தந்தமக்குரிய இச்சைகள் வலிபெற்றெழுதற் குபகாரமான எண்ணங்களை உதிக்கச் செய்யும் ஆற்றலுள்ளன என்ப ரறிந்தோர். தத்தமக்கேற்ற எண்ணங்களி னுபகார மின்றி யிச்சையுணர்வுகள் வலிபெற் றெழுமா றில்லை யாதலின், இச்சையுணர்வுகளை வலிபெற் றெழுதற் குபகாரமான எண்ணங்களை நீக்கியபோது இச்சை யுணர்வுகளும் கெட்டொழியத் தக்கன வென்க. எனவே, மனதில் தோன்றுவனவற்றை மாற்றிக் கொள்ள முடியுமாயின் இச்சைகளை யடக்குதலும் முடியும். இச்சை யுணர்வுகள் கெட்டொழியும்படியாக எண்ணங்களை மாற்றிக்கொள் ளின் காலகதியில் இச்சையுணர்வுகள் கெட்டொழிதல் சாலுமென்க. வெகுளி தோன்றுமாயின் ஒன்றுமுதற் பத்துவரை எண்ணுக என் னும் உபாயம் இங்குக் கூறிய உண்மையை வலியுறுத்தும். வெகு ளியைத் தோற்றுவிக்கும் விடய உணர்ச்சி நீங்கும்படி ஒன்றுமுதற் பத்துவரை யெண்ணின், வெகுளியும் நீங்கும்.

அச்சம் கவலை முதலியவற்றால் சித்தங் கலங்கி நிற்பானும் தன்பால் நிகழும் சிந்தனையை மாற்றுதலாகிய உபாயத்தால் தன் துன்பத்தை நீக்கிக் கொள்ளுதல் கூடும். துன்பமென்று பாவித்தே துன்பம் வருவது. "இடும்பையாவது உள்ளத்து ஓர் கோட்பாடே யன்றிப் பிறிதில்லை யென்பதூஉம் அது மாறுபடக் கொள்ள நீங்கு மென்பதூஉம் அறிதல் வேண்டுதலின் அறிவுடையா னென்றும்" என்னும் பரிமேலழகருரை யிங்கு சிந்திக்கத்தக்கது.

வெகுளி யச்சம் அழுக்கா றென்பனவற்றைக் கெடுத் தொழித் தற்கு இவற்றைத் தோற்றுவித்தற் குபகாரமான சிந்தனைகள் விடய

உணர்ச்சிகளைக் கெடுத் தொழித்தலோ டமையாது, இவ்விச்சை யுணர்வுகளுக்கு மறுதலையாய சாந்தம், வீரம், தியாகம் முதலியன தோன்றி நிலைபெறுதற் குபகாரமான தியான பாவனைகளைச் செய் தலே சீரிய முறையாகும். தம்பாலுள்ள குற்றங்களுக்கு மறுதலை யாய குணங்கள் தம்பா லுள்ளனவாகப் பாவித்து வாழ்க்கையைச் சீர்செய்யும் முறையைப் பிரதிபக்ஷ பாவனை யென்பர் யோகநூலார். ''இன்னுமையெனக் கொளின்'' என்னும் குறளுக் குரைகண்ட விடத்து ''துன்பந் தானும் உயிர்க் கியல்பன்றிக் கணிகமாய் மனத் திடை நிகழ்வதோர் கோட்பாடாகலின் அதனை மாறுபடக்கொள் ளவே, அதற் கழிவின்றி மனமகிழ்ச்சி யுடையனுய் அதனுற் றொடங் கிய வினை முடித்தேவிடு மாற்ற லுடையனு மென்பது கருத்து'' எனப் பரிமேலழகர் கூறியது மறிக.

தீயவிச்சைகளைத் தடுத் தடக்கிக்கொள்ள வேண்டுமாயின், அவ் விச்சைகளை எழுப்பும் மனோவிருத்திகளைக் கெடுத்தல் வேண்டப் படுதலின், அவ்விருத்திகள் தோன்றும்போதே யவற்றைக் கெடுத்து மனம் ஒன்றிலும் பற்றிலா திருக்கச் செய்தலும் சித்தத்தைப் படிப் படியாய்த் தூய்மைப் படுத்தற் கொரு வழியாகுமென்பர் நண்ப ரொருவர். சிறிது நேரத்திற்கேனு மிவ்வாறு மனத்தை விழிப்புநிலை யிலிருக்கும்போதே யொன்றையு மழுந்திப் பற்றுதிருக்கப் பழக்கிக் கொள்ளும் பயிற்சியால் மனத்திலோ ரமைதியும் பிறக்குமென்ப ரிந்நண்பர். இதுவு மநுபூதிமான்கள்பாற் கேட்டுத் தெளிதற் குரிய தொன்ருகும். மனத்தை யொன்றிலும் பற்றி நிற்காமலிருக்கச் செய்யு முத்தம சாதனை மெய்ப்பொருளுணர்ச்சியைத் தரும் தூய் மையுடைய தென்பது

''மருவிய பொருண்மே லன்பாய் வானரம் போற்சரித்துத்
திரியுமச் சித்தந் தன்னைத் திருத்திச்சூ னியத்தே நின்ருல்
மருவினேர் பிரிதலின்றி வானவ ரறிவுக்கெட்டாப்
பொருவிலா நித்தசுத்தப் பொருளினை யடைவரன்றே''

எனவரும் தேவிகாலோத்தரச் செய்யுளால் விளங்கும். மலச் சேர்க்கையை வெறுத்து நீக்கிய உயிர்பால் அதனோ டத்துவித மாகக் கலந்து நின்ற இறைவனருள் பதிதலும் அவ்வுயி ரிறை வனை யறிந் தநுபவித்துப் பேரின்பப் பெருவாழ் வடைதலும் பொருத்தமான நிகழ்ச்சிகளேயாம்.

இனி, சிரவணம், ஸ்மரணம், கீர்த்தனை, வந்தனை, அர்ச்சனை, பாதசேவை, சாகியம் (தோழமை) தாசியம் (தொண்டனுந் தன்மை) ஆத்ம நிவேதனம் என ஒன்பது விதமாக வியலும் பக்தி மார்க் கமும் வாழ்க்கையைத் தூய்மை செய்யுந் தகையதே. ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகுந் தன்மையது. சிந்தைசொற் செயல்க

ளைப் பரிசுத்தமான விடயச் சார்பாக்கிக் கொள்ளும் பயிற்சி தூய்மையைத் தந்துதவுத லியல்பே. இங்குக் கூறியவையே யன்றி மந்திரம் செபங்களும் தீய இச்சைகள் கெட்டொழிதற்குத் துணையாகும். இச்சாதனைகளு ளொன்றையே இரவும் பகலு மிடையீ டின்றிப் பயின்றுவரின், இளைப்புத் தோன்றிச் சாதனையிலு மருவருப்புத் தோன்றுதல் கூடும். ஆதலின், சாதகர் தம் தேவைக்கும் சுபாவத்துக்கும் ஏற்ற சாதனைகளைத் தெரிந்தெடுத்துக் கொண்டு ஒவ்வோர் சாதனையையும் தக்க அளவுக்கே பயிலல் வேணடும். இச்சாதனைகளுள் ஆத்ம நிவேதனம், அஃதாவது ஆத்ம சமர்ப்பணம், இறைவன் தன்னறிவைக் கொள்ளைகொண்ட அவதரத்தில், தன்னிலொரு பகுதியும் புறநீங்கலில்லாமல், இறைவனுக்கே ஒப்பித்து விடும் நிலையாதலால், தூய்மையை அதிசீக்கிரத்தி லுதவு முத்தம சாதனையாகும். இறைவன்மே லன்றி வேறொரு பொருண்மேலும் அறிவு வியாபரியாத இந்நிலையில் தீய இச்சைகளோடு கூடிய பிற சார்புக் கிடமில்லையென்க.

சாதனைக ளெல்லாவற்றுள்ளும் அதியுத்தம சாதனையாகக் கொண்டாடத் தக்க பெருமையை யுடையது சற்சனர் சகவாசம். "மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டும்— இனந்தூய்மை தூவா வரும்" என்றார் நாயனர். அரனடியார்க்குப் பத்தி செய்து அவ ராணைவழி நிற்த மவதரத்தில் நம் சிந்தனையெல்லாம் அவர் சொல்லிலும் செயலிலுமே செல்லும்; அவரையே சிந்தித்துத் துதித்து வழிபடுவோம்.

தியானபாவனைக ளெல்லா மவரையே விடயமாகக் கொண்டு செல்லுதலால், சிந்தைசொற் செயலெல்லாம் சிவன்பா லன்றிப் பிற பொருண்மேற் செல்லாமையாற் கரணங்கள் தெளிந்து புனிதமாகிச் சிவமாந் தன்மையைப் பெற்ற இவரது பரிசுத்த நிலை யெமக்கும் கைகூடுதல் திண்ணம். எங்கும் எக்காலமும் சிவத்தையே கண்டுவாழு மிவர் எம்மையுந் தம் பாவனையாற் புனிதராக்கி விடுவர். திருநோக்குப் பரிசங்களாலு மிவர் தம்மை யடைந்தோரைப் புனிதராக்குவர். சித்தந் தெளிந்து சிவமான இவர் சிவபரம் பொருளினருட்டொழிற் கெல்லா முரியராய்த் தம்மையடைந்தோர்க் கிகபர சுகமெல்லா முதவுவர். ஆதலி னவரோ டிணங்கி யவர் சொற்கேட்டு மவ ரேவியன செய்தும் வாழ்தலையே அறிவுடை மக்கள் நற்கதியடையும் நெறியெனப் போற்றுவர்.

"சித்தம் தெளிந்து சிவமானே ரெல்லார்க்கும்
கொத்தடிமை யான குடிநான் பராபரமே" என்றும்
"அன்பர்பணி செய்யவென்னை யாளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"

என்றும் தாயுமானர் அருளியவை சிந்திக்கற்பாலன.

அரனடியார் திருவடி வாழ்க!

# 10. ஒழுக்கமுடையார் மாண்பு

"முத்திக்கு வழியை மொழியக் கேண்மின்!
சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்திய வஸ்து விவேகம்
பத்திசெ யடியரைப் பணிதல் பகலவன்
எழுமுன் எழுதல் இரும்புன லாடல்
வழுவிலந் தெழுத்தும் வரன்முறை பயிலல்
குருபதம் பணிதல் கோலநீ றணிதல்
வரும்பசிக் குண்ணல் வாயுற வாழ்த்தல்
சாத்திரம் பயிலல்; தன்போற் பிறரையும்
பார்த்தல்; பணப்பற் றொழித்தல்; பண்புடன்
வார்த்தை யாடல்; வாதனை தீர்த்தல்
கோத்தி ரங்குலக் கோட்பா டொழித்தல்
எட்டுணை யேனும்,
வேண்டுதல் வேண்டாமை யின்றி யென்றும்
ஆண்டவ னடிக்கீ ழமர்ந்து வாழ்தலே."

ஒழுக்கம் எல்லாவற்றினும் மேன்மையானது. ஒழுக்கமுடையார் இழுக்கடையார். எல்லாச் சமயங்களும் ஒழுக்கத்தையே விசேடமாகப் போதிக்கின்றன. ஒருவன் எவ்வளவு கற்றவனுயிருந்தபோதிலும், அக்கல்வியறிவுக்குத் தகுந்த ஒழுக்கம் அவனிடத்தில்லாவிடின் அவன் கற்றதெல்லாம் வீணுய்ப்போகும். இகபரமிரண்டிற்கும் ஒழுக்கம் இன்றியமையாதது. இவ்வுலகின்கண்ணே சந்தோஷமான சீவியம் நடாத்த வேண்டுமானுல், எவரும் ஒழுக்கமுடையவராக விருக்கவேண்டும். ஆரோக்கியமான வாழ்வுக்குத் தூய்மையான வொழுக்கம் மிகவும் வேண்டற்பாலது. திரிகரண சுத்திக்கும் ஒழுக்கமே காரணமாயிருக்கிறது. உலகின்கண் உத்தமரின் மதிப்பை வேண்டியவன் ஒழுக்கத்தைக் கைவிடக்கூடாது. இளமையிலோ, வாலிபப் பிராயத்திலோ அல்லது முதுமையிலோ எப்பருவத்திலும் ஒழுக்கத்தைக் கைவிட முடியாது. ஒழுக்க விதிக்கு விலக்குக் கிடையாது. அரசனுனுலுஞ் சரி மந்திரி பிரதானி முதலிய தானத்தை வகித்தவனுனுலுஞ் சரி அல்லது ஓர் ஏழைப் பிரசையானுலுமென்ன எல்லாரும் ஒழுக்க விதிக்குக் கட்டுப்படத்தான் வேண்டும். இல்லற வாழ்க்கையை நடாத்துகிறவனுயிருந்தாலுஞ் சரி துறவறம் பூண்டவனுயிருந்தாலுஞ் சரி ஒழுக்கமுடையவனுயில்லாவிடின் அவன் வாழ்க்கை சீர்கெடாமற் போகாது. உலகக் கட்டுப்பாடுகளுக்கமைய வேண்டியதில்லாதிருந்தாலும் துறவிகள் தாமும் ஒழுக்கத்தைக் கைவிட முடியாது அப்படிக் கைவிடும் பட்சத்தில் அவர்களுடைய துறவுக்குப் பங்கம் வந்து நேரிடுவது நிச்சயம். ஒழுக்கத்திற்கு முதல் வேண்டியது **திரிகரணசுத்தி.**

தூய்மையான வாழ்வே ஒழுக்கம். தூய்மையான வாழ்வுக்குத் திரிகரணசுத்தி இன்றியமையாதது. முக்கரணங்களாகிய மனம் வாக்குக் காயம் மூன்றும் தூய்மையுடையனவா யிருக்கவேண்டும். தேகத்தை மாத்திரம் பரிசுத்தமாய் வைத்திருந்தாற் போதாது. தேகத்துடன் மனத்தையும் புனிதமாய் வைத்திருக்க வேண்டும். மனம் புனிதமாயிருந்தாற்றான் பேச்சும் புனிதமாயிருக்கும். செய்கை மாத்திரம் சுத்தமாயிருந்தாற் போதாது; செய்கையுடன் எண்ணமும் சுத்தமாயிருக்க வேண்டும். எண்ணத்தைவிட வாயாற் பிறப்பன வெல்லாம் பரிசுத்தமாயிருக்க வேண்டும். ஒருவர் சிவவேடம் பூண்டு சமயானுஷ்டானங்க ளெல்லாவற்றையும் கிரமமாகமுடித்து வருவரேனும் அவர் தமது வாக்கால் அல்லது எழுத்துமூலம் பிறரை இகழ்வார், பரிகசிப்பார் அல்லது குறைகூறுவாராயின், அவர் ஒழுக்கத்திற்றவறுகிறார். அவரை மெய்யான சிவபக்தனெனக்கூற இடமில்லை. சீவபக்தி யுள்ளவர்களே சிவபக்திக்குரியவர். மேலும், வெளித்தோற்றத்தளவில் உலகுக்கு எவ்வளவு பரிசுத்தமுடையவர் போல் தோன்றினபொழுதும், தம்முட்சிந்தனையில் அழுக்குடையவரா யிருந்தால், அப்படிப்பட்டவரையும் ஒழுக்கமுடையவரென்று கூற முடியாது. உலக விவகாரங்களுக் கெல்லாம் உற்பத்தி உட்சிந்தனையே. அகச்சுத்தமில்லாதவனுக்குப் புறச்சுத்தத்தினாற் பயன் யாதொன்றுமில்லை. உள்ளும் புறம்பும் பரிசுத்தமாயிருக்க வேண்டும். அப்படிப் பரிசுத்தமாயிருக்கிறவனுடைய வாழ்க்கையைத்தான் பூரணவாழ்க்கையெனக் கூறமுடியும். ஒழுக்கமில்லாமல் மனிதன் பூரணநிலையை ஒருபொழுதுமடையமாட்டான். ஒழுக்கமுடையவனுக்கே நிஷ்டையுங் கைகூடும். சீவியத்தில் **ஒழுங்கு வேண்டும்.**

சீரான சீவியமே ஒழுக்கம். நாம் செய்யவேண்டிய கருமம் ஒவ்வொன்றையும் சீராகவும் சிறப்பாகவும் செய்யவேண்டும். ஒன்றிலுங் குறைவிடக்கூடாது. எவ்வித கருமத்தை யாரம்பித்தாலும் பூரணமனத்துடனே ஆரம்பித்து ஆற்றலுடன் அதை நிறைவேற்ற வேண்டும். ஒரு தினத்துளடங்கிய இருபத்துநான்கு மணித்தியாலங்களும் பிரயோசனமாகவே செலவுசெய்யப்படல் வேண்டும். பிரயோசனமென்றால் முற்றும் உலகார்த்தமாய் அல்லது முற்றும் ஞானார்த்தமாய் விளங்கக்கூடாது. சிலவேளைகளில் உடம்புமாத்திரமல்ல, மனமும் இளைத்துப்போயிருக்கும். அவ்வேளையில், நியமநிஷ்டைகளெல்லாவற்றையுந் தள்ளிச் சும்மாவிருக்க வேண்டிவரும். அப்படி ஆறுதலடைவதும் பிரயோசனமான வேலைதான். அதையும் பூரண மனத்துடன் செய்யவேண்டும். என்ன முயற்சியிற் பிரவேசித்தாலும் மனத்தைக் கட்டுப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். எதிலும் சுய ஆட்சி எல்லையைக் கடந்துபோக மனத்தை விடக்

கூடாது. எவ்வித கருமத்தைப் புரியும்பொழுதும் நான் செய்கிறே னென்ற நினைவில்லாமற் செய்யப்படவேண்டிய கருமத்தை நிறை வேற்றுகிறேன் எனக் கருமத்தைப் பணியாகவும் தன்னையொரு சாட்சியாகவும் பாவித்தல் வேண்டும். அப்பொழுது கருமஞ் செவ் வனே கைகூடுவதுமல்லாமற் கருமத்தைப் புரியும்பொழுது ஆறுத லும் அகமகிழ்ச்சியும் பெருகும். எக்கருமத்தைச் செய்யும்பொழு தும் ஊக்கத்தோடும் சிரத்தையோடும் மனமகிழ்ச்சியோடும் செய்து பழகுதல் வேண்டும். அப்படிச்செய்து பழகிவந்தால் மன உறுதி உண்டாகும். அஃதாவது, மனம் ஏகாக்கிரசித்தத்தைப் பொருந்தும். பொருந்தவே ஆன்மசத்தி அதிகரிக்கும். ஒழுக்கத்திற்குச் **சாதுக் கள் உறவு** வேண்டும்.

நாம் செய்த புண்ணிய வசமாக நமது மத்தியில் ஒரு பரமசாது காணப்படுகின்றார். அவரது உறவைப் பலர் பெற் றிருக்கின்றார்கள். அவர் "ஒழுக்கம் உயிரினும் சிறந்தது. ஒழுக்க முடையார் எல்லாமுடையார்" எனும் **நற்சிந்தனையை** நமக்கு ஓதி யிருக்கிறார். அவர் துறவுபூண்ட பரமஞானியாயிருந்தும் உலகத் தவருடன் சகவாசம் பண்ணும்பொழுது மிகவும் சாக்கிரதையாக நடக்கவேண்டுமெனத் தந் தூய சீவியத்தினால் எங்களுக்குக் காட்டி வருகிறார். ஒருவருடைய துரும்புக்குத்தானும் ஆசைப்பட்டிருக்க மாட்டார். வாய்விட்டொன்றைக் கேட்டிருக்கமாட்டார். அவரது இலட்சணம் ஈவதொழிய இரப்பது கிடையாது. வேடமே கிடை யாது. எம்மவருள் அநேகர் அவருடைய அடியாராக வரும் நோக்கமுடையவர்களாயிருக்கிறோம். உண்மையில், நாம் அவ ருடைய அடியாருக்கடியாராக வரப் பாத்திரவாளர்களோ வென்பது சந்தேகம். அவர் அடியாராயிருந்தால் நாம் ஒழுக்கத்தில் தவறக் கூடாது. நம்மால் அவருக்கு வடு வைக்காமல், நமது நடத்தை யைப் பேணிக்கொள்ளுதல் நமது கடமையாகும். இரப்பது இழிவு; ஈதல் பெரிது. எங்கள் சீவியத்தைப் பரிசுத்தமாக்கி நைவேதன மாக அவர் பாதத்திற் படைப்போமாக. அவரை எங்கள் இருதய கமலத்திலிருத்தி

"இன்பந் ததும்பும் இனியவா சகத்தை
இன்னு மறிந்திலேன் இரவும் பகலும்
பொன்னும் பொருளும் போகமும் வேண்டினேன்!
காக்க வேண்டும் கடைக்கண் ணாலே
நோக்க வேண்டும் நூல்வல் லோனே
சேர்க்க வேண்டும் திருவடி யதனில்"

எனத் துதிப்போமாக.

# 11. அத்துவா மார்க்கம்

வந்தெனுடல் பொருள்ஆவி மூன்றும் தன்கை
வசமெனவே அத்துவா மார்க்கம் நோக்கி
ஐந்துபுலன் ஐம்பூதம் கரணம் ஆதி
அடுத்தகுணம் அத்தனையும் அல்லை அல்லை
இந்தஉடல் அறிவுஅறியா மையும் நீ அல்லை
யாதொன்று பற்றின்அதன் இயல்பாய் நின்று
பந்தமறும் பளிங்கனைய சித்து நீஉன்
பக்குவம்கண்டு அறிவிக்கும் பான்மையோம் யாம்
(ஆகாரபுவனம் சிதம்பரரகசியம், செய்--கஅ)

இந்த விழுமிய செய்யுளைச் செய்தவர், தெய்வப் புலமை வாய்ந்த தாயுமானப் பெருந்தகையாராவர். பிற்றைநாட்களில், உள்ள தமிழ்ப் புலவர் பெருமக்களுள், தாயுமானருக்கு ஒப்பாரும் மிக்காரும் இலர் என்பது, தாயுமான அடிகள் அருளிச்செய்த திருப்பாட்டுக்களை நன்கு ஆராய்பவர் அறிவர். வடமொழியிலும், தனிச்செந்தமிழ் மொழியிலும், இவருக்குள்ள வன்மை பெரிதும் பாராட்டற்பாலதே. வங்காளத்துப்புலவர், இரவீந்திரநாததாகூர் அவர்கள் செய்த 'கீதாஞ் சலி'யின் பொருட்செறிவெல்லாம், தாயுமானப் பெருந்தகையார் திருப்பாட்டுக்களில் நன்கு சொல்லப்பட்டிருக்கின்றன. மேலைத் தேய ஆராய்ச்சிகளைக்கண்டு இறும்பூதெய்துவார், இந்நூலைச் சிறிது ஊன்றிப் படிப்பாராயின், அங்கு அவற்றை நிரம்பவும் கண்டு கொள்வர்.

தாயுமான அடிகள், மேற்போந்த திருப்பாட்டின்கண் 'அத்துவா மார்க்கம் நோக்கி' என நுவன்ற பொருள்பற்றி யாம், ஒரு விரிவுரை நிகழ்த்தினேம். அவ்விரிவுரைகேட்ட தமிழ்ப்பள்ளிக் கணக் காயர் பலர், அவ்விரிவுரையினை இன்னும் விளக்கமாக விரித்து, ஒரு புதினத்தாளில் வெளியிடவேண்டுமென்று பலகாற் கேட்டுக் கொண்டார்கள். ஆதலால், அவர்க்கும் பிறர்க்கும் பயன்படும் பொருட்டு, அத்துவா மார்க்கம் என்னும் உண்மையினை இங்கு ஒருசிறிது விளக்குவாம்.

உலகுதான் ஓசைவடிவிற்றாய் நிற்பதூஉம் பொருள்வடிவிற்றாய் நிற்பதூஉமென இருவகைத்தாம். மந்திரம், பதம், வர்ணம் என் னும் மூன்றத்துவாக்களும் ஓசையுலகினும், தத்துவம், புவனம், கலை என்னும் மூன்றத்துவாக்களும் பொருளுலகினும் அடங்கும்.

இனி, அத்துவா என்பது 'அத்துவந்' என்னும் வடசொற்றிரி பாகும்; அத்துவா எனினும் வழி எனினும் ஒக்கும். மந்திரம், பதம் முதலிய ஆறும் வழி எனப் பெயர்பெற்றவா றென்னையெனின்; ஓசைவடிவும் பொருள்வடிவுமாய் நிற்கும் இவையாறும் உயிர்களுக் குச் சிறிய பெரிய கருவிகளாய் உடன்னின்று அவை தூயவா தற்கு உதவுதலோடு, தூயவாம் அவ்வுயிர்கள் அவற்றின்வழியே மேன்மேற் சென்று இறைவன் திருவடியைத் தலைக்கூடுதற்கும் இடந்தந்து நிற்றலின் அவை அவ்வாறு வழி எனப் பெயர்பெற லாயின. இவை யாறும் சிறுவடிவினவாய் ஒன்றுஅளாய் நிற்குங் காற் 'பிண்டம்' எனவும், மற்றுப் பெருவடிவினவாய் விரிந்து நிற்கும் வழி 'அண்டம்' எனவும் வழங்கப்படும். புல் முதல் மக் கள் தேவர் ஈறுன உயிர்களின் உடம்புகளே பிண்டமாம் எனவும், இந்நில மண்டிலம், ஞாயிற்றுமண்டிலம் முதலிய உலகங்களே அண்டமாம் எனவும் அறிதல் வேண்டும்.

இனி, ஓசைவடிவான மந்திரம், பதம், வர்ணம் என் னும் மூன்றத்துவாக்களுள் மந்திரம் என்பது மக்கட்கு நினைவினை எழுப்பும் ஒரு சொற்றொடர். வடமொழியில் 'மந்' என்னும் முதல் நிலைக்கு 'நினைத்தல்' என்பதே பொருளாகலின் மந்திரம் என்பது நினைத்தற்கருவியாகிய சொற்றொடருக்குப் பெயராயிற்று. அற் றேல், நம்மனோர் நினைவுகளைத் தோற்றுவிக்கும் சொற்றொடர்க ளெல்லாம், மந்திரம் எனப் பெயர் பெறுமையும், இறைவனையும் இறைவனது வழிபாட்டையும் நினைவிலெழுப்பும் சொற்றொடர்களே அப்பெயர் பெறுதலும் என்னையெனின்; இறைவனல்லாத ஏனைப் பொருள்களும் உயிர்களும் மக்களுயிர்க்கு உறுதிதருவன அல்லா மையால், அவற்றை நினைவின்கண் எழுப்பும் சொற்றொடர்களும் அப்பெரும்பயன் தராவாய் வறிதாவனவேயாம்; மற்று எல்லாம் வல்ல முதல்வனொருவனே உயிர்களில் ஏறிய மலக்கறைகழுஉவி அவைதமக்குத் தனது திருவடிப் பேரின்பத்தை நல்கவல்லனாகலின் அவனையும் அவன்றன் விழுமியதன்மைகளையும் ஓவாது நினைவில் தோற்றுவிக்கும் சொற்றொடர்கள் மட்டுமே அவ்வாறு 'மந்திரங்கள்' எனச்சிறந்தெடுத்து ஆன்றோரால் வைக்கப்பட்டன. இவ்வாறு 'மந் திரங்கள்' வீடுபேற்றிற்கு ஒரு வழியவாதல் பெறப்பட்டமையின் அவை ஓர் அத்துவா ஆதல் வாய்வதேயாம் என்க.

'ஓம் சிவனேபோற்றி' என்றற்றொடக்கத்துச் சொற்றொடர்க ளெல்லாம் மந்திரங்களாதல் கடைப்பிடித்தறிந்துகொள்க. இன்னோ ரன்ன சொற்றொடர்களில் நினைவை இருத்தி, அவற்றை இடை

விடாது பயிலப்பயில, அங்ஙனம் பயில்வார் இறைவன் திருஅருட் பேற்றிற் குரியராதல் திண்ணமாம் என்க. இறைவனையும் அவன் தன் அரும்பெரும் தன்மைகளையும் நினைவில் தோற்றுவிக்கும் சொற்றொடர்கள் எம்மொழியில் உளவேனும், அவை, தம்மைப் பயில்வாரைத் தூயர் ஆக்கி இறைவன் திரு அடிக்கண் உய்த்தல் ஒருதலையாகலின், இவை ஒரு மொழிக்கே, அன்றி ஒருசார் மக்க ளுக்கே உரிய என்று கொள்ளாதொழியல் வேண்டும். எல்லா மொழிகளுள்ளும், எல்லாநாட்டினுள்ளும், எல்லாமக்களுள்ளும், இறைவன் திரு அருளைப்பெற்ற அடியார் உளராகலின், எம் மொழியிலும், எந்நாட்டிலும், எம்மக்களிலும் வீடுபேற்றினை எய்து தற்குரியவழியும், அதன்கட் செல்வோரும் உண்மை திண்ணமென்க. கடவுள் எங்குமுளனுய் எல்லார்க்கும் அருள் தருபவனுயிருத்தலை நீளநினைந்து பாராதே தமது சிற்றறிவையே பேரறிவாகத் திரிபு உறக்கொண்டு செருக்கி மயங்கும் புல்லறிவினுர் சிலர் வடசொல் முதலான ஒரே ஒரு மொழிக்கண்மட்டுமே மந்திரங்கள் உள என வும், அவைதம்மைப் பயிலும் ஒரு பாலார் மட்டுமே வீடுபேறெய்து வரெனவும் கொன்னே கரையாநிற்பர். அவர், அங்ஙனம் தருக்கி வறிதே மொழிவாராயினும், அவர் கூற்று இறைவனது அருட்டன் மையை உள்ளவாறு உணராது குழறும் பொய்க்கூற்றுதல், மெய் அறிவு வரப்பெற்றூர்க்கெல்லாம் இனிது விளங்குமாதலின் அது கொள்ளற் பாலதன்றென விடுக்க.

இனி, மந்திர அத்துவா ஆவன ஒவ்வொரு சொற்றொடரும் பலசொற்களால் (பதங்களால்) ஆக்கப்படுதலின், அம்மந்திரங் கட்கு எல்லாம் ஏது (காரணம்) பதங்கள் அல்லது சொற்களேயா மென்பதுதானே போதரும். இவ்வாறு சொற்றொடர்களை ஆக்கும் சொற்களின் தொகுதியே **'பதஅத்துவா'** எனப் பெயர்பெற்றது. 'ஓம்' சிவமே போற்றி' என மேற்காட்டிய மந்திரத்தில் 'ஓம்' 'சிவம்', 'ஏ', 'போற்றி' என்னும் நான்குசொற்களும் பதங்களாம். இங்ஙனம் ஒவ்வொரு மொழிக்கண்ணுமுள்ள சொற்கள் எண் இறந்தனவாம் என்க.

இனி, ஒவ்வொருபதமும் ஒன்றல்லது பல எழுத்துக்களால் ஆக்கப்படுதலின் இவ்வெழுத்துக்களே **'வர்ண அத்துவா'** எனப் பட்டன. 'வர்ணம்' என்னும் வடசொல் எழுத்து என்னும் பொருட்டு. மேற்குறிப்பிட்ட மந்திரத்தில் ஓம் முதலாகிய எட்டு எழுத்துக்கள் இருத்தல் காண்க. இம்மந்திரம், பதம், வர்ணம் முதலிய மூன்றும் எழுத்தோசைகளே ஆதலின், இவை **'வைகரி'**, **'மத்திமை'**,

**'பைசந்தி'**, **'சூக்குமை'** என்னும் நால்வகை வாக்குகளுள் அடங்குவனவாம். இவற்றுள், 'வைகரி' வாக்காவது, தன்னின்று பேசுவான் செவிக்கும், முன்னின்றுகேட்பான் செவிக்கும் நிரம்ப வும் புலனுவதாய்ப், பேசுவான்நினைந்த பொருளைக் கேட்பானுக்கு அறிவு உறுத்துப் புறத்தேவிளங்கித் தோன்றுவது. மத்திமைவாக் காவது, புறத்துள்ளார் செவிக்குப் புலனுகாத மெல்லோசையாய், ஒருவனது மிடற்றின்கண்மட்டுமே நிகழ்ந்து, அவற்குப் பல்வேறு ணர்வுகளைப் பயக்கும் நீரது. பைசந்தி வாக்காவது, இனிப்பிறப் பதாகிய மயிலின் தோகையிற்காணப்படும் ஐவகை நிறங்களும், அதன் முட்டைக்குள் நீரில் நுண்ணியவடிவில் அடங்கிநிற்றல்போல, மிடற்றின்கண் வேறு வேறு பிரிந்து நின்ற எழுத்துக்களெல்லாம் நுண்ணிய வடிவில் நினைவின்கண் அடங்கிப் பல்வேறுணர்வுகளைப் பயவாது, பொது உணர்வுமட்டுமே நிகழ்தற்குக் கருவியாய் நிற் பது. சூக்குமை வாக்காவது, தன்காரியமாய்த் தோன்றும், பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் மூன்றுமட்டும் அழிவெய்தத், தான் அழியாததாய் அகத்தே அறிவு ஒளி ஓசையாய் விளங்காநிற்பது. வைகரிவாக்கைச் செவி ஓசை எனவும், மத்திமைவாக்கை மிடற் ருேசை எனவும், பைசந்திவாக்கை நினைவோசை எனவும், சூக் குமவாக்கை நுண்ணோசை எனவும் நேரே தமிழில் மொழிபெயர்த் துக் கொள்க.

மந்திரம், பதம், வர்ணம் என்னும் மூன்றத்துவாக்களும், இவை பிறத்தற்கிடமாகிய நால்வகை வாக்குகளும், ஓசைவடிவிற்ருய 'சொல்லுலகம்' (வாக்கியப்பிரபஞ்சம்) எனப் பெயர்பெறும்.

இவ் வெழுத்தோசைகளெல்லாம் பிறத்தற்கு முதற்காரணப் பொருள்தான் விந்து என்னும் சுத்தமாயைதான் என்று அறிதல் வேண்டும்.

ஐம்பெரும் பொருள்களுள், இறுதிக்கண்நின்ற வான்வெளியே ஓசைக்கு முதற்காரணமாம் என்பது, எல்லார்க்கும் ஒப்பமுடிந்த தொன்ருகவும், அதனை விடுத்து **விந்துவே** அதற்கு முதற்காரண மாமென்றல் யாங்ஙனமெனில் கூறுதும். மண் புனல் அனல் கால் என்னும் ஏனை நாற்பெரும் பொருள்களுக்கும் இடங்கொடுத்து, அவற்றையெல்லாம் ஊடுருவி நிறைந்து. நிற்கும் அத்துணையே வான்வெளி உடையதல்லது, அதுதான் இயங்கி ஏனையவற்றை இயக்கும் தொழிற்பாடு உடைத்தன்று. தொழிற்பாடு இலதாகவே, அத்தொழிற்பாட்டின்கண் தோன்றும் எடுத்தோசையும் உடைத்தன்று,

காற்றுச்சுழன்று வீசுமிடத்தும், முகில் ஒன்றேடொன்று உரை சுமிடத்தும், தீ முறுகி எரியுமிடத்தும், நீர் விரைந்து செல்லுமிடத் தும், ஓசை உண்டாதலைச் செவிப்புலனல் அறிகின்றேம். இவ் வியக்கம் இல்லாமல் அவை எல்லாம் வறிதே இருக்குங்கால் அவை அவ்வோசை உடைய ஆகாமையும், இனிது அறியப்பட்ட வாறேயாம். நிலம் முதல் நாதம் ஈருகிய எல்லாத்தத்துவங்களும், விந்துவின் இயக்கத்தான் மட்டுமே தோற்றமுற் றெழுந்து இயங் குகின்றன என்பதைக் கருத்தில் வைத்துக்கொள்ளல் வேண்டும். விந்து ஒன்றுமே எல்லாவற்றுக்கும் முதன்மையான தொழிற்பாடு உடையதாகும். அஃது உடைத்தாகவே, விந்து ஒன்றுமே எல்லா ஓசைகட்கும் முதற்காரணமாம் என்க.

அற்றன்று, விந்துவும் அறிவில் பொருளேயாகலின் அதுவுந் தானகவே இயங்கமாட்டாது. அஃது இயக்கமுடைத்தாவதும், இறைவ னேடு ஒற்றித்து நிற்கும் இறைவியால் இயக்கப்பட்டவழியேயாம். அதனல், இறைவியே எல்லா ஓசைகட்கும் முதற்காரணம் என்று ரைத்தல் வேண்டும். அங்ஙனம் உரைப்பின், அறிவுருவினளாய இறைவியும் தொழிற்பாடு உடையளாம் என்று உரைக்கவேண்டுத லின், தொழிற்பாடுடைய ஏனைய அறிவில் பொருள்போல வரை யறைப்பட்டு இறைவியும் வேடுபாடுறுவள் என்று கொள்ளப்படு மாலோ எனின்; நன்றுகடாயினய், மலத்தாற் கவரப்பட்டு மாயை யில் துவக்குறும் நம்மனேர் சிற்றறிவுகள் நடைபெறும் முறையேபற் றித், தூயளாய் எல்லையற்ற அறிவினளாகிய இறைவியின் இயக் கத்தை அளந்தறியப்புகுதல் பொருந்தாது. எல்லாப்பொருள்களின் உள்ளும் புறம்புமாய் எல்லையற்று விரிந்துநிற்கும் அறிவுருவினளாய இறைவி ஏனை வரையறைப் பொருள்போலத்தானும் இயங்கிப் பிறி தொன்றினையும் இயக்குவள் என்றல் பொருந்தாது. இடத்தானும், காலத்தானும், வரையறுக்கப்படும் பருப்பொருள், நுண்பொருள் களே ஓரிடத்தைவிட்டுப் பிறிதோரிடத்துக்குப் பெயர்ந்து செல்வன வன்றி, அவற்றுன் வரையறுக்கப்படாத விரிந்த அறிவுப்பொருள் அவ்வாறு செல்வதின்று. அதனல், இறைவி தான் இயங்காமல் நின்றே, விந்து மாயையை இயக்குவள் என்க. அஃது யாங்ஙனம்? தானும் இயங்கிப் பிறிதொன்றினையும் இயக்கும் முறையே எருது ஊரும் சகடை முதலியவற்றிற் கண்டனமால் எனின்; அது பெரும் பாலும் ஒக்குமாயினும், சிறுபான்மை. தான் இயங்காது நின்றே பிறிதொன்றனை இயக்குமாறும் உண்டென்பது தான் இருந்தாங் கிருந்து இருப்பூசியை இழுக்கும் காந்தக்கல்லின் வைத்துக்காணப் படும்.

8

அல்லதூஉம், நமது உடம்பினுள் இருக்கும் உயிர், தான் அசைவில்லதாய் இருந்தே அவ்வுடம்பின் அகத்தும் புறத்துமுள்ள உறுப்புக்களை இயக்கும் தன்மையும் நம்மனோர் ஒவ்வொருவரும் அறிந்ததொன்றேயாம். ஆகவே. எல்லாம்வல்ல இறைவிதான் அருவுருவினளாய் அசையாதிருந்தே, தன்னோடு ஒன்றியியைந்து நிற்கும் விந்து மாயையை அசைத்து இயங்கச் செய்வளாகலின், அவள் அதுபற்றி வேறுபாடு சிறிதும் உறுவள் அல்லள் என்க.

இனி, அவள் தான் சிறிதும் அசைவிலளாகலின் அசைவினுற் பிறக்கும் எழுத்தோசைகட்கெல்லாம் அவள் காரணமாதலும் செல்லாது. எனவே, இறைவியால் உந்தப்பட்டுத் தானும் இயங்கிப் பிற பொருள்களையும் இயக்கும் விந்து ஒன்றுமே எல்லா ஓசைகட்கும் முதற்காரணமாதல் பெறப்பட்டது.

அன்றன்று, இடைவெளியிலுள்ள அணுக்கள் ஒன்றை ஒன்று மோதுதலால் ஓசை உண்டாகின்றதென இஞ்ஞான்றை இயற்கைப் பொருள் நூலாரும் ஆராய்ந்துரைக்கின்றமையின், வான்வெளியே எல்லா எழுத்தோசைகளும் பிறத்தற்கிடமாம் எனின்; நன்றுகூறினாய்! எல்லா உறுப்புக்களோடுங் கூடிய ஒருவன் ஓரிடத்திலிருந்து வாயைத் திறந்து கூறிய ஒரு சொல் இடைவெளியில் நின்ற அணுக்களை அசைத்து அவ்வாற்றால் சிறிது தொலைவில் நின்ற வேறொருவன் செவிக்கட்சென்று படுவதல்லாமல், எவரும் பேசாமலிருந்துழி அங்ஙனம் எழுத்தோசைகள் இடைவெளியில் தோன்றக்காணாமையின், எழுத்தோசைகட்குக் காரணம் இடைவெளியேயாமென்றல் சாலாது. அவ்வாறு கோடலாகாது; புறத்தேயுள்ள இடைவெளியே பேசுவானகத்தும் உளதாகலின், அவனுள்நின்று எழூஉம் அவ்வோசைகள் இடைவெளியைக் காரணமாய்க்கொண்டு போதரும் என்பதே எமது கருத்தாமாலெனின்; உடம்பின் உட்கருவிகளும் அவற்றை இயக்கும் உயிர்க்கிழவனும் வாளாவிருந்துழி, அகத்துநின்ற இடைவெளி அவ்வெழுத்தோசைகளைத் தோற்றுவிக்குமோ எனக் கடாயினார்க்கு இறுக்குமாறு ஏதுமின்மையின், இடைவெளியே எழுத்தோசைகளுக்கெல்லாம் காரணமாமென்றல் ஒருவாற்றானும் பெறப்படாதென்க.

அற்றேல், அகத்தும் புறத்துமுள்ள உடம்பினுறுப்புக்களும் அவற்றை இயக்கும் உயிர்க்கிழவனது முயற்சியுமே எழுத்தோசைகட்கெல்லாம் காரணமாதல் கண்கூடாய் அறியக் கிடத்தலின், அவற்றை விடுத்து அங்ஙனம் அறியப்படாத விந்து என்பதே அவற்றின் காரணமாமென்றல் யாங்ஙனமெனின், உடம்பும் அதன்

அகத்தும் புறத்துமுள்ள உறுப்புக்களும், விந்துவி னியக்கத்தினு லேயே யடைக்கப்பட்டு, அஃது அசைக்கவே அசைந்து வருகின்ற மையின், விந்துவினின்று ஓர் எழுத்தோசை பிறக்குங்கால் வாயி னுறுப்புக்களுள் அதற்கு ஏற்பன இயங்கி அதனைப் புலப்படுத்து கின்ற தென்க. அற்றன்று, உயிர்க்கிழவனது முயற்சியால் அவன் நினைத்த எழுத்தோசைக்கு ஏற்ப, அவன் வாயுறுப்புக்கள் அசைந்து அதனைப் புலப்படுத்துகின்றதென் றுரைத்தலே பொருத்தமுடைத்தா லெனின்; அஃதொவ்வாது. உயிர்க்கிழவன் உடம்பினகத்தே நின் றானேனும், ஆண்டுள்ள மிக வியப்பான உறுப்புக்களின் இயல்பு களையும், அவைதம்மை இயக்குமாற்றினையும் ஒருசிறிதும் உணரா னென்பதற்கு, நம்மவருள் ஒருவரை, அருகழைத்து, நீர் எங்ஙனம் கண்விழித்துப் பார்க்கின்றீர்? நீர் பார்த்தற்குக் கருவியான நுமது விழி நும்முள்ளே எவ்வாறு அமைந்திருக்கின்றது? என்று வினவி னால் அவர் அதற்கு விடை பகரத் தெரியாமற் றிகைத்தலே சான் றும். அதனால், உயிர்க்கிழவன் ஒன்றைச் சொல்ல நினைந்த அள வானே, அவனோடு உடன்கலந்து நிற்கும் இறைவியின் அருளாற் றல் தன்னோடு ஒற்றித்துள்ள விந்துமாயை என்னும் மின்னை இயக்கி உதவ அம்மின், நரம்புகளின்வழியே கடிதுஓடி வாயினுறுப் புக்களை இயக்கித் தன்கட் பிறக்கும் எழுத்தோசைகளைப் பிறப்பிக் கின்றதென உணர்ந்துகொள்க. உயிர்க்கிழவன் வேண்டியதோ ரியக்கத்தினை அகப்புற உறுப்புக்களில் ஓடிச்சென்று அவற்றின் கண் விளைக்குமாற்றல் மின்னாற்றலோடு ஒத்ததா யிருக்கின்ற தென இஞ்ஞான்றை மனநூலாருங் கூறுதல்காண்க. அல்லதூஉம், வாயுறுப்புக்களி னியக்கமே, அவ்வெழுத்தோசைகட் கெல்லாம் காரணமாமென்று உரைத்துமெனின்; அதுபொருந்தாது. வாயி னுறுப்புக்கள் அவ்வெழுத்தோசைகளைப் புலப்படுத்துதற்குரிய துணைக் கருவிகளேயல்லது அவற்றிற் கவை முதற்கருவியாகா. குடத்திற்கு மண் முதற் கருவியும், திகிரியும் கோலும் துணைக் கருவியும், குயவன் வினைமுதலுமாய்க் காணக் கிடத்தல்போல எழுத்தோசைகட்கும் விந்து முதற்கருவியும், வாயினுறுப்புக் கள் துணைக்கருவியும், உயிர்க்கிழவனும் திருவருளாற்றலும் வினைமுதற்கருவியும் ஆம் என ஓர்ந்துகொள்க. உண்ணின்று எழூஉம் ஓசையாகிய முதற்கருவி, வாயுறுப்புக்களின் பலவேறுவகை இயக்கத்தால் பலவேறுவகை எழுத்தோசைகளாய்ப் பிரிவுபட்டுத் தோன்றுநிற்கின்றனவென் றுணர்ந்துகொள்க. அல்லதூஉம், வான் வெளியே ஓசையினை ஒருபண்பாக உடையதென்று நூல்கள் ஓது மாறென்னையெனின்; ஓசைதான் இருவகைப்படும். எழுத்தோசை யுங் குறிப்போசையுமென. இவற்றுள் எழுத்தோசைதான், விந்துவை

முதற்கருவியாகக்கொண்டு வாயுறுப்புக்களாகிய துணைக்கருவியாற் றோன்றிப் பொருள் அறிவுறுப்பது; மற்றுக் குறிப்போசையோ, வான்வெளியை முதற்கருவியாய்க்கொண்டு மண் புனல் அனல் கால் என்னும் ஏனைநாற்பொருள் இயக்கத்தாற்றோன்றிப் பொரு ளறிவியாதாய் நிகழ்வது; மண்ணின்கட்டோன்றுங் குறிப்போசை கட கட நெட நெட முதலியன; புனலின்கட் டோன்றுங் குறிப் போசை கள கள சல சல முதலியன; அனலின்கட் டோன்றுவன சட சட சர சர என்பன; கால் என்னும் வளியின்கட் டோன்று வன கஃறு சுஃறு என்பனவாம். இந்நாற் பொருளியக்க மின்றி இக் குறிப்போசை தானும் வான்வெளிக்கட் டோன்றமாட்டாது. இது வான்வெளியை முதற் கருவியாய்க் கொண்டு நிற்பினும், தான் தோன்றுதற்குக் காற்றினியக்கமில்வழி இவ்வோசை பிறர் செவிக்குப் புலனாகாது. ஒரு கண்ணாடிக் குடத்தினுள்ளே ஒரு மணி யைத் தொங்கவிட்டு, அக் குடத்தின் வாயிற் காலுரிஞ்சு பொறி (Air Pump) யைப் பொருத்திவைத்து வெளிக்காற்று உள் நுழை யாமல் உட்காற்றை வெளியே உரிஞ்சி வாங்கியபின் உள் உள்ள அம்மணியை மின்னோட்டக் கம்பியால் இயக்க, அஃதியங்குவது கட்புலனாகுமேனும் அதன் ஓசை செவிப் புலனாகாது. இனிப் பெயர்த்தும் புறக்காற்றை, அதனகத்தே செல்லவிடுத்து அம் மணியை இயக்கினால், அதன் ஓசை உடனே செவிப் புலனாகா நிற்கும். இவ்வாற்றாற், காலின் இயக்கமே வானின்கண் ஓசையைப் புலப்படுத்துதற்கு இன்றியமையாத துணைக்கருவியாமாதல் துணி யப்படும். அற்றேல், வான்வெளி தான் இயக்க முடையதாதல் காணப்படாமையானும் காற்றினியக்கத்தான் மட்டுமே ஓசையுண் டாதல் துணியப்படாமையானும், காற்றொன்றுமே குறிப்போசைக்கு முதற்கருவியாதலோடு, அதன் புலப்பாட்டிற்குத் துணைக்கருவியு மாம் என்று கொள்ளல் வேண்டும். இதனின் வேறாக வான் வெளியே அதற்கு முதற்கருவியாமென்று கோடற்குச் சான்று வேறு கண்டிலமாலெனின், அற்றன்று. வளி ஊருங்கால் மெய்க்கட் சென்று பட்டு ஊற்றுணர்வினைப் பயத்தலும், இடிமுழக்கம் முதலான வல்லோசை தோன்றியவழியும், அது செவிக்கட் சென்றுற்றுப் புலனாதலேயன்றி மெய்க்கட்பட்டு ஊற்றுணர்வினைப் பயவாமை யும் என்னையென நுணுகிக்காணலுறின், ஊற்றுணர்வுக்கு ஏது வாகிய அணுக்களினும், ஓசை யுணர்வுக்கு ஏதுவாய அணுக் கள், இறப்பவும் நுண்ணியவாதல் புலனாகாநிற்கும். ஆகவே, ஊற்றுணர்விற்கு முதலானவளியினும், ஓசையுணர்விற்கு முத லான வான்வெளி கழிபெருநுண்மைத் தாதலும் பெறப்படும். இருவேறு வகை நிகழ்ச்சிகளுள் ஒன்று மற்றொன்றின் நுண்ணிய தாதல் நேரேபுலனாதலின், இவ் விருவேறு நிகழ்ச்சிகளுக்கும் முதற்

கருவியாம் பொருள்களும் இருவேறு வகையவாதல் தானேபெறப் படுமாகலின், வான்வெளி யுண்மைக்குச் சான்று இல்லையென அவ்வாறு கடாவுதல் பொருந்தாதென்றுணர்க. என்றித்துணையுங் கூறியவாற்றுற் குறிப்போசைக்கு முதற்கருவியாவது வான்வெளி யாமென்றும், எழுத்தோசைக்கு முதற்கருவியாவது விந்துமாயை யேயா மென்றும் பகுத்துணர்ந்துகொள்க. என்றிதுகாறும் ஓசை வடிவினவாகிய மந்திரம் பதம் வர்ணம் என்னும் மூன்று அத்து வாக்களின் இயல்புகளும், விளக்கப்பட்டன.

இனி தத்துவம், புவனம், கலை, என்னும் மூன்றத்துவாக்களி னியல்புகளும் ஒருசிறிது விளக்கிக் காட்டுவாம். இம் மூன்றும், மேலெடுத்துக் காட்டிய சொற்களாற் குறிக்கப்படும் பொருட் டொகுதியாயிருத்தலின், இவை பொருள் உலகம் (வாச்சியப் பிர பஞ்சம்) என வழங்கப்படும். இவற்றுள், தத்துவாத்துவா வென்பது முப்பத்தாறுதத்துவங்களுமாகும். இம்முப்பத்தாறனுள், 'சுத்தவித்தை', 'ஈசுரம்', 'சாதாக்கியம்', 'சத்தி', சிவம் என்னுமைந்தும் சுத்த தத்துவங்களாகும். இவை சுத்தாத்துவா எனவுஞ் சொல்லப்படும். இஃது ஆணவமலச் சேர்க்கை மிகச் சிறிதே யுடையதாயும் வாலாமாயை வாலாவினை என்னும் இவற்றின் றொடர்பு அறவே யிலதாயும் மாயையும் வினையு மில்லாத 'விஞ்ஞானகலர்க்கும்' பிர ளயாகலரில் உயர்ந்தோராகிய சீகண்டருத்திரர் முதலியோர்க்கும், மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்துவம், உடம்பு நுகர்ச்சி, நுகர்ச்சிக் கருவிகளாயும் பயன்படுவதாகும். இதன்கண் வைகு முயிர் கள் பெரிதும் தூயவாதலானும், இதன் தத்துவங்கள் ஐந்தும் நேரே சிவபிரான் றிருவருள் ஆற்றலாற் செலுத்தப்படும் நுண்மை யும் தூய்மையு முடையவாதலானும் இஃது அவ்வாறு சுத்தாத் துவா வென்று சொல்லப்பட்டது. இனி, இதன்கீழ் அசுத்தமாயை யிற் றோற்றிய காலம், நியதி, கலை, வித்தை அராகம், புருடன் என்னுமாறும், இவற்றைத் தோற்றும் மாயை ஒன்றும் ஆக ஏழு தத்துவங்களும், ஆணவம் வினை என்னும் இருமலப் பற்றுடைய பிரளயாகலர்க்கு இருப்பிடமாய், அவர்க்கு உடம்பாயும் கருவிக ளாயும், நுகர் பொருள்களாயும் பயன்படுதலாலும், இவற்றின் கீழே நிற்கும் பிரகிருதி மாயையிலுள்ள வாலாமாயையினளவு இவற் றின்கண் இன்மையாமாதலும், ஆணவ மலத்தால் மறைப்புண்ட உயிர்களின் விழைவறிவு செயல்களை இவற்றுள் ஒன்றாகிய கலை என்னும் தத்துவம் அம் மறைப்பினைச் சிறிது நீக்கி விளங்கச் செய்தலாலும் இவை ஒருவாற்றுல் தூய்மையும் ஒருவாற்றுல் தூய் மையின்மையு முடையவாதல்பற்றி இவை சுத்தா சுத்த தத்துவம் எனவும், மிச்சிராத்துவா வெனவும் வழங்கப்படும். அசுத்த மாயை

யினின்று இத்தத்துவங்களைத் தோற்றுவிக்குங்கால் இறைவியினாற்றல் நேரே அசுத்த மாயையிற் றோயாத கழிபெருந் தூய்மைத்தாதலின், அது, ஈசுர தத்துவத்தி லிருப்பாரான அனந்த தேவநாயனார்பாற் பதிந்து நின்று அவரை ஊக்க, அவர் அசுத்த மாயையைக் கலக்கி அதன்கணின்று காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், என்னுமாறு தத்துவங்களையும் தோற்றுவிப்பரென்க. இவ் வசுத்த மாயாதத்துவங்களில் இருப்பாரான பிரளயாகலர்க்கு ஆணவம் வினை என்னு மிரு மலங்களோடு மாயையின் றொடர்புங் கூறப்பட்டதாகலின் இவர்க்கு மாயை யில்லையென்றல் மாறுகோளுரை போலுமெனின், அவர்க்கு மாயை யில்லையென்றது சுத்தமும் அசுத்தமும் விரவின இம்மிச்ர தத்துவங்களை யன்று; மற்றுச் சாத்துவிகம், இராசதம், தாமதமென்னும் முக்குணங்களான் மாறிமாறி உயிர்களின் அறிவை மயக்குவதாய், அசுத்த மாயா தத்துவங்களின் கீழ் உளதாகிய பிரகிருதி மாயையே யாமென் றுணர்ந்து கொள்க. பிரகிருதிக்கு மேலுள்ள தத்துவங்களில் வைகுவாரான பிரளயாகலர்க்கு முக்குணமயக்கம் இன்மையின், அவரறிவு தூயதாய் விளங்குதலானும், அது தூயதாகவே, அதுபற்றி நிகழும் வினைகளும் தூயவாய் நிகழ்தலானும் அவ்வினை தூயவாகவே, அவரைப் பற்றிய ஆணவ மலவலியும் சுருங்குதலானும், அவர் பிரகிருதி மாயையின் கீழிருக்கும் ஏனைச் சகலரைப்போல் மும்மல வலி மிக்குடையரல்லராய், இறைவன் றிருவருளை நாடி மேன் மேற் செல்லுங் கழிபெருஞ் சிறப்புடையரா மென்று கடைப்பிடிக்க.

இனி அசுத்த மாயையின் கீழ்ப் பிரகிருதி மாயையிற் றோன்றிய குணம் முதல் நிலமீறாகிய இருபத்துநான்கு தத்துவங்களும் அசுத்த தத்துவங்களென்றும், அசுத்தாத்துவா வென்றுஞ் சொல்லப்படும். இவையிற்றின்கண் உழல்வாரான உயிர்கள் ஆணவம் வினை மாயை யென்னும் மும்மலப் பற்று மிகுதியு முடையராய் முக்குணங்களான் மயங்குஞ் சகலர் என்றுரைக்கப் படுவர். வாலாமை பெரிதுடைய சகலர்க்கு ஏற்ற இருப்பிடமும் உடம்பும் கருவிகளும், நுகர்பொருள்களுமாகப் பயன் படுதலின் இவை அசுத்தாத்துவா என்று வழங்கப்பட்டன. பிரளயாகலரில் உயர்ந்தோரான சீகண்ட ருத்திரர் கலாதத்துவத்தைக் கலக்கி அதன்கண் நின்று பிரகிருதி மாயையைத் தோற்றுவிப்பர். அப்பிரகிருதி மாயையினின்று சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் மூன்று குணங்கள் தோன்ற, அத்தத்துவங்கள் மூன்றிலும் நான்முகன், திருமால், காலருத்திரன் என்னும் மூவரும், சீகண்டருத்திரனின் திருவரு

ளாணைவழிநின்று ஏனை இருபத்துமூன்று தத்துவங்களையுந் தோற்றுவித்துப் படைத்தல், காத்தல், அழித்தலென்னும் முத்தொழில்களையும் புரிவர் என்று தெளிந்து கொள்ளல்வேண்டும். இவ்வாற்றுற் குணதத்துவத்தி லிருப்பாரான காலருத்திரர்க்கும் இவர்க்கு மேற்றலைவராய்ச் சுத்தவித்தையில் வைகிக் கலாதத்துவத்தில் முத்தொழில் புரிவாரான சீகண்டருத்திரர்க்கும், இவர்க்குமேற் றலைவராய் ஈசுரம் சாதாக்கியமென்னுந் தத்துவங்களில் வைகுவாரான அனந்தர் சதாசிவர்க்கும் வேறுபாடு பெரிதாதல் காண்க,

இனி, இம் முப்பத்தாறு தத்துவங்களும், மூவகைப் பாகுபாடுடையவாய் மூவேறு முதற்பொருள்களின்றும் தோன்றினவென்றல் என்னை? அவை யனையவும் ஒரு மாயையினின்றே தோன்றினவென்றலாற் படுமிழுக் கென்னையெனின்; பொருள்களை உள்ளவாருராய்ந்து அவற்றின் றன்மைகளுக்கேற்ப அவற்றைப் பாகுபாடு செய்து தொகுத்தலும், அவ்வவற்றிற்கு முதலான இவையென்று தேர்ந்துணர்தலுமே மெய்யறிவாம்; அவற்றை யங்ஙனம் உணராது தமக்குத் தோன்றியவாறெல்லாம் பிழைபடக் கூறுதலே மயக்க அறிவும் அறியாமையுமாம். மயக்க அறிவும் அறியாமையு முளவாங்காறும் பிறவி தூயதாகாமையின் இவைதம்மைக் களைந்து மெய்யறிவுபெறுவதற்கு முயறலினும் விழுமியது பிறிதில்லையாகலின் மாயை மூன்றுதற்குக் காரணம் மேற்காட்டியவாற்றுல் நன்கு விளங்குமாயினும் அதனுணர்ச்சி இன்றியமையாச் சிறப்பிற்றுதல் பற்றி மேலுஞ் சிறிது விளக்குவாம். வயிரமணியும் அடுப்புக்கரியும் ஓரியல்பினவே யாமென இஞ்ஞான்றை இயற்கைப் பொருள் நூலார் கூறுவர். வயிரமணியை நெருப்பிலிட்டால் அது கரியாதல் கண்டு அவர் அங்ஙனம் கூறுகிற்பர். என்றுலும் நெருப்பிலிடுதற்குமுன் அதன் ஒளி விளக்கத்தையும் அழகையுங் காண்பார் எவரும் அதனை வெறுங்கரி என்று கூறுதற்கு ஒருப்படார். அஃது எற்றுலெனின், கரியின்கணுள்ள தன்மையும் அம்மணியின்கணுள்ள தன்மையும் பெரிதும் மாறுபட்டு நிற்றலாலேயாம். இனிக் கரியின் கண் இல்லாத அவிரொளி வயிரமணியில் வரலான தெங்ஙனமென வினவுவார்க்குக், கரியும் வயிரமணியும் ஒரே தன்மையவாயினும் வயிரமணியிற் றீயின் சேர்க்கை உளதானமையின் அஃது அத்துணை ஒளியுடையதாயிற் றெனின் தீயின் ஒளிவிளக்கத்திற்கு உயிர்வளி (Oxygen) யின் சேர்க்கை இன்றியமையாது வேண்டப்படுதலானும் வயிர மணியில் உயிர்வளியில்லை என்பது இயற்கைப் பொருணூலார்க்கு முடம்பாடாமாகலானும், வயிரமணியி னொளி

தீயின் கூறென்றல் செல்லாது. மற்று, அவ்வொளி விந்துவாகிய மின்னின் கூறு அம்மணியின்கண் விரவுதலானே தோன்றியதாகும்.

இனி, அவ்வாறு அதன்கட் காணப்படும் மின்னொளி நிறுத்து எடையறியப் படாமையானும், அது, பிறிதொரு பொருளாய்த் திரிவுபடாமையானும் அஃதென்றும் நுண்ணியதாய் நிற்கும் முதற் பொருளே யாவதல்லது காரியப் பொருளாமா றில்லை. இத்துணை விளக்க முடைத்தாய் அம் மணியின்கண் விரவிநிற்கும் அதுதான் விந்துமாயையென் றறியற்பாற்று. பிறிதொன்றன் உதவியை யவாவாது தன்னியற்கையிலே யொளிவிளக்க முடைத்தாய்த் திகழும் அவ்விந்து பெரிதுந் தூயதாதலும் அதுபோல் ஒளிவிளக்க மின்றிக் கரிந்து கரிதாய்க் கிடக்குங் கரி தூயதாகாமையும் நேரே கண்டறியப் படுதலின் ஒன்று சுத்தமாயையாம் என்றும் ஏனையது அசுத்த மாயையின் காரியமாம் என்றும் பகுத்துணர்ந்து கொள்ளல் வேண்டும். இதனாற் சுத்தமாயை அசுத்தமாயை யிரண்டும் வெவ்வேறுமென்று கூறிய அறிவு நூற்பொருள் சாலப் பொருத்த முடைத்தாதல் காண்க. இவ்வாறு பொருளும் அப்பொருட்டன்மையும், இருவேறு வகையவாய் நிற்றலின் அவ்வப் பொருளைச் சாருமுயிர்களும் அவ்வவற்றி னியல்புக் கேற்றவாறாய் அறிவு விளங்கு மாறுந் தானே போதரும். சுத்தமாயையைச் சாருமுயிர் தூய அறிவினதாய் விளங்கும். அசுத்தமாயையைச் சாருமுயிர் இடையிடையே மயங்கும். தூய்தல்லா அறிவினதாய் நிற்கும் எனக் கடைப்பிடித்த வேண்டும்.

இனி, புவனம் என்பது உயிர்கள் இன்ப துன்பங்களைத் துய்த்தற்கிடமாகிய உலகமாம். புவனங்கள் தத்துவங்களைப் பற்றி நிற்கும். தத்துவங்கள் கலைகளைப் பற்றிநிற்கும். கலைகள் இவ்வெல்லாவற்றையும் வியாபரித்துத் தாம் இவற்றில் வியாபகமாயிருக்கும். மந்திரங்கள், பதங்கள், வன்னங்கள் என்னும் மூன்றும் புவனங்களிற்றோன்றிய சரீரங்களைப் பற்றிநிற்கும். நிவிர்த்திகலையில் அடங்கிய புவனம் காலாக்கினிருத்திர புவனம் முதல் பத்திரகாளி புவனம் வரையில் உள்ள நூற்றெட்டும், பிரதிட்டா கலையில் அடங்கிய புவனம் அமரேச புவனம் முதல் சீகண்ட புவனம் வரையில் உள்ள ஐம்பத்தாறும். வித்தியாகலையில் அடங்கிய புவனம் இருபத்தேழும் சாந்திகலையில் அடங்கிய புவனம் பதினெட்டும், சாந்தியாதீதகலையில் அடங்கிய புவனம் பதினைந்தும் ஆக புவனங்கள் இருநூற்றிருபத்து நான்காம். இப்புவனங்களும் உயிர்கள் கன்மம் ஈட்டுதற்கும் பரகதி அடைவதற்கும் வழிகள் ஆகி அத்துவாக்கள் ஆயின.

இனி, கலைகள் நிவிர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதீதகலை, என ஐந்தாம். இக்கலைகள் ஏனை அத்துவாக்கள் எல்லாவற்றையும் வியாபரித்துத் தாம் அவற்றில் வியாபகமாயிருக்கும். அத்துவாக்கள் ஆறும் அத்துவசுத்தியின் கண் மந்திரம் பதத்திலும், பதம் வன்னத்திலும், வன்னம் புவனத்திலும், புவனம் தத்துவத்திலும், தத்துவம் கலையிலும் அடங்க, முடிவில் நின்ற கலை திரோதான சத்தியிலும், அச்சத்தி சிவத்திலும் அடக்கப்பெறும் என்ப. ஆகவே கலைகளும் அத்துவாக்களாதல் காண்க. இறைவன் அத்துவாக்களைக் கடந்து நிற்பவன். (ஈசன்) "அத்துவாமார்க்கத்துள்ளா னலன்" (செ. 64) என்னும் சித்தியார் கூற்றும் காண்க. அவன் குருமூர்த்தியை அதிட்டித்து நின்று கிரியாவதி ஞானவதி சாம்பவி என்னும் தீக்கைகளுள் ஒன்றினல் அவ்வத்தீக்கைகள் பெறுதற்குரியோருக்கு **அத்துவசுத்தி** செய்து மலத்தை ஒழித்துச் சிவம் விளங்குதற் கேதுவாகிய ஞானத்தை நல்கிப் பிறப்பை அறுப்பன் என்பது.

சுருங்கக் கூறின், மந்திரவன்னங்கள் வாக்காலும், புவனங்கள் காயத்தாலும், தத்துவங்கள் மனத்தாலும் கன்மம் ஈட்டப்படுதற்கு வழிகள் ஆகின்றன. கலை சத்தியாய் மூவகையாலும் கன்மம் ஈட்டுதற்கு உபகரணம் ஆகின்றது. இதனலேயே, "கன்மங்கட்கு முன்னிலையாம் மூவிரண்டாம் அத்துவா" என்ருர் அருணந்தி சிவாசாரியரும். இறைவனை அடைதற்கும் இவை வழிகளாதல் ஆறத்துவாக்களிலும் சஞ்சிதமாயிருந்த கன்மங்களையெல்லாம் ஏககாலத்திலே புசிப்பித்துத் தொலைத்து முத்தி கொடுத்தலாகிய அத்துவசுத்தியானும், பிறவற்ருனும் பெறப்படும்.

இதுகாறும் கூறியவாற்ருல், அத்துவாக்களுள், புவனம், தத்துவம், கலை ஆகிய மூன்றும் பொருள்வடிவின என்பதும், ஆதலால் அவை பொருட்பிரபஞ்சம் அல்லது பொருள் உலகு எனப்படும் என்பதும், அவற்றுள் தத்துவம் முப்பத்தாரும் என்பதும், அவை எவை என்பதும் அவை அத்துவாக்கள் ஆமாறும், புவனங்கள் இருநூற்றிருபத்து நான்கு என்பதும், அவை அத்துவாக்கள் ஆமாறும், கலைகள் ஐந்து என்பதும், அவையும் அத்துவாக்களாம் என்பதும், இவ்வத்துவாக்கள் இறைவனல் பக்குவமெய்தினேர்க்குத் தூய்மை செய்யப்படுகின்றன என்பதும், அவை தூய்மை செய்யப்படுமாறும் பிறவும் ஒருசிறிது எடுத்துக்காட்டப்பட்டன. இவற்றின் விரிவைச் சைவசித்தாந்த நூல்களுட் காண்க.

**அத்துவா மார்க்கம் ஆறும் அகற்றியெ அடியனேனைத்**
**தத்துவா தீதனுக்கும் சற்குரு தாள்கள் வாழ்க.**

---

# 12. குருவின் பெருமை

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்(டு)
அன்னிய மின்மையி னரன்கழல் செலுமே

என்பது சிவஞானபோதம் எட்டாஞ் சூத்திரம். வெண்கொற்றக் குடையும் மணிமுடியும் சிங்காதனமும் மன்னவர்க்கே யுரிய சிறப்படையாளங்கள். அஃதேபோலப் பிரபஞ்ச மெல்லாவற்றிற்கும் மூலகாரணமாதலாகிய ஒப்பற்ற **வெண்கொற்றக் குடையும்** எவற்றையும் ஒருங்கே ஓரியல்பானறியும் பேரறிவாகிய ஒரு பெருஞ் **சுடர் முடியும்**, எவற்றையும் அங்கங்கே உயிர்க்குயிராய் நின்று செலுத்தலாகிய **சிங்காசனமும்** பிறர்க்கின்றித் தனக்கே உரிமையாக உள்ள சிறப்பு, பசுக்களுக்குப் பாசங்களை அரித்தலால் அரன் என்னும் திருப்பெயரை உடைய முதல்வற்கே உரியது என்க. ஆகவே, அம்முதல்வனை மன்னனாகவும், அம்முதல்வனது பேரானந்தப் பெருஞ்செல்வம் முழுதும் தனதேயாகக் கொண்டு அநுபவிக்குஞ் சுதந்திரமுடைமையும் சித்து எனப்படுஞ் சாதியொப்புமையும்பற்றி ஆன்மாவை மன்னவன் மைந்தனாகவும், அவ்வான்மாவை அறிவுப் பெருஞ்செல்வம் முழுவதும் ஆறலைத்துச் சூறைகொண்டு சிறுமையுறுத்தலும், விதிவிலக்கை இழப்பித்தலும் இழிதொழிலில் நிற்பித்தலும் ஆகிய இயல்புபற்றி ஐம்பொறிகளை வேடராகவும் ஆசிரியர் உருவகஞ்செய்த சிறப்பு நுண்ணிதின் நோக்கி மகிழ்தற்பாற்று. அன்றியும், இச்சூத்திரத்தால், முதல்வனே உயிர்க்குச் சற்குருவாய் வந்து உணர்த்துவான் என்பதும் நன்கு பெறப்பட்டது. குருவின் பெருமை கூறப்புகுந்த சிவஞானசித்தியாரும் ஞானகுருவை, "ஈசனிவன்றான்" என்று கூறுதல் காண்க. அஃதாவது, பக்குவம் நோக்கிவந்து மலநீக்கஞ் செய்யும் பரமாசாரியனாகிய முதல்வனும் இந்த ஞானகுருவே என்பது. இதனானே குருவடிவத்திலிறைவனைக் கண்டு வழிபடல் வேண்டுமெனக் காட்டியவாறறிக.

"அஞ்செழுத்தி னுருவாகி அறிவுமாகி, ஆதிநடு வீறாகி, அநாதியாகிச்
செஞ்சடையிற் கொன்றை தும்பை அணிந்தோ னாகித் தேனாகிப்
பாலாகிச் செகமே யாகி
மஞ்சுலவுங் குழலுமையாள் பாகனாகி மகிழ்ச்சியுடன் எனை
யாண்ட குருவுமாகி
வஞ்சமறத் தொழுமடியார் உளத்தின்மேவும் வள்ளல்தனைப்
பணிந்தேத்தி வணங்குவாமே"

என்றதும் இது குறித்தமை நோக்குக. இதனாற் குருவினதின்றியமையாமை பெறப்பட்டது.

''மந்திரத்தான் மருந்துகளான் வாய்த்த வியோகத்தான்
மணியிரத குளிகையினுன் மற்று மற்றுந்
தந்திரத்தே சொன்னபடி செய்யவேத சகலகலை
ஞானங்கள் திரிகால ஞானம்
அந்தமிலா அணிமாதி ஞானங்க ளெல்லாம்
அடைந்திடும்ஆ சானருளால் அடிசேர் ஞானம்
வந்திடுமற் ரென்ருலும் வாரா தாகும் மற்றவையும்
அவனருளான் மருவு மன்றே''

என்னுஞ் சிவஞானசித்திச் செய்யுள் இதனை நன்கு வலியுறுத்து தல் காண்க. மந்திரம், மருந்து, அட்டாங்கயோகம், மணி, இரத குளிகை முதலிய யாவும் அறிவு தருவனவே யாயினும், அவை பாசஞானத்தையே யுதவிப் பல்வகைச் சித்திகளில் முடியுமேயன் றிப் பதிஞானம் பயந்து முத்தியின் முடியா. உலகில் அறிவென் றும் ஞானமென்றும் பொதுவாக வழங்கும் அறிவு மெய்யறிவன்று. அது சித்திகளையுதவும். அது மந்திரம், மருந்து, யோகம், மணி, இரதகுளிகை முதலியவற்றுள் ஒன்ருனும் பலவற்ருனும் பெறத் தக்கது. இதனுல், அதன் சிறுமை புலனுகின்றது. திருவடி ஞானம் ஒன்றே முத்திகூட்டும் என்ப. அது குருவருளாலேயே பெறற் பாலது. ஞானகுருவே சித்தி முத்தி இரண்டற்குமாகிய ஞானம் உதவும் ஆற்றலுளன். ஆகவே ஞானகுருவின் இன்றியமையாமை நன்கு உணர்தற்பாலது. இவ்வுண்மை, இக்காலத்துக் கல்வியென வும் கலாசாலையெனவும் புனைந்துரை படைத்துப் பௌதீக லௌ கீக அறிவு மாத்திரமே புகட்டி, பெறுதற்கரிய மானுடயாக்கை யைப் பெற்றதன் பயன் அதனைக்கொண்டு நிலையிலா வாழ்வில் நிலையிலாப் பொருளைத் தேடி, நிலையிலா உடலையும், அதன் போகபோக்கியங்களையும் பெருக்குவதே எனவெண்ணி, மெய்யறி வும் மெய்க்கல்வியுந் தெளியாது, தெளிந்தவர்வாய்க் கேளாது, கேட்டாரோடு கூடாது, திரிந்து வாணளை வீணாக்கி, லௌகீக விற்பத்தி யந்திரங்களே போன்று உழலும் நம்மனோர் பலர்க்கும் அத்தியாவசியகம் தெரியவேண்டிய தொன்ருகும். அவ்வாறன்றி, ஞானகுருவை நாடி மெய்க்கல்வி கற்றலே எம்பெருங் கடனுகும். அதுவே வாழ்க்கையின் நோக்கமாகும்.

இத்தகைய குருவைச் சேவைசெய்யும் பயன் இதுவெனக் கூறப்புகுந்த அருணந்தி சிவாசாரியார்,

பரம்பிரம மிவனென்றும் பரசிவன்ரு னென்றும்
பரஞான மிவனென்றும் பராபரன்ரு னென்றும்
அரன்றருஞ்சீர் நிலையெல்லா மிவனே யென்றும்
அருட்குருவை வழிபடவே யவனிவன்ரு னுயே
இரங்கிவா ரணமாமை மீனண்டஞ் சினையை
இயல்பினெடு பரிசித்தும் நினைந்தும் பார்த்தும்
பரிந்திவைதா மாக்குமா போற்சிவமே யாக்கும்
பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந் தானே

என்று கூறிப்போந்தமை காண்க. குருமூர்த்த மிடமாக நின்று கருணையா லருள்புரிவது பரம்பொருளே என்பதை வற்புறுத்துவார் 'அவனிவன் ருனுயே இரங்கி'' என்று கூறியமை நோக்குக. ''சகலர்க்கும் கன்ம ஒப்பில் தரையில் ஆசான் மூர்த்தி ஆதார மாகித் தரிப்பொழிப்பன் மலம்'' என்பதையும் பார்க்க. சிற்றம்பல நாடிகள் பாடிய திருச்செந்தூரகவலிலும், ''மும்மலமுடைய சகலன் நீ மொழியின் அம்மலம் நீக்கியாட்கொண்டருள மானைக்காட்டி மான் பிடிப்பவர்போல் மானுடவடிவாய் வந்தனம்'' என வருதல் நோக்குக. அவ்வகவலில் ஆசிரியர், இறைவன் குருவாய்வந்து தமக்குபதேசித்த முறையை விரித்துத் தெளிவாகக் கூறியருளுகின் ருர். கோழி முட்டையின்மேல் அடைகிடந்து பக்குவம் நோக்கி முட்டையைப் பிரித்துக் குஞ்சுகளை வெளிப்படுத்துவதும், ஆமை கடலின் கரையிலே சேமித்த தன் முட்டையைத் தூரவிருந்து நினைத்திருப்பதனுற் குஞ்சாக்குவதும், மீன் தன் சினையைக் கண் ணுலே நோக்கிநின்று குஞ்சாக்குவதும் உலகறிந்த உண்மைகள். இவை மூன்றும் பரிசதீக்கை அஃதாவது மெய்தீண்டுதல், மானச தீக்கை அஃதாவது அகத்திருத்துதல், சட்சுதீக்கை அஃதாவது நோக்கிற்படுத்தல் ஆகிய மூன்றுக்கும் உவமையாயின. கைவல்ய நவநீதமும் ''அன்னை தன் சிசுவை யையன் ஆமை மீன் பறவை போலத் தன்னகங் கருதிநோக்கித் தழுவி'' என்று கூறுநிற்கும். அங்ஙனமே, குருவும் அகமாசும் புறமாசுந் துடைத்துச் சிஷ்யனைத் தம் வண்ணமாக்குவர் என்க. எனவே, ஆன்ம ஈடேற்றம் ''ஞான தருவானே யாம் என்பது ஒருதலை''. ''வார்த்தைசொலச் சற்குரு வும் வாய்க்கும் பராபரமே'' என்று தாயுமான அடிகளும் கூறுவது காண்க. மக்கள் சாதிக்குஞ் சாதனைகள் யாவும், தமது உறைப் பின் வண்ணம் சித்தவிருத்தி விளைக்க அவ்விருத்தி உண்மை நாட்டத்தைக் கிளர்த்த, அந்நாட்டத்து இடைவிடாதியங்கி வரவே, சற்குரு வாய்ப்பதற்கே உற்றவாம் என உணர்க. அத்தகைய சற் குருநாதன் இறைவன் நமக்கு வார்த்தை சொல்லும் வாயிலாகு மெனவும், அவ்வாயிலானன்றிப் பிறிதெவ்வாயிலானும் மெய்ஞ் ஞானங்கூடல் முடியாதெனவுந் தெளிக. ஆகவே, குருவே யாவர்க் குங் கண்கண்ட ஈசன். அவனைச் சேவை செய்தலே சிவனடி சேவையாகும். ஞானியருந் தம்மை வாதனுமலந் தாக்குருவண்ணம் குருசேவைசெய்து குருவழியொழுகி வருவரெனின், எம்போன்ருர் குருவை நாடிப் புகழ்பாடிக் கொண்டாடிப் பதம்பேணி வாழ்தல் எத்துணை இன்றியமையாதது என்பது கூறவும் வேண்டுமோ?

# 13. நான் கண்ட காட்சி

முல்லை முகைகள் வெண்ணகை யரும்ப, மல்லிகையும் மாதவியும் வாய்விள்ள, ஆம்பன் முகைகள் தேன் பிலிற்றி இதழ் விரிக்கத் தேனும் வண்டும், தேறன்மாந்திக் களிசிறந்து செவ்வழி பாடச் சிறுதென்றல் மணம்வீசி மென்மெல வசைய, பூரணசந்திரன் அமிர்தகிரணங்களைப் பரப்பித் தாரகாகணங்கள் புடைசூழ ஆகாசவெளியில் உதயமானுன்.

ஆகா! நக்ஷத்திரேசனே! நின் இரவரசாட்சியின் பெருமையென்ன! நின் அழகின் பொலிவென்ன! எவ்வுயிர்க்கும் தண்மையை யளிக்கும் வெண்ணிலவாய்த் திகழ்கின்ருய்! ஈசனுர் திருமுடியில் இலங்கும் சிறப்பு நினக்கன்றே பொருத்தமானது. அந்தோ நின்வரவைக் கண்டு விருக்ஷங்கள் யாவும் தலைகளை நிமிர்த்தி மலர்களையேந்தி வரவேற்கின்றனவே. கொடிப்பூக்களும் நீர்ப்பூக்களும் மணம் வீசி அழகொடு திகழ்கின்றனவே. இவைகளிங்ஙனமாக நின் வருகையைக் கண்ட தாமரைகள் கூம்புகின்றனவே. ஆனுல் நீயோ எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு, எல்லார்க்கும் யாவற்றிற்கும் ஒரு படித்தான தண்ணிலாவையே யளிக்கின்றனை. நின்னைக்கண்ட செந்தாமரைகள் மெய்யசைந்தமையின் காரணம் யாதோ? இக்காரணத்தை யறிய முயலுங்கால், இவற்றையெல்லாம் ஒழுங்குபெற நடைபெறச் செய்யும் ஒரு தெய்வசக்தியுண்டென்னும் உண்மை இனிது புலப்படுகின்றதல்லவோ?

இன்பமும் துன்பமும் நம் மனத்தி னுள்ளேயே யிருக்கின்றன. நம்மைச் சூழ்ந்துள்ள பொருட்களில் ஒன்றுமில்லை. நமது மனோநிலையே இன்ப துன்பங்களை யளிக்கின்றது, நான் காணும் காட்சி தான் யாதோ?

விருக்ஷங்களிற் கனிகள் மிளிர்கின்றன. மலர்கள் மணம் வீசுகின்றன. இரவரசியின் அழகிய மடிமீது பட்சி சாலங்கள் யாவும் துயில் செய்கின்றன மந்த மாருதம் மென்மெல வியலி அவற்றைத் தாலாட்டுகின்றது. என்னே தெய்வசக்தியின் சிறப்பு! நாமம் ரூபம், உணவு, வர்ணம், குடி, கோத்திரம் ஆதிய யாவும் பலபேதமாய்த் திகழ்கின்றன. ஆனுல் இவைகள் ஒன்ருலும் வாதில்லை. சண்டையில்லை, வழக்கில்லை. என்னே நமது மானிட ஜென்மம். எத்தனை சாஸ்திரம், எத்தனை கோயில், எத்தனை குருமார், உலகம் பலவிதம் என்றபடி இவைகளெல்லாம் பல பேதமா யிருக்க

லாம். ஆனால் இவற்றைக் குறித்த சண்டைகளோ எண்ணமுடியாத னவா யிருக்கின்றனவே. சித்தாந்தச் சண்டை, வேதாந்தச்சண்டை, பூச்சுச்சண்டை. மூர்த்திச்சண்டை, கோயிற்சண்டை, தீர்த்தச் சண்டை, மோக்ஷச்சண்டை. ஆகா! எத்தனை சண்டைகள் மூளு கின்றன. ஆ! கலாமதியே, நீ கதிர்பரப்பி நின் கடமையை-ஆண்ட வன் பணியை - ஆற்றுவதுபோல், மனிதனும் தன் கடமையைச் செய்து, தன்வழிச் சேறலாகாதோ? இச்சண்டைகளெல்லாம் எற் றுக்கு? என்னே மனித சமுதாயத்தின் மடமைத்தனம்.

அழகும் மணமு முள்ளதென்று ரோஜாமலர் பிடுங்கச் சென் றால் அதிலுள்ள முட்கள் தைக்கின்றன. அதுபோல், ஒவ்வொரு விஷயத்திலும் குணமும் குற்றமும் இருத்தல் இயல்பென்று மதித்து, இச் சண்டைகளை விடலாம் என்றால், யாம் செல்லும் வழி யொன் றும் தென்படவில்லையே. சித்தாந்தக் கடவுளையோ அன்றி வேதாந் தக் கடவுளையோ மெய்யென்று நம்புவோம் - அந்த உண்மையான கடவுளை யெங்ஙனம் தெளிந்து கொள்வோம் என்னும் சிந்தனை யில் ஆழ்ந்திருக்கும் சமயத்தில்,

குறுகிய ரூபமும்-வெளிறிய குஞ்சியும்-உரமுறு புயங்களும்-நரைதிகழ் மேனியும்-கிறியுறு முறுவலும் அறிவொளிர் பார்வையும்-சததளகமலந் தனைநிகர் வதனமும் பொலிவொடு விளங்க, கதிரவர் பன்னிருவரும் ஒருவழித் தோன்றி யாங்கு ஒளிதிகழ ஓர் அருட் பெருஞ் சோதி வடிவம் என் கண்முன்னே நிற்கக் கண்டேன்.

சித்தாந்திகளும், வேதாந்திகளும், சமணர்களும் புத்தர்களும், கிறீஸ்துவர்களும் ஆகப் பலமதத்தினரும் அவ் வருட்பெருஞ் சோதி யினெதிரே யோடக் கண்டேன். அவ்வேளையில், அங்கு நடப்ப தைப் பார்க்கலாமென்று விரைந்து சென்றேன். என்னே நான் கண்ட காட்சி. ஆண்டவனுக்கு அணித்தாயுள்ளவன் நானே நானே யென்று ஒவ்வொருவரும் முந்தி முந்திச் சென்றனர். ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் நெருக்கித் தள்ளும்போது, வாது களும் சண்டைகளும் நிகழ்ந்தன. உபவீத மணிந்த யானும் சட் டையும் தொப்பியும் போட்ட நீயும் சரியோ? சடைமுடியொடு காவியுடுத்த யானும் கன்னத்தில் உச்சி கிழித்துப் பின்னற் கொண்டை கட்டி ஜரிகைப் பட்டாடை யணிந்த நீயும் சரியோ? நெற்றியில் திரிபுண்டரமணிந்த யானும் சமணனாகிய நீயும் சரியோ? வடகலை தென்கலை யெல்லாம் தெளிவுறக் கற்ற சகல கலா பண்டிதனாகிய யானும், பாமரனாகிய நீயும் சரியோ? ருத்

திராக்ஷமணி யணிந்த யானும் குருசிலணிந்த நீயும் சரியோ? சித்தாந்த சாஸ்திரங்களெல்லாம் தெளிவுறக் கற்று அவற்றின் சாரங்களை யெல்லாம் தொகுத்துப் பன்னூறு நூல்களை யெழுதிய யானும், கடவுளின் இலக்ஷணங்க ளொன்றையும் அறியாத நீயும் சரியோ? ஆண்டவனுக்கு ஆலய மமைத்து வழிபா டாற்றுகின்ற யானும், குடியிருக்கும் வீட்டி னொருமூலையில் குந்தியிருந்து சிவா சிவா என்று பிதற்றும் நீயும் சரியோ? அடியார்க்கு ஆலய மமைத்து வழிபாடாற்றும் யானும் அடியார் சரித்திரத்தைத் தானும் கேட்டறியாத நீயும் சரியோ? பரமதகண்டனம் செய்த யானும் மெய்ச்சமயம் இதுவென்றறியாத நீயும் சரியோ? என்று இன்னவாறு பலவிதமா யொருவரை யொருவர் வைது நெருக்கிக்கொண்டு முன்னுடி அவ் வருட்பெருஞ் சோதியினெதிரே யோடிச் சென்றனர்.

இவ்வாருகத் தம் சந்நிதானத்தினெதிரே யோடிவந்தவர்களைப் பார்த்து, அப் பெருமானுர் புன்னகை புரிந்து, தொண்டர்களே! அன்பால் இறைவனை வழிபடுங்கள். அன்புப்பணியை - சிவ தொண்டை ஆற்றுங்கள் - தந்தை, தாய், மனைவி, மக்கள், உற்ருர், உறவினர் ஆதிய யாவரையும் சிவமெனக் காணுங்கள். அன்பு, உறுதி, மெய்யறிவு, தைரியம், கற்பு ஆதியவற்ருல் உங்கள் மனத்தைச் சுத்தமாக்குங்கள், உங்கள் கடமைகளைத் தவருதியற்றுங்கள். நான் நடமாடுங் கோயில் - என்னைச் சூழ்ந்துள்ள உயிர்களும் நடமாடுங் கோயில்களே என்ற அஹமாத்ம சர்வாத்ம சித்தியை யடையுங்கள். உங்கள் கடமைகளைத் தவறவிட்டுவிட்டு, திருவிழாக் காலங்களில் ஆலயத்துக்குச் சென்று தீவட்டி பிடித்தால் சிவத்தை யடையலாம் என்று சிந்திக்காதேயுங்கள். உலகம் முழுவதும் ஒரு கோயிலென்றும், சூரியனை அக்கோயிலில் இடப்பட்ட தீபமென்றும் நினைத்துத் தியானம் செய்யுங்கள். தன்னம்பிக்கையுடன் உங்கள் உள்ளத்தில் அந்தர்யாமியாய் நிற்கும் ஈசனைக் காணுங்கள். ஒருபொல்லாப்புமில்லை. நீங்கள் யாவரும் சிவபாக்கியத்தைப் பெற்றிருக்கிறீர்கள். சிவச்செல்வம் உங்களுடையதே என்று கூறி மறைந்தருளினுர்.

நான் கண்ட காட்சி கனவோ? நனவோ?

# 14. எப்போதோ முடிந்த காரியம்

வேதாந்தம் என்னுஞ் சொல்லுக்கு வேதத்தின் முடிபு என்பது பொருள். அவ்வாறே சித்தாந்தம் என்னுஞ் சொல்லுக்குச் சகல நூல்களையும் ஆராய்ந்து முடிவாகக் கிடைத்த முடிபு என்பது பொருளாகும். சித்தாந்தம் எனினும் முடிந்த முடிபு அல்லது உண்மை முடிபு எனினும் ஒக்கும். இன்னுந் தெளிவாகக் கூறுமிடத்து, நிறுவப்பெற்ற உண்மை அஃதாவது பூர்வபக்கஞ்செய்யப் பெறாத அல்லது தகர்க்கமுடியாத முடிபு எனினுமாம். ''முடிந்த முடிபு' என்னுஞ் சொல்லின் பொருள் திருவருட் செல்வராகிய பெருமுனிவன் திருவாய்மலர்ந்தருளிய மறைமொழிகள் நான்கனுள் 'எப்போதோ முடிந்த காரியம்' என்னும் எழிலார் மணிமொழியில் அமைந்திருத்தல் காண்க.

இறைவனும் உயிரும் அவ்வுயிரைப் பந்தித்து நிற்கும் மலமும் என்றிம் மூன்றும் அநாதியாகவே உள்ளன. அவை இன்று நேற்று ஆனவையல்ல. இப்போது அப்போது என்று வரையறுத்துக் கூறத் தக்க காலத்தில் ஆனவையல்ல. அஃது எப்போதோ முடிந்தகாரியம். அநாதியே அப்படி உள்ள காரியம்.

இனி, இறைவன் உயிர்க்குயிராய் அறிவுக்கறிவாய் உறைகின்றான். அவ்விறைவனுக்கும் உயிருக்கும் மிகநெருங்கிய தொடர்புண்டு. அத்துவிதம் என்னுஞ் சொல்லும் இதனைக்குறித்தல் காண்க. அத்துவிதம் என்னுஞ் சொல் உள்பொருள் இரண்டு என்பதைக் குறிக்கின்றது. அவற்றில், ஒருபொருள் உண்மை யல்லவென்றுவது இல்லையென்றுவது சொல்லவில்லை. இரண்டு பொருள்களுக்குமுள்ள சம்பந்தத்தை மாத்திரமே அச்சொல் விளக்குகின்றது. இரண்டு பொருள்களும் பண்புவகையிலே ஒரு தன்மையவாக இருக்கின்றன என்பதையும் அச்சொல் குறிக்கின்றது. இரண்டாகக் காணப்பெற்று முடிவில் ஒன்றுகக் கலக்கின்ற வேற்றுமையில் ஒற்றுமையாகிய இந்தச் சம்பந்தத்தைச் சொல்லால் விளக்கிக் காட்டுதல் எளிதன்று. அஃது உணர்ந்தே கண்டுகொள்ளத்தக்கது என்பர் ஆன்றோர். இஃது ஒரு முடிந்த முடிபாகும். ஆன்மாவுக்கும் பரமான்மாவாகிய இறைவனுக்குமிடையே உள்ள இந்தச் சம்பந்தம் இன்று நேற்று உண்டானதல்ல. அஃது எப்போதோ முடிந்த காரியம். அச்சம்பந்தத்தை நாம் மறவாதிருத்தல் வேண்டும் என்பது.

இதுவேயுமன்றி, உயிர் எப்போதேனும் இறைவனைவிட்டுப் பிரிந்திருக்க முடியாது. அது சதா இறைவன் சந்நிதானத்திலேயே இருக்கின்றது. விளக்கொளி கண்ணொளியோடுங் கலந்து அதனோடு கூட உருவத்திலுங் கலந்தாலன்றிக் கண் அவ்வுருவத்தைக் காணுமாறில்லை. அஃதேபோல, அறிவித்தாலன்றி அறியும் இயல்பில்லாத ஆன்மாவும் முதல்வனது உணர்வு தன்னோடு விரவிநின்று தன்னோடு கூடச்சென்று விடயத்தும் விரவிநின்றாலே அறிவு விளங்கி அவ்விடயத்தை அறியுமன்றித் தனித்து அறியமாட்டாது. ஆகவே, தனித்து ஒன்றை விடயிக்கவும் மாட்டாத ஆன்மா அறிவு விளங்குதல் மாத்திரைக்கேயன்றி விடயத்திற் சென்று பற்றுதற்கண்ணும் இறைவனுடன் நிற்றல் பெறப்படுகின்றது. எனவே, ஆன்மா இறைவனை இன்றியமைந்து ஒன்றையும் அநுபவியா தென்க.

**"எவ்விடத்து மிறையடியை யின்றியமைந் தொன்றையறிந்து**
**இயற்றிடா உயிர்கள் ஈசன்றானுஞ்**
**செவ்வி தினி னுளம்புகுந்து செய்தியெலா முணர்ந்து சேட்டிப்பித்து**
**எங்குமாய்ச் செறிந்துநிற்பன்**
**இவ்வுயிர்கள் தோற்றும்போது அவனையின்றித் தோற்ற**
**இவற்றினுக்கம் முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கும்**
**அவ்வுயிர்போல் நின்றிடுவன் ஆதலால்நாம்**
**அரனடியை அகன்றுநிற்ப தெங்கே யாமே'**

என்னும் சிவஞானசித்தியார்ச் செய்யுளானும் (செ. 316) இது வலியுறுத்தப் படுதல் காண்க. ஆகவே, பெத்த முத்தி இரண்டினும் நாம் இறைவன் சந்நிதானத்திலேயே இருக்கின்றோம். நாம் தோன்றியபோதும் அவனையின்றித் தோன்றினோமில்லை. ஆகவே, சதா அம்முதல்வனது சந்நிதானத்தில் உறையும் எமக்குப் பொல்லாப்பும் ஒன்றுளதோ? ஒருபோதும் இல்லை. இஃது எப்போதோ முடிந்த காரியம்.

மேலும், உயிர் அநாதியேயுள்ளது. ஆகவே, அவ்வுயிரைப் பந்தித்துநிற்கும் மலமும் அநாதியே உள்ளதாகும். போக்கும் வரவும் புணர்வும் இல்லாத இறைவனைப் போலன்றி, மலமுண்மை காரணமாக, உயிர் போக்குவரவு உடைத்தாகின்றது. போக்குவரவு உளவாகவே, அவ்வுயிர்க்குக் கன்மமும் உளதாம். கன்மம் உளதாகவே, அக்கன்மத்தினின்றும் விடுபடுதலாகிய வீடுபேறும் உளதாம். அவ்வீடுபேற்றை அளிக்கும் இறைவன் திருவருளும் பண்டும் இன்றும் என்றும் உளதாம். இஃது எப்போதோ முடிந்த காரியம்.

அம்முதல்வன் பெத்த முத்தி இரண்டினும் அத்துவிதமாய் உடன் நின்றுகொண்டு யார் யார் யாது செய்கின்ருர் என்று அறிந்து அவரவர்க்கு அவ்வச் செய்திக்குத் தக்க பயனை அவ்வப்பொழுதே விளைவிப்பதனுல், பக்தியினுல் மறவாதேத்த அவனது சீபாதத்தை யடையலாம் என்பது. மறவாதேத்தும் அதுவே இடையரு அன் பென்றும், அயரா அன்பென்றும், மறவாத்தியானம் என்றும் போற்றப்பட்டது. இறைவன் இன்னருள் என்றும் எப்போதும் பொங் கித் ததும்பிப் பூரணமாய்க் கிடக்கின்றது. அது காலவரையறைக் குட்படாதது. அஃது ஒருபோது தோன்றி மற்ருெருபோது அழிவ தன்று. அஃது எவர்க்கும் என்றுமுரிய பெரிய கருவூலமாக விளங் குகின்றது. அதில் எட்டுணையும் ஐயம் இன்று. அஃது எப்போதோ முடிந்த காரியம்.

இப் பேருண்மைகள் சிலராற் காலத்துக்குக் காலம் வெளிப் படுத்தப் பெற்றபொழுதுதான் ஆரம்பித்தன என்று நாம் கொள் ளுதல் கூடாது. முடிந்தமுடிபு என்றுமுள்ளதன்ரே? அஃது எப் போதோ முடிந்த காரியம்.

ஆகவே, அழியும் வஸ்துக்களைப் பார்ப்பதைவிட்டு, என்றும் அழியாத அப்பரம்பொருளை நாம் பார்க்கப் பழகிக்கொள்ளுதல் வேண்டும். சைவசமய நூல்களிலே சொல்லப்பெற்ற விபூதி உருத் திராக்கங்களைத் தரித்தலும் புலாலுண்ணுது விடுதலும் மாத்திரமே சைவமாகாது. 'சிவத்தின் சம்பந்தமே சைவம்' என்பதை ஓர்ந்து அறிவு மயமான ஆனந்த வடிவமான ஒன்றை அறியமுயலுதல் வேண்டும். அதுவே உண்மைச் சைவம். அத்துறையில் நடக்க முயல்வோமாயின், திருவருள் எமக்கு வழிகாட்டிச் செல்லும் என்பது உறுதியான உண்மையாகும். அஃது எப்போதோ முடிந்த காரியம்.

"எப்ப வோமுடி வானதென் றெங்கட்குச்
செப்பு வாரவர் சிந்தை தெளிந்திட
ஒப்பில் லாதபல் வார்த்தைக ளோதுவார்
அப்பில் உப்பென வானதென் சீவனே" —நற்சிந்தனை.

# 15. சிவதொண்டு

சிவன் தொண்டு என்னுமிரு வார்த்தைகளாலாய இத்தொடர் சிவனுக்குச் செய்யுந் தொண்டு என விரியும்.

**சிவன்—சிவத்தைத் தருபவன்; உடையவன்:**
**சிவம்—நன்மை, மங்கலம், பேரின்பம்.**
**தொண்டு—பணி, வணக்கம், வழிபாடு.**

சிவமென்னும் மொழி நன்மை முதலிய பல பொருட்களைப் பயக்குமேனும் ஈண்டுப் பேரின்பம் என்னும் பொருளே பயந்து நின்றது. இன்பம் இருவகையினது. அவை சிற்றின்பம், பேரின்பம் என்பன. சிற்றின்பமாவது - தனிப்பட்ட இடத்தே தலைப் பட்டுத் தம்முள் ஒத்த தலைவன் தலைவியரால் அநுபவிக்கப்படுவது. இத்தன்மைத்தென்று புறத்தார்க்குப் புலனுமாறு புகலவொண்ணுதது. ஒரு கணத்திற் ரோன்றி மறைவது. அத்தகைய சிற்றின்பம் போலாது எக்காலத்தும் எவ்விடத்தும் நிகழ்வதாய் எல்லார்க்கும் உரியதாய் நிறைந்துள்ள நிரதிசய இன்பமாகிய மங்கலமே பேரின்பமாம். அது ஏதுவகையானன்றி எடுத்துக்காட்டு வகையானுதல் இலக்கண வகையானுதல் இயம்பொணுதது. மக்கள் சுட்டுணர்வுக்கு எட்டாதது; ''எல்லையில் தனிப் பெருங் கூத்தின் வந்த பேரின்ப வெள்ளம்'' என்றதும் அதனையே. மக்கள் சுட்டுணர்வுக்கு எட்டாதாயினும் அவனருள் வழிப்பட்ட அடியார்களால் எய்தப் பெறுவது.

இனி, இத்தகைய பேரின்பத்தைத் தந்தருளும் பேர் அருள் வள்ளலையே சிவபெருமான் என்று ஓதுவர். அப்பிரானது முழு முதற்றன்மைகளுள் ஒருசிலவற்றையேனும் அறியினன்றி அவர்க்குச் செய்யுஞ் சிவதொண்டின்கண் ஊக்கம் நிகழாதாதலின், அது நிகழுமாறு பெரியோர் கூறியவற்றுள் ஒருசிலவற்றை ஈண்டுத் தொகுத்துத் தருகின்றோம்.

## சிவபிரானது தன்மைகள்

1. ஏனைத் தேவராதியர் யாரும் பிறந்திறக்குமியல்பினராதல் போலச் சிவபிரான் பிறத்தலும் இறத்தலும் இல்லாத அநாதி நித்தியப் பொருளாதல்.
2. எல்லாத்தேவரும் தன்னை வணங்கி வேண்டிய வேண்டியாங் கெய்தத் திருவருள் செய்து தான் வேறொருவரை வணங்கி நில்லாமை.

3. எல்லாத் தேவர் வலிமையும் தன்னு ளடங்குமாறு தான் வரம்பி லாற்றல் கொண்டுள்ளமை.

4. தானே மோக்ஷதாதாவாதல்.

5. பஞ்ச கிருத்திய சுதந்தர முடைமை என இவைமுதற் பலவாம்.

1. வேதாகம புராணேதிகாச வாயிலாக ஆராயு மிடத்துச் சகல தேவர்களும் பிறரும் யோனிவாய்ப்பட்டுப் பிறத்தலும் இறத்தலும் கேட்கப்படுகின்றன. சிவபிரான் அங்ஙனம் பிறந்ததாகவேனும் இறந்ததாகவேனும் யாண்டுங் கேட்கப்படவில்லை. இதனை,

"எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந்தோநஞ் சோமேசர்—இல்லிற்
பிறந்தகதை யுங்கேளோம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதை யுங்கேட் டிலோம்," என்பதாலறிக.

2. சகல தேவர்களும் ஒவ்வொரு வரங்களை வேண்டிக் காலந்தோறும் சிவபிரானைப் பூசித்து அருள் பெற்றதாகக் கூறுஞ் சரிதங்கள் பலவுள்ளன. யாண்டாவது எக்காலத்தேனும் சிவபிரான் வேறொருவரைப் பூசித்ததாக எந்த நூலும் கூறக் கேட்டிலம். இக்கருத்தை

"இன்னுமுயர் பரசிவனை யிருதிணையி னுயிரனைத்து
மன்னும்வழி பாடியற்றி வயங்கியவைக் கறிகுறியா
மின்னுபல தலம்பொலியு மன்றிமிளி ரனையபிரா
னுன்னி யொரு வரைப்பூசை யுஞற்றியது முண்டுகொலோ"

என்பதாற் காண்க.

3. சிவபிரான் சர்வ வியாபக சக்தியுறுதலும் ஏனைய தேவர்கள் வலிமை யெல்லாம் அதனுள் வியாப்பியமா யடங்குதலும் கருதியே ஏனைய தேவர்கள் பெயர்களை எல்லாம் சிவபிரானுக்கு உரியனவாகக் கூறும் வேதம், சிவன் என்னும் திருநாமத்தைச் சிவபிரான் ஒருவருக்கே யன்றி வேறு எத்தேவர்க்கேனும் கூறாமல் விட்டது. இக்கருத்தை விளக்கியே

"சிவனெனு நாமந் தனக்கே யுடையசெம் மேனியெம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடு மாகி லவன்றனையான்
பவனெனு நாமம் பிடித்துத் திரிந்துபன் னாளழைத்தா
லிவனெனைப் பன்னா ளழைப்பொழி யானென் றெதிர்ப்படுமே"

எனத் தமிழ் வேதங் கூறுதலுணர்க. அன்றியும், வேதங்களின் மத்தியில் உயிர்நிலையாக விளங்குவதும் சிவ நாமமேயாம். அஃதா

வது:—இருக்கு, யசுர், சாமம் என வேதங்கள் மூன்று. அவற்றுள் நடுவாயது யசுர் வேதம். அது ஏழு காண்டங்களை யுடையது. அவற்றுள் நடுவணதாகிய நான்காவது காண்டத்தின் நடுவில் சிவபிரான் திருநாமம் விளங்குவதாக அடியில் வரும் செய்யுளாலறியலாம்.

**மும்முறையி னடுமறையின் முனிவிலெழு காண்டத்திற்**
**செம்மைதரு நடுக்காண்டஞ் சேர்த்தவெழு சங்கிதையில்**
**அம்மநடுச் சங்கிதையி னுதியீ ரெழுத்துநடுப்**
**பொம்மலுற வமர்மனுவின் பொருளாவா னெவன்மைந்த!**

ஆன்மாக்களுக்கு அறிவு இச்சை தொழில்கள் விளங்க முதற் காரணமான மாயையினின்றுந் தநுவாதிகளைத் தோற்றுவித்தலாகிய சிருட்டியும், நிலைபெறச் செய்தலாகிய திதியும், இளைப்பொழித்தற் பொருட்டு மீட்டும் மாயையில் ஒடுக்குதலாகிய சங்காரமும், இருவினை யொப்பு வருவித்து மலங்களை முதிர்வித்தலாகிய திரோபவமும், பந்தம் விடுவித்தலாகிய அநுக்கிரகமும் என்று கூறப்பட்ட பஞ்ச கிருத்தியங்கட்கும் சிவபிரானே தலைவராவர்.

பிரம விட்டுணுக்களுக்கன்றோ படைத்தல், காத்தல் உரியனவென்னின், அவர்கள் அவற்றைச் செய்தலில் அரசனது ஆணைப்படி நடத்தும் மந்திரி முதலியோரைப் போன்று சிவபிரானது ஆணைப்படி நடத்தப்பட்டவர்களேயல்லது சுதந்திரத்துவம் பெற்றவரல்லர்.

இங்ஙனமாகச் சிவபிரானது முழுமுதற்றன்மைகள் பலவாம். ஆதலின், "ஆட்பாலவர்க்கருளும் வண்ணமு மாதி மாண்பும், கேட்பான்புகி னளவில்லை" என்றார் பெரியார். ஆயினும், இத்தகைய இருபத்து மூன்று காரணங்களைக் காட்டிச் சிவபிரானே பரம் பொருளென விளக்கி மாதவச் சிவஞானயோகிகள் கட்டளையிட்டருளிய சுலோக பஞ்சக மொழிபெயர்ப்பி லோரகவலை மட்டும் கூறி மேற்செல்வாம்.

**உயர்கா யத்திரிக் குரிப்பொரு ளாகலிற்**
**றசரதன் மதலை தாபித் தேத்தலிற்**
**கண்ணன் கயிலையி னண்ணிநின் றிரப்பப்**
**புகழ்ச்சியி னமைந்த மகப்பே றுதவலிற்**
**றுறுது விழியுட னொராயிரங் கமலப்**
**புதுமலர் கொண்டரி பூசனை யாற்றலி**
**னுங்கவற் கிரங்கி யாழியீந் தருடலி**
**னங்கணைக் கிழவனை யழல்விருந் தாக்கலி**

னமைப்பருங் கடல்விட மமுதுசெய் திடுதலிற்
றென்றிசைத் தலைவனைச் செகுத்துயிர் பருகலி
னவுணர் முப்புர மழியவில் வாங்கலிற்
றக்கன் வேள்வி தகர்த்தருள் செய்தலிற்
றனஞ்சயன் றனக்குத் தன்படை வழங்கலின்
மாநுட மடங்கலை வலிதபக் கோறலின்
மாயோன் மகடூஉ வாகிய காலைத்
தடமுலை திளைத்துச் சாத்தனைத் தருதலி
னூழ்கடல் வரைப்பி னுன்றே ரநேக
ரன்புமீ தூர வருச்சனை யாற்றலி
னுன்கிரு செல்வமு மாங்கவர்க் கருடலி
னையிரு பிறப்பினு மரியருச் சித்தலி
னிருவரு மன்னமு மேனமு மாகி
யடிமுடி தேட வழற்பிழம் பாகலிற்
பிறப்பிறப் பாதி யுயிர்க்குண மின்மையிற்
கங்கைசூழ் கிடந்த காசிமால் வரைப்பிற்
பொய்புகல் வியாதன் கைதம் பித்தலின்
முப்புர மிறப்புழி முகுந்தப் புத்தேண்
மால்விடை யாகி ஞாலமொடு தாங்கலி
னயன்சிர மாலை யளவில வணிதலின்
ஞானமும் வீடும் பேணினர்க் குதவலிற்
பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவு
ளும்பர்க ளெவர்க்கு முயர்ந்தோ
னென்பது தெளிக வியல்புணர்ந் தோரே.

## சிவதொண்டு செய்தற்பாலர் இன்னுரென்பது.

இப்பரம்பொருளான சிவபிரானது திருவருளைப் பெறவும் அவ்வருளாற் பேரின்பமடையவும் செய்யவேண்டியது சிவதொண்டே. சிவதொண்டு செய்தல் ஆன்மகோடிகளுக்கெல்லாம் ஒப்ப முடித்ததே. ஆயினும், மக்களாகிய நாமே பெரிதும் பாத்திய முடையோம். என்னை? இயற்கையறிவு ஐந்தனோடு பாவம் புண்ணியம், சுவர்க்கம் நரகம் கடவுள் ஆன்மா ஆதியவற்றைப் பகுத்தறியும் விசேட செயற்கையறிவுடையோமாதலின், விண்ணவர்தாமும் மண்ணவராகியே சிவதொண்டு செய்து உயர்கதியடைவராயின் நாமும் சிவதொண்டு செய்யவும் வேண்டுமென்பது சொல்லவும் வேண்டுமோ!

இதனை;

மாநுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக் காய
மானிடத் தைந்துமாடு மரன்பணிக் காகவன்றே
வானிடத் தவருமண்மேல் வந்தரன் றனையர்ச்சிப்ப
ரூனெடுத் துழலுமூம ரொன்றையு முணரா ரந்தோ, என்பதனாலறிக.

மாநுட யாக்கையிலுள்ள ஒவ்வோ ருறுப்பும் இறைபணி செய்தற்கே உரியன என்பதை வலியுறுத்தற்கே ''வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சம், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன்'', ''கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் றாளை வணங் காத் தலை'' என்பன, முதலாகப் பெரியோர் பணித்த வாக்கெல் லாம் எழுந்தன.

## சிவ தொண்டுகளாவன.

இனிச் சிவபிரானுக்குச் செய்யுந் தொண்டுகளாவன அவரை மன சினுலே தியானித்தலும் வாக்கினுலே துதித்தலும் கையினுலே பூசித் தலும், கால்களினுலே வலம்வருதலும், தலையினுலே வணங்குதலும், செவிகளினுலே அவர்புகழைக்கேட்டலும், கண்களினுலே அவரு டைய திருமேனியைத் தரிசித்தலுமாம். இதனை;

1. ''கண்ணுதலாலய நோக்குங் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்

2. பெண்ணொரு பாகனைப் பணியுந் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்கும் கைகளே கைகள்

3. பண்ணவன்றன் சீர்பாடும் நன்னுவே நன்னு
பரன்சரிதை யேகேட்கப் படுஞ்செவியே செவிகள்

4. அண்ணல்பொலங்கழனினைக்கும் நெஞ்சமேநெஞ்சம்
அவனடிக்கீழ் அடிமைபுகு மடிமையே யடிமை''

என்னும் பிரமோத்தர காண்டச் செய்யுளானும் அப்பர் சுவாமிகள் அருளிய திருவங்கமாலையானும் உணர்க.



# 16. தியானம்

மெய்ப்பொருளைக் காண்பதற்கு இரு பெரும் நெறிகளுள. முதலாவதாவது பக்திநெறி; மற்றையது ஞானநெறி ஆகும். பக்தி நெறியில் இறைவனை முன்னிலைப்படுத்தியும் ஞானநெறியில் தன்னிலைப்படுத்தியும் பார்ப்பார்கள். முன்னிலைப்படுத்தி முதல்வனில் முழு விசுவாசம் வைத்து வணங்குவதே பக்திநெறி. இதனை அன்பு நெறியென்றும் அழைப்பர். தன்னில் இறைவனைப் பார்த்து உலகிலுள்ள நித்தியப் பொருள்கள் எவை, அநித்தியப் பொருள்கள் எவையென, விவேகத்தால் ஆராய்ந்து விசாரணை செய்தலே அறிவுநெறி அல்லது ஞானநெறி யெனலாம். முதலாவதற்கு விசுவாசமும் இரண்டாவதற்கு விசாரணையும் பெரிதும் வேண்டப்படும் அம்சங்களாகும். துவைதமதக் கொள்கையுடையோர், கிறிஸ்தவர், முகம்மதியர், சைவர், சாக்தர், வைஷ்ணவர் முதலாயினோர் பெரும்பாலும் அன்புநெறியையே கைக்கொள்ளுவார்கள். அத்துவைதிகர், வேதாந்திகள், சமயவாதிகள் பெரிதும் கையாளும் முறை அறிவு நெறியாகும்.

பெரும்பாலானோர் அன்புநெறியையே கடைப்பிடிக்கின்றனர். ஏனெனில் இது இயற்கையோடியைந்ததும், சாதனைக்கு இலகுவானதும் ஆன நெறியாகையினாலேயாம். அன்பில்லாத ஒன்றை இவ்வுலகில் காணமுடியாது. கொடூர குணமுடைய புலிக்குக்கூடத் தன்னிலும், தன் குட்டிகளிலும் அன்புண்டென்றால் உலகில் அன்பிலார், அல்லது அன்பில்லாதன இல்லையெனலாம். ஆகவே தம்முள் உள்ள இந்த அன்புக் குணத்தைப் படிப்படியாக வளரச் செய்து, விசாலிக்கச் செய்துவரின் அது காலகதியில் எல்லையற்ற அன்புத்துவமாகி மலர்ச்சியடையும். எல்லையற்ற அன்பே சிவம். ஆகவே அதிகமானோர் கடைப்பிடிக்கும் பக்தி நெறியைப்பற்றிச் சிறிது விரிவாக ஆராய்வாம். இந்த நெறி பலவகையான பாவனைகளால் இறைவனை முன்னிலைப் படுத்தி வணங்க உதவுகின்றது. இறைவனும் ஆன்மாவும் முறையே தந்தையும் மைந்தனுமாகவும், தாயும் சேயுமாகவும், சேயும் தாயுமாகவும், நாயகி நாயகனாகவும், நாயகன் நாயகியாகவும், குருவும் சீடனுமாகவும், ஆண்டானும் அடிமையாகவும், துணைவனும் தோழனுமாகவும் இன்னும் எத்தனையோ வகைகளாகவும் பாவனை செய்து பற்று வைத்துப் பக்தி பண்ணி இருவகைக்கும் உள்ள சர்வ தன்மைகளும் வேறற ஒன்றாகி முழுமுதலாகிய இறைவனுள்ளடங்கலேயாம். இந்த நெறியை உடன்

பாட்டு நெறியென்றும் கூறலாம். அஃதாவது எல்லாம் சிவன்செயல், எல்லாம் சிவன்வடிவு, எல்லாம் சிவமே என்று நம்பி அதன் பெறு பேருக இவ்வுலகில் நடக்கும் நன்மை, தீமையாகிய யாவும் எமது நன்மைக்கேயாகுமென்றும், ஈண்டு ஒரு பொல்லாப்புமில்லை யென்றும் இன்புற்றிருத்தலேயாம். மனிதனிடத்துள்ள மிருகக் குணங்களை யெல்லாம் தெய்வீகக் குணங்களாக்கி உயர்வடையச் செய்தல் தான் இங்கு கண்ட முடிவு. இந்நெறியிற் செல்வோர்க்கு உலகம், ஆன்மா, கடவுள் என்ற மூன்றும் அநாதியான உண்மைகளாகும். எவ்விதமான வேண்டுதலுமின்றி இறைவனைக் கூடும் அன்பினில் கும்பிடுதலே சிறந்த பக்தர்களின் பண்பாகும்.

ஞானநெறியைக் கடைப்பிடிப்போரின் கருவி விசாரணையாகும். உலகில் நித்தியமானபொருள் எது? சத்தியமான பொருள் எது? இன்பமான பொருள் எது? அறிவுள்ள பொருள் எது? என்பன போன்ற வினுக்களுக்கு நுண் மாண் நுழை புலன் கொண்டு ஒவ்வொன்றினையும் ஆராய்ந்து, இது அல்ல, இது அல்ல, என்று நிச்சயித்து இவையெல்லாவற்றிற்கும் மூலமான, ஆதாரமான, சத்தியமான, நித்தியமான, இன்பமான, அறிவான வொன்றுளது என்றும், அதனிலும் வேருகாத தானே அதுவென்றும், இருக்கு மியற்கையால் ஈசனும் சீவனும் ஒன்றே யென்றும், சித்தவிகாரக் கலக்கத்தால் எழும் உபாதியே வேருகக் காட்டுகின்ற தென்றும், எழும் ஆசைகளும், ஐயங்களும் யாருக்கு என்று அடிக்கடி விசாரணை செய்து உதித்தவிடத்தில் ஒடுங்கியிருத்தலே உண்மை யென்னும் முடிவை அநுபூதி வாயிலாக அறிதலே அறிவு நெறியாகும்.

இப்போது இரு நெறிகளினதும் முடிவுகளைச் சுருக்கமாகக் கூறினேம். இந்த இலக்குகளை எய்துவதற்குத் தியானம் மிகவும் இன்றியமையாத ஓர் அங்கமாகும். ஆண்டவனை அறிதற்கும் தியானம் செய்ய வேண்டும். அந்தராத்மாவை யறிதற்குந் தியானஞ் செய்ய வேண்டும். இடையருது தைல தாரையின் வீழ்ச்சி போலவும் ஆற்றினேட்டம் போலவும் இறைவன் பால் சிந்தனை வைத்தலே துவைதிகளின் தியானம் ஆகும். துள்ளித் துள்ளி எழும் மனத்தின் துடுக்கினை இடையரு விசாரணையால் மாய்த்துச் சதா தானே தாணுக இருக்க வைத்தலே அத்துவைதிகளின் தியானமாகும்.

யோகநெறியின் எட்டு அங்கங்களுள் தியானம் ஏழாவதாக உளது. முன்னுள்ள ஆறும் முறையே இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை என்பனவாகும். இவற்றை யெல்லாம் ஈண்டு விரித்துரைக்கின் கட்டுரை நெட்டுரையாகிவிடும். ஆகவே

இவற்றின் சாரத்தை எல்லாரும் அறியக் கூடிய நடையில் கூறிச் செல்வோம். யோகம் என்ருல் ஒன்ருதல், ஒன்றுதல், ஒன்று கூடுதல், ஒன்று சேருதல் என்று பொருள் படும். சீவனும் சிவனும் அத்துவிதமாகுதலே சிவயோகம் எனப்படும். சீவர்களாகிய நாம் இடையருத் தியானத்தால் சிவனேடு ஒன்ருகவேண்டும். இந்த எண்ணம், அதாவது கடவுளைக் காணவேண்டும் என்றது அல்லது உண்மையை உணரவேண்டும் என்றது எம்மிடத்தில் காதலாக வடிவெடுக்க வேண்டும். இப்படித் தெய்வக் காதல் உதித்து விட்டால் அக்காதற் பொருளாகிய தெய்வத்தைத் தேடுவதிலேயே எமது உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்ய வேண்டும். இது வரையும் மண்ணையும், பொன்னையும், பெண்ணையும், புகழையும் போகத்தையும் தேடினேம். பெருதபோது துன்பம் எய்தினேம். பெற்றபோதும் தற்கால இன்பமே எய்தினேம். மலையைக் கல்லி எலியைப் பிடித்தவர்கள் போலானேம். ஆகவே இனி எமக்கு இடையருத இன்பம் வேண்டும் என்று ஆராக் காதலுடையோராக இருக்கிருேம். அஃது உண்மையாயின் அந் நெறிச் செல்லும்போது அதற்கு அநுசரணையானவற்றை அநுட்டித்தும், மாறுபாடானவற்றை நீக்கியும் வருதல்வேண்டும். சுருங்கச் சொன்னல் எம்மாலியன்ற வளவுக்கு நல்லொழுக்க முடையவர்களாக முயற்சிக்க வேண்டும். ஒழுக்கம் சிறக்க வேண்டுமாயின் உடல் நலம், உளநலம் ஆகிய இரண்டையும் கவனிக்க வேண்டும். அளவான சுத்த உணவை உட்கொண்டு, உடலால் உரியபடி உழைத்து, உளத்தால் நல்ல எண்ணங்களை எண்ணி, ஆசைக்கு அடிமையாகாது, அளவுக்கு வேண்டியவற்றையே ஏற்றுச் சுகதேகிகளாக வாழவேண்டும். நோயாளி நல்ல எண்ணங்களை எண்ண முடியாது. ஆகவே நோயற்ற வாழ்வு வாழவேண்டும். ஆசனப்பயிற்சியாலும் தேகாப்பியாசங்களினுலும் உடலுறுதி பெறவேண்டும். உள்ளத்தூய்மையால், மனவுறுதியடைய வேண்டும். இதன்பின் ஆன்ம வளர்ச்சிக்கு வேண்டிய நன்மைகளைப் பெரியோர் வாயிலாகக் கேட்டும், நூல்கள் மூலம் வாசித்தும், அவற்றைப்பற்றி அடிக்கடி சிந்தித்தும், அநுட்டித்தும் தெளிவு பெறல்வேண்டும்.

தெய்வம் ஒன்று உண்டென்று சிந்தை தெளியவேண்டும். சிவனடியார்கள் வரலாறுகளையும் சிவபெருமான் திருவிளையாடல்களையும் அறிவதால் தெய்வ நம்பிக்கை உண்டாகும். அத்துடன் தானும் உண்மையாகத் தேடும்போது திருவருள் அநுபவவாயிலாக அந்த நம்பிக்கை உறுதியடையக் கூடிய சில காட்சிகளையோ,

செயல்களையோ அருளும். ஆசைகளின் சேட்டைகளுக்கு அடிமைப் படாது விழித்திருப்போமாயின் காரியங் கைகூடும்.

எமது செயல்களையும், பேச்சுக்களையும், எண்ணங்களையும் என்றும் கடவுளோடு தொடர்பு படுத்தவேண்டும். கடவுளோடு தொடர்புபடுத்தினுல் சுயநலம் ஒழியும். காமக்குரோதாதி உட்பகை யாறும் ஓட்டமெடுக்கும். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச் சொல் மறையும். தவம் சித்திக்கும். சாந்தம், அன்பு, பிறர் நலம் ஆதியாம் பண்புகள் மிளிரும். இந்நிலையில் மனநிம்மதி எய்தும். நிம்மதி எய்திய மனம் ஒருமைப்பாடுடையதாய், ஏகாக்கிர சித்த முடையதாய் வலுவடையும். இந்த நிலையில் சிவ சிந்தனையைத் தீவிரமாக்க வேண்டும். செய்யும் பணி எல்லாம் சிவதொண்டாக வேண்டும். சொல்லுவதெல்லாம் சிவநாமமாக வேண்டும். சிந்தனை யெல்லாம் சிவசிந்தனையாக வேண்டும்.

இந்நிலைக்கு வந்துவிட்டால் உயிர் வாழ்வுக்கு இன்றியமை யாதனவற்றை மட்டுமே மனம் நாடும். புலன்களால் ஈர்ப்புண்டு இதுவரை பட்டபாடெல்லாம் நன்கு விளங்கும். ஊண் உறக்கம் இன்றி எவ்வாறு உலகப் பொருள்களுக்கும் போகங்களுக்குமாக மாய்ந்தோமோ அஃதபோன்று கடவுட் காட்சிபெற உழைத்தோ மாஞல் உண்மையாகவே கடவுள் வெளிப்படுவார். ஆகவே தியா னஞ் செய்வோருக்குத் தாரணை அல்லது ஏகாக்கிரசித்தம் இன்றி யமையாததாகும். உலகிலுள்ள படிப்புக்கள் எல்லாம் இதனிலேயே முடிவடையும். எந்த ஒரு துறையிலாவது ஒருவன் முன்னேற வேண்டுமாயின் மனவொருமைப்பாடுதான் மிகவும் வேண்டியது. இத்தன்மையற்றவர் தீரர் ஆனதுமில்லை; ஆவதுமில்லை.

இனி, தாரணை கைவந்தவர்கள் அடுத்தபடியாகத் தியானத்தில் மூழ்குவர் என்பது அநுபவஞானிகள் வாக்காகும்.

தியானத்தின் சக்தியை எளிதாக நினைக்க வேண்டாம். மனி தன் தான் எண்ணுகிறபடியே ஆகின்ருன். மனிதன் மனத்தில் கணத்துக்குக் கணம் தோன்றி மறையும் தோற்றங்களெல்லாம் தியானமாகமாட்டா. பெருங் காட்டில் தீப்பிடித்தாற்போன்று மனத் தகத்தே யுள்ள கவலையையும் எண்ணங்களையும் எரிக்கும் ஒரே சோதியாக விளங்கும் பெரிய விருப்பமே தியானம். உள்ளத்தில் இவ்வித அக்கினியொன்று இருக்குமாயின் இங்கே வந்து கூடும் குப்பை கூளங்களாகிய தீய எண்ணங்களெல்லாம் எரிந்து சாம்ப ராகும். அத்தோடு நற்சிந்தனையாகிய தீபமும் அணையாது சுவா லித்து அகவிருளை அகற்றிக்கொண்டேயிருக்கும்.

ஒவ்வொருவருக்கும் எதனைச் செய்வது எதனைச் செய்யாது விடுவது என்று நிச்சயஞ் செய்யும் வல்லமை இயற்கையிலே உளது. ஆகவே நற்சிந்தனைகளை எண்ணுங்கள். இதனை அநுட்டிப்பதில் ஆரம்பத்தில் கஷ்டங்களுண்டாகும். சிறுமைக் குணங்கள் உள்ளத்தில் நுழைந்து தொல்லை கொடுக்கும். இவற்றைப் பிடித்து வெளியே தள்ளுவதில் காலத்தையும் சக்தியையும் வீணாக்கப்படாது. அவற்றையகற்ற வேறு வழியுளது. கெட்ட சிந்தனைக்கு நேர் மாறான நல்ல சிந்தனையில் அறிவினைச் செலுத்திக்கொண்டிருங்கள்.

"சென்ற விடத்தாற் செலவிடாது தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு"

என்பர் பெருநாவலர். இதனால் சிறுமைக்குணம் தானே யகன்று விடும். தெய்வபக்தி உள்ளவர்களாயினும், இல்லாதவர்களாயினும், எம்மார்க்கமுடையாராயினும், எல்லார்க்கும் தியானம் அவசியம். எமது ஈழநாட்டில் இன்றுள்ள இந்த அவல நிலையை அகற்றுதற்குத் தியானத்தையன்றி வேறு கதியில்லை, தனியிடத்தே போயிருந்து உயர்ந்த சிந்தனைகள், அமைதி கொடுக்கக்கூடிய சிந்தனைகள், பலம் தரக்கூடிய சிந்தனைகள், முதலியவற்றால் அறிவை நிரப்பிக்கொண்டு தியானஞ்செய்தல் தெய்வபக்தியுடையார்க்கு வழியாகும். "இந்த நாட்டினில் ஒற்றுமை ஓங்குக" என்று இலங்கை நாதனிடம் மிகுந்த தாகத்துடனும் உண்மையுடனும் பிரார்த்தனை செய்தல் வேண்டும். அந்தப் பிரார்த்தனை எல்லாரது உள்ளத்தினுள்ளும் இருந்து எழவேண்டும். தெய்வ நம்பிக்கையற்றோரும் "உள்ளுவவெல்லாம் உயர்வுள்ளல்" என்பதற்கியையத் தியானஞ் செய்வார்களாக.

கடவுள் அருவமும் உருவமுமுடையவர். ஞானநெறியிற் தலைப்பட்டோர் இறைவனை எல்லையற்ற அரூபியாகக் கற்பித்துத் தியானஞ் செய்வார்கள். பத்தி நெறிப்படுவோர் இறைவனுக்கு நாமமும் ரூபமும் கற்பித்து வழிபடுவர். இறைவனுக்குரிய நாமங்களோ அநந்தம். வடிவங்களுமோ அநந்தம். இவையெல்லாம் தனியொரு கடவுளின் பல்வகைத் தோற்றங்களேயாகும். மக்களாய்ப் பிறந்த எம்மனோர் ஈடேற்றமுற, தெய்வீக மனிதர் காலத்துக்குக்காலந் தோன்றிப் பக்குவர்களின் கண்களைத் திறந்து மெய்ந்நெறியில் ஒழுகச் செய்தனர். இத்தெய்வீக புருடர்களே சிவதொண்டர்கள்; தொண்டர்க்குத் தொண்டன் சிவனே; மான்காட்டி மானைப்பிடிக்குந் தன்மைத்தாய் மானிடவுருவில் மண்மேல் மலரடி வைத்து அருள் மலிந்த ஆசானாகி அடியார்களை ஆட்கொள்ளும் அண்ணல் அவனே.

ஆகவே அருட்குருவும் அரனெனத் தொழுதற்கருகதையுடையர். சற்குருவின் பெருமையை அறிவார் யார்? கூறக்கூடியவர் யார்?

புறத்தூய்மையுடனும் அகத்தூய்மையுடனும் சாதகமான சூழ் நிலையில் தக்கதோர் இடத்தில் அவரவர் சிந்தனைக்கு வசதியான ஆசன நிலையில் அமர்ந்துகொண்டு, இறைவனின் மூர்த்தங்களில் தாம் விரும்பிய ஒன்றை அல்லது தமக்கு வழிகாட்டியாக வந்த ஆசான் திருவுருவைத் தெரிந்தெடுத்துச் சாதகன் தியானஞ்செய்து வருவான். தியானத்திற்குத் தன்னைத் தயாராக்குதற்காக அந்த நேரத்திற்கு முன்பும் பின்பும் பெரியார் வரலாறுகளையும், இறை வன் திருவிளையாடல்களையும் பற்றி வாசித்தல், வாசிக்கக் கேட் டல், திருமுறைப்பாசுரங்களைப் படித்தல், சிவத்தொண்டு, சிவத் தொண்டுகளைச் செய்தல், சமய சாஸ்திரங்களைப் படித்தல், கேட் டல் முதலியன உகந்தனவாகும். இவைகள் மனத்தைச் சாந்தப்படுத்த, மனம் தூய்மையுறும். தூயமனத்தில் சிவவடிவங்கள், சிவநாமங் கள், சிவசிந்தனைகள் நன்கு பதியும். தியானத்திலிருக்கும்போது சித்தத்தை இஷ்டமூர்த்தியில் பதித்தல், அல்லது நாமசெபத்தில் மூழ்குதல் நன்றாகும். பழைய வாசனைகளின் வயத்தால் சிலவேளை களில் ஒரு மூர்த்திக்குப் பதிலாகப் பல மூர்த்திகளைக் காணக் கூடும். அப்போது எல்லையற்ற வல்லமை உடைய ஒரு தெய்வமே பல்வகைத் தோற்றங்களாகக் காட்சியளிக்கிறன் என்று நினைத்துக் கொள்ளல் வேண்டும். உண்மை ஒன்றே. தோற்றங்களே பல வாகும். இதற்கு எடுத்துக்காட்டாகப் பரமஹம்ஸர் பச்சோந்தியைக் காட்டுவர். அது பல்வேறு இடங்களில் பல்வேறு நிறங்களாகத் தோற்றினும் உண்மையில் ஒரு பிராணியேயாம். ஆகவே சாதகன் தன் இஷ்டகுரு அல்லது இஷ்டமூர்த்தி வழிபாட்டினல் நாளடை வில் எங்கும் நிறைந்த ஒரு கடவுளே எண்ணில் வேடங்கள் எடுப் பவர் எனவும் உண்மையில் அவர் அரூபி எனவும் அறிகிறன்.

தியானநிலை ஆழமாக ஆழமாக முன்பு மனம் கவ்விக்கொண் டிருந்த கடவுளின் வடிவம், அல்லது நாமம் மறைந்துவிடும். எண் ணங்கள் சுருங்கிச் சுருங்கி இறுதியில் ஒழிந்துவிடும். இவையடங்கு வதை அல்லது ஒடுங்குவதையும், பின் இடையிடையே உதிப்பதையும் அறியும் அறிவு ஒன்றுளது அவ்வறிவு தனக்கு அந்நியமாக வேறென் றையும் அறியாததாய் தானே தானுய் இருக்கும்போது உண்மையான சமயக் கல்வியை ஒருவன் கற்கத் தொடங்குவான். நினைப்புகள் அற்ற அறிவு நிலையே சமயம். இந்த அறிவு அல்லது இந்த அறிதுயிலே தியானமாகும். இது இடையறுது தொடர்ந்து இருக்குமாயின் சமாதி யாகும்.

இனி, மனம் இடையிடையே குவிந்து பின் கலைந்துவிடும். ஆரம்பத்தில் நிமிடங்களில் ஒடுங்கிப் பின் நாளடைவில் மணித்தியாலங்களுக்கு ஒடுங்கலாம். துவக்கத்தில் கண்மூடி மௌனியாக இருந்தே தியானிக்கக் கூடியதாக இருக்கும். பயிற்சியால் விழித்திருந்தே தியானிக்கலாம். இந்நிலையில் அடிக்கடி சாதகன் மூழ்கும்போது, வாக்கினால் வழுத்த முடியாதவோர் ஆத்மீக சக்தியிருப்பதை உணரலாம். முன்னொருபோதும் அநுபவியாத ஓர் ஆனந்தம் எழுவதையும் அறியலாம். இங்கு தேகாத்ம பாவமே தேய்ந்துவிடுகிறது. மனந் துடிப்பற்றுத் தூங்குகிறது. சுத்த அறிவொன்றே எஞ்சிப் பரிணமித்து நிற்கும்.

இப்படிக்கு மெல்ல மெல்லவாக ஏறிக்கொண்டு போகும் போது பல அற்புதக் காட்சிகளும், ஓசைகளும் உண்டாகும். சிலம்போசை, குழலோசை, மணியோசைகளும் ஒளிவடிவங்களும், தோன்றும். சித்தத்தைச் சிதறவிடாது இவற்றைக் கேட்பதிலும் பார்ப்பதிலும், மயங்காமலும் பயப்படாமலும் இவற்றையெல்லாம் கேட்பவரும் பார்ப்பவரும் யார் என்று விசாரித்துத் தானே தானாக இருக்கவேண்டும். இவைகளெல்லாம் சாதகனுக்கு உற்சாகத்தையும் உறுதியையும் அளிக்கும். ஆனால் இதுதான் முடிந்த இடமாக எண்ணிவிடப்படாது. ஆழ்ந்து ஆழ்ந்து செல்லுக; ஒடுங்குக; உரை மாண்ட "உள்ளொளி" காட்சியாகும். இந்நிலைகளை அடைய ஒருவருக்குப் பிறப்புக்கள்பல சென்றிருக்கலாம். எனினும் ஒவ்வொருவரும் அடைந்தே தீருவர்.

இந்நிலைகளில் செல்லச்செல்ல சாதாரண வாழ்விலும்பார்க்கச் சாதகன் பல படிகள் ஏறுகின்றான். அவனது அகத்தூய்மை கூடுகின்றது. அன்பு பெருகுகின்றது. வேற்றுமைகள் மறைகின்றன. இங்கே, சாதி வேற்றுமை மருந்துக்கும் கிடையாது. மொழி வேற்றுமையும் இல்லை. சமய வேற்றுமையும் இல்லை. பார்ப்பதெல்லாம் சிவமே. நடப்பதெல்லாம் அவனுடலே. இந்த உண்மையை யறிந்தவர், சமூக சமய ஒழுங்குகளைக் குழப்பி மால்பண்ணாது சகலத்துக்கும் சாட்சி மாத்திரமாயமைவர்.

தேசாபிமானம், பாஷாபிமானம், சமயாபிமானம் எல்லாம் மயக்கங்களே என்பது தெளிவாகும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதன் உண்மை தெரியும். ஏனெனில் எங்கும் எல்லாம் என்றும் ஒன்றே பரிபூரணமாக நிறைந்து வழிகிறது. இதற்கு எல்லை ஏது. இதையார் அறிவார். முழுவதும் உண்மையாகும்.

வைத்தநிதி, பெண்டீர், மக்கள், குலம், கல்வி, பிறப்பு, இறப்பு யாவும் சித்தவிகாரக் கலக்கமே. இந்த விகாரம் தெளிகிறது. எல்லாரையும் தன்னிடத்திலும் எல்லாரிடத்திலும் தன்னையும் காண்கின்றான். இந் நிலையில் இடையீடின்றி இருப்பவர்கள் ஞானிகளே; மற்றையோர் இவ்விலக்கினைக் குறித்துத் தியானித்து வரக் கடவர். தற்போதம் எந்த நிலையிலும் இல்லாத இடமே மௌனமாகும். எண்

ணங்களின் மயானமே தியானம். ஆகவே தியான மண்டபம் என்ற பெயர் உள்ள இடத்தில் செயல்களுக்கும், சொற்களுக்கும் இடமேது. பேசாமையே இடம்பெறவேண்டும். தெய்வீகத் தொனிகளாகிய தேவாரத் திருமுறைகளும், வேதங்களுமே சித்த விருத்தியென்று அறியக்கூடிய உபசாந்தமே, ஒழிவில் ஒடுக்கமே திகழவேண்டும். ஆச்சிரமம், மடம், கோவில், என்ற நிலையங்களில் நடைபெறுவதைப் போலத் தியான மண்டபம் என்ற தனிப்பெயரினால் விளங்கும் இடத்தில் எதிர்பார்க்கலாமா? எல்லாருடனும் இறைவன் கூட இருக்கிறார், என்ற உண்மையைச் சும்மா இருந்து பார்த்து அறிதற்கே தியான மண்டபம் உரியதாகும்.

இவ்விடத்தில் பேசுவோர் மனத்துக்கும் கேட்போர் மனத்துக்கும் இன்பத்தை யளிக்கும் பிரசங்கங்களையும் உரையாடல்களையும் எதிர் பார்ப்பவர் இத்தியான நெறியில் இன்னும் புகாதவரே யாவர். இவ்விடத்தில் விரிந்த கிரியைகளைக் காணமுயல்பவர் இன்னும் தம் மகத்துள் ஆழ்ந்திருக்கத் துவங்காதாரே யாகும். மௌனமாக இருந்து தியானஞ் செய்து பின் சிறிது ஓய்வெடுப்பதற்காக மாத்திரமே, அநுபூதிமான்களது ஆப்தமொழிகளை மிகச் சுருங்கிய நேரத்துக்கு வாசித்தும், வாசிக்கக் கேட்டும், திரும்பவும் நீண்ட நேரத்துக்குத் தியான நாட்ட முடையராய் சாதனை செய்வார்க்குத்தான் **தியான மண்டபம்** எனத் தெளிந்தோர் தேர்ந்து நிறுவிய நிலையம் நலந்தரும். முத்திக்கு வழியையறிந்த மூதறிஞர் திருவாக்குகளே மந்திர மொழிகளே சக்திவாய்ந்தனவாகும். ஆகவே நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மந்திரங்களையே தியான நாட்டமுடையோர் கேட்டுச் சிந்திப்பர். செவிக்குணவில்லாதபோது சிறிது வயிற்றுக்குமீயப்படும் என்ற கருத்தைச் சிவசிந்தனையில்லாதிருக்கும் போதுதான் கேட்டல், வாசித்தலாகியவுணவு சிறிது செவிக்கும் புலனுக்கும் ஈயவேண்டுமெனக்கொள்க. ஏனைய சொற்பெருக்கும்; அதனைக்கேட்டலும் வெளிமயக்கே; வீண்பொழுது போக்கே. இன்னும் கூடுதலாகக் கூறின் தற்போதத்தின் சாதுரியமான சாந்தமே. ஒரு மொழியாலன்றோ உள்ளத் தூய்மை பெற்றார் பெரியோர். அவ்வொரு மொழிக்குரிய சக்தி பெத்தர்கள் ஆற்றும்பெரும் பிரசங்கங்களுக்காகாது என்பதே அறிந்தார் முடிவு. மேல்வரும் **நற்சிந்தனையில்** பக்திநெறிப் படுவாரும் ஞானநெறிப் படுவாரும் ஆகிய இருவரும் சாதனை செய்து தியானிக்கும்முறை மிக எளிய சொற்களால் தெளிவாக வகுத்துக் கூறப்பட்டிருப்பதை ஓர்ந்து ஓர்ந்து தியானத்தில் மூழ்குவோமாக:-

### பல்லவி

அவனேநா னென்று சொல்லித் தியானஞ் செய்வாய் தினமும்
ஆசையெல் லாமொழியும் ஈசன் அருள் பொழியும் (அவனே)

### அநுபல்லவி

அஞ்சாதே அஞ்சாதே பஞ்சாய்ப் பறக்கும் பாவம்
பஞ்சாட் சரத்தை நெஞ்சில் துஞ்சாம லேசெபி (அவனே)

### சரணம்

கொஞ்சங் கொஞ்சமாய் மனத்தைக் கூடுமட்டு மடக்கு
குருநாதன் திருவடியைக் கும்பிட்டு நீ தொடக்கு
கோபம் பொருமைதள்ளு கொலைகளவை எள்ளு
கூடிப்பாடி ஆடு சிவனடி யாரோடு (அவனே)

ஆதியோ டந்தமில் லாதஆன் மாவென்று
அடிக்கடி நீபடி துடிதுடிப் பாய் நடி
அயலுனக் கில்லை ஆரறி வார்நல்லை
ஆசான் சொன்ன மொழி முழுவது முண்மை (அவனே)

பலபல வானசித்தி பாரினிற் கைகூடும்
பத்திநெறி விட்டிடாதே பத்தர் சொல்லைத் தட்டிடாதே
பைரவி ராகம் பாடிப் பணிசெய்யும் யோகசுவாமி
பாவமெல் லாமோடப் பாரினில் ஈடேற (அவனே)

சிவத்தியானம் என்னும் மருந்தைத் தினந்தோறும் சாப்பிட்டுவா. மனக்குரங்கின் பிணிமாறும். அதைச் சாப்பிடும்போது அநுபானத்தைக்கூட்டிச் சாப்பிடு. அதுவும் உன்னிடமுண்டு. அது என்னவென்றால்: நாவடக்கம். இச்சையடக்கம் என்னும் சரக்கோடுசேர்த்துச் சாப்பிடு. இதுவும் போதாது. பத்திய பாகத்திலேதான் முற்றுந் தங்கியிருக்கிறது. அதுவுமுன்னிடமுண்டு அது என்னவென்றால் மிதமான ஊண், மிதமான நித்திரை, மிதமான தேகாப்பியாசம், என்பவையே. வெற்றி நிச்சயம். ஆன்ம லாபத்தின் பொருட்டு இதைச் செய். மனதை ஒருவன் அடக்கி வெற்றிகொள்ள முழு மனதோடு விரும்புவானானால் **சிவத்தியானத்தைத் தினந்தோறும் செய்துவரக்கடவன்.** படிப்படியாக அவன் மனமொடுங்கி வருவதை அவன் கண்கூடாகக் காணுவான். சாந்தம், பொறுமை, அடக்கம் முதலிய நற்குணங்கள் அவனிடத்துதிக்கும். அவன் மனமெந்த நேரமும் மகிழ்ச்சியுடையதாகவே இருக்கும். இகழ் புகழிரண்டினாலும் இழிவடையான். அந்தராத்மாவிலே சுகிப்பான். பிறர் சுகம் தன் சுகம் என்ற எண்ணம் பெருகும். போதனையிலும் சாதனை சிறந்தது.

*ஓம் தத் சத் ஓம்.*

# 17. திருவாசகத்திற் சில பாடச் சிதைவு

பழஞ்சுவடிப் பதிப்புக்களெல்லாம் முதன் முதலிற் சிறந்த புலவர்களாற் பல ஏட்டுச் சுவடிகளை யொப்புநோக்கித் தேர்ந்து வெளியீடு செய்யப்படவேண்டும். அத்தகைய பதிப்புகளிற் செவ்விய பாடமும் பாடவேற்றுமைகளுங் கொடுக்கப்பட்டிருக்கும். அது மயக்க மின்றி உண்மைப் பொருளைத் துணிந்து கோடற்குப் பேருதவி யாயிருக்கும். அங்ஙனமில்லையாயிற் பதிப்புச் சுவடிகளின் பாடச் சிதைவுகளே உண்மைப்பாடமாக நாடு முழுதும் விரைவிற் பரவி வேரூன்றிவிடும். அவற்றின் உரையுந் தெளிவின்றித் தடுமாற்றமா யிருக்கும்.

திருவாசகத்தின் முதற்பதிப்புப் பல ஓலைச்சுவடிகளை யொப்பு நோக்கித் தேர்ந்து வெளியிடப்படவில்லையென்பது தோன்றுகின்றது. அம் முதற் பதிப்பை யொட்டியே பின்னர்ப் பலர் பல பதிப்புக்களை வெளியிட்டனர்போலும். இக்காலத்திற் புலவர்கள் வெளியிட்ட பதிப்புக்களிலும் புதுமையொன்றுமில்லை. இவர்கள் பதிப்புச் சுவடி களிற் படித்த பாடத்தையே பாடமாக வைத்துக்கொண்டு விரிவுரை எழுதியிருக்கின்றனர். இவர்கள் திருவாசகத்திற் சில பாடங்களுக்குத் தமக்கே பொருள் தெளிவு படாதிருந்தும் பாட வேற்றுமையிருக்கக் கூடுமென்பதனை மறந்தே அவ்விடங்களுக்கு வலிந்து பொருள் கொண்டிடர்ப்படுகின்றனர். இன்னுமவ்விடர்ப்பாடு நீங்காமலே யிருந்து வருகின்றது.

போற்றித் திருவகவலிலே உயிர் பிறவிதோறும் பட்ட துன்பங்களி னின்றும் தப்பி இம்மக்கட் பிறவிக்கு வந்து தாய் வயிற்றுக் கருவிற் படும் துன்பமுதலாகப் படுந் துன்பங்களை அடுக்கிக் கூறிக்கொண்டு வருமிடத்தே,

> "தக்க தசமதி தாயொடு தான்படுந்
> துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்
> ஆண்டுக டோறு மடைந்தவக் காலை
> ஈண்டியு மிருத்தியு மெனைப்பல பிழைத்தும்"

என்னுமிவ்வடிகள் வருகின்றன. இவற்றுள் ஈற்றடிக்குப் பொருள் பலவாறுரைப்பர்.

"நெருக்கியும் அழுத்தியுந் துன்புறுத்தன் முதலிய வெத்தனையோ பல இடையூறுகளிற்றப்பியும்" என்பது ஒருவர் கூறும் பொருள். இதற்கு ஈண்டியுமிருத்தியு மென்னும் உம்மைத் தொடரைத் துன்

புறுத்தன் முதலியவென்னுந் தொடர் வருவித்து முடிக்கவேண்டும். ஈண்டியென்பது நெருங்கியெனப் பொருள்படுமேயன்றி நெருக்கி யெனப் பொருள்படாது. இருத்தியென்பது இருக்கவைத்தெனப் பொருள்படும். இருக்கவைத்தலை அழுத்துதலென்று கொள்வதில்லை. அதனால் இருத்தியென்பதற்குக் 'குந்தவைத்தென' ஒருவர்பொருள் கொண்டனர். அவ்வாறு பொருள் கொண்டாலுஞ் சொல் வருவி யாமற் பொருளைப் பொருத்தலியலாது. கைக்குழந்தைகளை நெருக் குதலும் அழுத்துதலுந் தற்செயலாக எப்பொழுதோ நிகழலாமே யொழிய ஒரு தலையாக நிகழ்வனவல்ல. குழந்தைகளைக் குந்த வைப்பது அவை உயிர் தப்பவேண்டிய துன்பச் செயல்களுளொன் றுதல் கூடுமென ஒருவருங் கொள்ளார். ஈண்டியு மிருத்தியு மென் பதற்கு மேற்கூறியவாறு பொருள் கோடல் பொருந்தாமை கண்ட ஒருவர் "செல்வத்தைத் தேடிச்சேர்த்தும் பொருளைப் பிறர் கவராத வாறு மறைத்துவைத்தும்" எனப் பொருளெழுதியிருக்கின்றனர். இச்செயல் ஒருவர்க்குக் காளைப்பருவத்திற் கடிமணஞ் செய்தில் வாழ்க்கையிற் புக்கபின் உண்டாதலன்றி அதற்குமுன் னுண்டாதல் வழக்கமன்று. அன்றியுமிது "செல்வ மென்னு மல்லலிற் பிழைத் தும்" எனவும் "நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்" எனவும் பிற்கூறுமாற்றில் அடங்கும். ஈண்டுக் கூறுதல் வேண்டா. ஈட்டியெனப் பொருள் கொள்வார்க்கு ஈண்டியென்பது மெலிக்கும் வழி மெலித்தல். இதுகாறுங் கூறிப்போந்த பொருளெல்லாம் "ஆண்டாண்டு தோறு மடைந்த வக்காலை" யென்னு மடைமொழி யின் பொருளோடு சிறிது மியைவனவல்ல. இவ்வாறு பலர் அறிஞர் இடர்ப்பட்டு நலிந்து பொருள் கொள்ளக்கிடத்தலாலும் வேறு பொருத்தமான பொருள்படாமையாலும் "ஈண்டியு மிருத்தியு மெனைப்பல" வென்னும் பாடம் வழுவாதல் வேண்டும். இது ஈண்டிய மிருத்தியு வெனைப்பல பிழைத்தும்" எனறிருந்திருக்க வேண்டும். இப்பாடம் ஈண்டைக்குப் பொருத்தமான பொருளுடையது. மிருத் தியு வென்னும் வடசொற்குச் சாக்காடு தருவது என்பது பொருள். இவை குழந்தைகட்குப் பிறப்புத் தொடங்கிப் பன்னிரண்டாண் டகவைகாறும் நேரக்கூடுமென்பது சோதிட நூற் கொள்கை. இவற் றைப் பாலாரிட்டமென வழங்குவர். மிருத்தியுவென்பது மிருத் தெனவுந் தமிழில் வழங்கும். அவமிருத்தென்பது பயின்ற வழக்கு. ஈண்டிய மிருத்தியு வெனைப்பல பிழைத்துமென்பதற்கு அடுத்தடுத்து வந்த மிருத்தியுக்கள் எவ்வளவோ பலவற்றினின்று தப்பியுமென் பது பொருள். இப்பொருட்குச் சொல்வருவிக்க வேண்டாமையும் ஆண்டாண்டுதோறு மடைந்தவக்காலை யென்னுமடைமொழிப் பொரு

ளோடினிது பொருந்துதலுங் கருதற்பாலன. மிருத்தியு வென்னை யென்னும் வகர வுடம்படுமெய் மகரமாதலும் அதற்கேற்ப ஈண்டிய வென்னும் யகரம் யுகரமாதலும் ஓலையெழுத்தில் நேரக்கூடியதாக லானும், மிருத்தியுவென்னும் வடசொல்லினிணைவு வாராமையானும் திருவாசக முதற்பதிப்புக்குக் கிடைத்த ஓலைச் சுவடியில் ஈண்டியு மிருத்தியு மெனைப்பல பிழைத்து மெனப்பாட மெழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

இனி நமச்சிவாயத் திருவகவலிற் "கல்லாய் மனிதராய்த் தேவ ராய்க் கணங்களாய்" என வருமடியிற் கல்லாய் என்னுஞ் சொற்கு ஒரு பதிப்பிலுந் தெளிவுபடப் பொருளெழுதப்படவில்லை. உயிர் புல்லு முதலாக மேன்மேற் பிறக்கும் பிறப்புக்களிற் கல்லுப் பிறப்பு மொன்றெனவே கொண்டு கல்லாய் என்பதற்குக் கல்லுப்பிறப்பாகி யெனவே இதுகாறும் பொருளெழுதப்பட்டு வருகின்றது. கல்லென் பது மலை. மலைக்குமுயிருண்டென்பவர் மலை வளர்கின்றதென்பர்; பழங் காலத்திலே மலைகளெல்லாஞ் சிறகுடையனவாய்ப் பறந்து திரிந்தன; பின்பு அவை இந்திரனாற் சிறகரியப்பட்டுக் கிடந்தவிடங் களிற் கிடக்கின்றனவெனவும் நாரதரொடு விந்தமலை யுரையாடிற் றெனவும் இன்னுமிவைபோல வழங்கும் புராணக்கதைகளையுஞ் சான்று காட்டுவர். காற்றின் மிதக்குந் துகள் கூடி இடையறுது பல்லாயிரம் யாண்டுகளாக மலைமேல் விழுந்துகொண்டிருக்குமாதலின் மலை வளர் கின்றது போலத் தோன்றுவதல்லது மர முதலியவற்றுக்குப்போல மலைக்கும் வளர்ச்சி யுண்டென்பதனை ஆய்வுப் புலவரொருவருமுடன் படார். புராணக் கதைகளையெல்லாம் நம்புவதனுல் விலங்கும் புள்ளு முதலானவை மாந்தர் போல உரையாடிய கதைபோல்வன வற்றையும் நம்புதல் வேண்டும். மலையென்பவை கல்லுமண்ணுந் திரண்டு செறிந்து குவிந்து கிடப்பவையே. அவை மேடும் பள்ளமுமாயிருக்கும் முழு நிலத்தின் கூறுகளாகிய ஒருவகை யுயர்ந்த மேடுகளே தவிர வேறல்ல. கல்லுக்குணர்ச்சியில்லை. உணர்ச்சியில்லாத பிறப்பும் உயிர்க்குண்டென்பது சிறிதும் பொருந்தாதது. கல்லும் உயிரி னுடம்பாயின் அவை நுண்ணுடம்பினின்று தோன்றியனவாகல் வேண்டும். மரபு வழியுடையனவாகல் வேண்டும். கல்லென்பது உயிர்கள் உடம்பெடுத்தற்கு முன்பு புலப்படாது கிடத்தற்கிடமா யிருத்தல்பற்றி அதனையுமொரு பிறவிபோல் வைத்துக் கூறினு ரென்பாருமுளர். அம்முறைபற்றி நிலனுங் காற்றும் புனலும் பிறவு மெல்லாம் உயிர்ப் பிறவியெனக் கூறுதலமையுமென்பதுபடும். இவை நால்வகைத் தோற்றத் தெழுவகைப் பிறப்பினுள்ளும் அடங் காமையிற் பிறப்பெனப்படாவாம். இவ்வாற்றுற் கல்லாயென்பதற்குக்

கல்லுப் பிறப்பாகியெனப் பொருளுரைத்தல் பொருந்தாமையானும் வேறு பொருள்படுமாறின்மையானும் ஈண்டுக் கல்லாய் என்பது பாடமன்றுதல் பெறப்படும். மனிதராய்த் தேவராய்க் கணங்களாய் என வரும் யகர வொற்றீற்றுப் பயிற்சியிற் கல்லாய் என்னும் யகரவொற்றீற்றையு மிசைத்துப் பாடியிருத்தல் கூடும்; இசை வாணர்க்கு அவ்வாறு பாடம் வருதலுமெளிதே. இது முன்னோர் பாடமென்னும் பற்றினுற் புலவர்கட்கும் இதனைத் திருத்தல் வேண்டு மென்னு நினைவு மறதியாயிருத்தல் கூடும். கல்லா மனிதரென யகர வொற்றின்றிப் பாடமோதினுல் ஈண்டைக்குப் பொருத்தமாய் விடும். மணிவாசகனுர் தாமும் மக்கட் பிறவியேயாயிருத்தலின் மனிதராயென்பதனைப் பிறப்புக்களினீற்றில் வைத்தோதியிருப்பார். ஈற்றில் வையாதொழியினும் பேய் கணங்கட்கும் வல்லசுரர்க்கு மிடையிலாயினும் வைத்திருப்பார்.

> "விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
> கற்றாரோ டேனை யவர்"

எனவும்,

> "மக்களே போல்வர் கயவ ரவரன்ன
> வொப்பாரி யாங்கண்ட தில்"

எனவும் கூறியவாற்ருன் மக்களையும் மாக்களையுமொரு நிகராக வைத்து மனிதரெனக் கூறவிரும்பாத அடிகள் உயர்திணைப் பிறப் புக்களுட் கல்லாத மனிதரை விதந்து வேறுவைத்து அவர் பிறப்புப் பேய்ப்பிறப்பினு மிழிந்ததென்பது தோன்றக் கூறுதலை விரும்பி ஞராகலிற் கல்லா மனிதராய்ப் பேயாய்க் கணங்களாயென யகர வொற்றீறு விடுத்தோதலமைவுடைத்து.

கல்லா மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் வல்லசுரராகி முனிவ ராய்த் தேவராயென மேன்மேலாகிய உயர்திணைப் பிறப்புக்களைக் கூறியதனுல் கல்லா மனிதர் பேயினுமிழிந்தாரென்பது தோன்றும். இங் குக் கணங்களாயெனவே தேவர் அசுரர் முதலிய பதினெண்கணனு மடங்குமாகலின் வல்லசுரரென்றது அவரெல்லார்க்குந் தலைவராகிய இந்திரன், வருணன், கூற்றுவன் முதலாயவரையெனக் கொளல் வேண்டும். இச்சுரரென்பார் தலைவரென்பது தோன்ற வல்லவென அடைகொடுத்தோதினுர். முனிவரென்றதூஉம் மாந்தரில் இருவகைப் பற்றுந் துறந்த நீத்தாரையன்று; வானவருலகின் மேற்பட்ட தவ வுலகம் வாய்மை யுலகமென்பவற்றிற்ருேன்றி வாழ்வாரையெனக் கொள்க. நிலவுலகினுள்ள முனிவர் பிறப்பு மக்கட் பிறப்பினடங் குமாகலின் அதனை விதந்து வேறு பிறப்பாக வைத்தோதமாட்டார்.

அன்றியும் அது வீடுபேறடைவிக்கும் பிறப்பாகலான் அதனை முன்னர்த் தப்பிய பிறப்புக்களுளொன்றாக வைத்தோதி இழிப்படைய மாட்டார். தேவரென்றதூஉம் வானவரையன்று. முனிவருலகிலே தலைவராய் வீற்றிருக்கு முத்தொழிற் பற்றுக் கடவுளரையேயாம். எனவே இங்குக் கூறிய உயர்திணைப் பிறப்புக்களாறும் முறையே ஒன்றினொன்றுயர்ந்தனவாதல் பெறப்படும். இனிப் பாம்பினுடைய தீமையும் பேயினுடைய தீமையுமொருங் குடையரென்பது தோன்றக் கல்லா மனிதரைப் பாம்புக்கும் பேய்க்குமிடையே வைத்தாரென்பதூஉங் கொள்க. எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்து நிற்கும் பிறப்பு மக்கட் பிறப்பாகலின் மக்கட் பிறப்பைக் கழிந்த பிறப்புக்களுளொன்றாக வைத்தெண்ணிலர். இத்துணையுங் கூறிப் போந்தவாற்றாற் கல்லாய் மனிதராயென்ற பாடம் பொருந்தாதென்பதூஉம் கல்லா மனிதராயென்ற பாடமே பொருந்துமென்பதூஉந் துணியப்படும்.

இனிக் "கோயில் சுடுகா" டெனத் தொடங்குந் திருச்சாழற் பாட்டிற் "காயி லுலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ" வென்னு மீற்றடியிற் "கற்பொடி" யென்னும் பாடமும் பொருளினிது விளங்காததாகவேயுள்ளது. இறைவன் வெகுள்வானாயின் உலகமெல்லாங் கல்லுப்பொடியா யழிந்தொழியுங்காண் என்பது இவ்வடிக்குப்பொருள். கல்லுப்பொடியென்பது மண்ணுப்பொடி மாப்பொடிகளைக்காட்டினு நுணுக்கமாதலோ மண் முதலியவற்றைக் காட்டினுங் கற்கள் விரைந்து நொய்திற் பொடியாதலோவில்லை. அங்ஙனமாகவுங் கற்பொடியென விதந்து கூறுதலில் ஒரு சிறப்பிருப்பதாகத் தோன்றவில்லை. விதவாமல் வாளா பொடியென்றே கூறியிருப்பின் இன்னுமிறைவனுடைய ஆற்றன் மிகுதியும் உலகின் எளிமை மிகுதியும் புலனாகும். பரவை வழக்குச் செய்யுள் வழக்கெங்கணும் இங்குக்காணுங் கருத்திற் கற்பொடி வழங்குதலைக் கண்டிலம். அதனாற் கற்பொடியென்பது பாடச் சிதைவாயிருக்க வேண்டுமென்பது தோன்றுகின்றது. இது காற்பொடி யென்றிருந்திருக்கவேண்டும். காற்பொடி, கற்பொடியெனச் சிதைந்து வழங்குதல் எளிதினுண்டாவதே. காற்பொடி, காலிலொட்டிய துகள் அது; மிக நுண்ணியதாய் உற்றுநோக்கப் படாததாய்க் கையாற் றொடத்தகாததா யிழிந்ததாயிருக்கும். காலென்றது காலடியை. வழக்கிலே ஒருவனையொருவன் மதியாதெள்ளியிகழ்ந்து கூறுமிடத்து உன்னைக் காலிலொட்டிய தூசியளவுகூட மதிக்கமாட்டே னென்றாற்போலச் சொல்லுதலுண்டு. "செருப்படியிற் பொடியொவ்வா மானிடரைச் சீறுதியோ" எனக் கம்பராமாயணத்து மிவ்வழக்குக் கையாளப்பட்டுள்ளது. செருப்படியிற் பொடியென்பதற்குப் போர்க்களத்துப் புழுதிப்பொடி யென்றுரைப்பாருமுளர்,

அப்பொடி இழித்துரைக்கப்படுதல் யாண்டும் வழக்காறில்லை. அதனுல் அது கருத்தன்று. வாதவூரடிகள் பொதுவிற் காற்பொடி யென்ருராயினும் அது தற்செயலாக இறைவன் காலிலொட்டுந் துகளாதலுங் கண்டு கொள்க. உலகனைத்து மெரிந்து துகளானுல் அத்துகள் இறைவன் காலடியிலன்றிக்கிடவாது. இனிக் காற் பொடிகாண் என்பதற்குக் காற்றிற் பறக்குந் துகளாய்க் கெடுங்கா ணெனப் பொருளுரைப்பினு மமையும்.

இனிச், செத்திலாப்பத்தினுள் "ஆட்டுத்தேவர் தம் விதி யொழித்" தெனத்தொடங்குந் திருப்பாட்டினீற்றடி "சேட்டைத் தேவர்தந்தேவர்பிரானே திருப்பெருந்துறை மேவிய சிவனே" என வருகின்றது. இதனுள் "சேட்டை" யென்பதற்குச் செய்கை யெனவே பொருள் கூறிவருகின்றனர். எல்லாவற்றையுந் தொழிற் படுத்துந் தேவரென்ப தொருவர் கருத்து. வேள்வி முதலாய செய் கைக்குரிய தேவரென்பது மற்ருெருவர் கருத்து. இவ்விரண்டு கருத் துப்பட இத்திருவாசகத்துள் எவ்விடத்தும் அடிகள் கூறிற்றிலர். இவ்வாறு பொருள் கோடல் வலிந்திடர்ப்படுதலாகவே தோன்று கின்றது. வேறு பொருள் கோடலும் பொருந்துவதன்று. ஆகவே சேட்டைத் தேவரென்பது சிதைவு பாடமாயிருத்தல் வேண்டும். இது சேட்டத்தேவரென்றிருக்க வேண்டும். சேட்டமென்பது சிரேட்ட மென்னும் வடசொற் சிதைவின் மரூஉவாம். சேட்டத்தேவர், மேலான தேவர்; அவராவார் முத்தொழிற் கடவுளர்.

இனித் திருவெம்பாவைப் பத்தாந் திருப்பாட்டில் "ஒரு தோழன் தொண்டருளன்" என்னும் பாடம் ஒரு தோழந் தொண்டருள னென்றிருக்க வேண்டுமென்பது உ. வே சாமிநாதையரவர்களால் அறியவந்தது. ஒரு தோழமளவான தொண்டரை யுடையானென் பது பொருள். தோழமென்பது நூறு, நூருயிரம், கோடியென்ருற் போல வருமொரு பேரெண். தோழம், வெள்ளம், ஆம்பல் என்ருற் போலு மெண்கள் அக்காலத்து வழக்கிலிருந்தன.

இடைக்காலத்திலே சைவத் திருமுறைகளை யெல்லாஞ் செப்ப முற வைத்துப் பாதுகாக்குங் கடமை பூண்ட திருவாவடுதுறைத் திருப்பள்ளி போன்ற சைவத் திருப்பள்ளிகளிலுள்ள திருவாசக ஓலைச்சுவடிகளிலும் உண்மைப் பாடம் விளங்காமற் போனதுபற்றி யாராய்தல் வேண்டும். அவை திருமுறைகளைத் தொகுப்பதன் முன்னரே திருவாசகத்திற் சில பாடச் சிதைவு தோன்றியிருக்க வேண்டும் போலும்.

# 18. மனிதனும் மகானும்

மக்கள் பலராயினும் தன்மையில் மனிதன் ஒருவனே. சமயங்கள் கோடானுகோடி யெனினும் உண்மையில் சமயம் ஒன்றே. தத்துவங்கள் பலவாயினும் தத்துவார்த்தம் ஒன்றே. பல்வேறு காலங்களில் உலகம் பலவகையாகப் பரிணமிக்கினும் அடிப்படையில் உலகம் ஒன்றேயாம். எல்லோரும் ஒருவரே.

மெய்ப்பாட்டுணர்வினும் சிந்தனைத்திறனிலும் மனிதன் மனிதனே; கருத்திலும் குறிக்கோளிலும் மனிதன் மனிதனே தான்; ஊணின்றி யுலகு அமையாதெனினும், உண்பதினல் மட்டுமே மனிதன் உயிர் வாழ்வதில்லை. பெரும்பாலோர் இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே தொழிலாகி அந்தரத்தே போய் அருநரகில் வீழ்கின்றனர். புலன்களைக் கடந்து அந்தராத்மாவை அறிய அவர்கள் சிந்தை அவாவுவதில்லை. பிறப்பதும் உண்டுடுத்துக் களிப்பதும் பின்னிறப்பதுமே இவர்கள் கண்ட வாழ்வு.

மகான்கள் இந்திரியங்களின் வழிச்செல்லாது, இந்திரியங்களைத் தம் வசப்படுத்துவர். பிரபஞ்ச வாழ்வில் மயங்கமாட்டார்கள். சுயநலச் சிக்கல்களைக் களைந்தெடுத்திடுவர். உள்ளும் புறமும் ஒரு தன்மைக் காட்சியவர். அவர் எள்ளுந்திறமேதுமின்றி எவ்வுயிரினையும் தம்முயிர்போல் கொள்ளும் குணசீலர். வெளியுலகில் தோன்றும் பொய்மாயச் சழக்கினை நீத்து, அந்தர்முகமாகி, யாவுக்கும் அடிப்படையான, பரிசுத்தமான, பரமரகசியமான, காலந் தூரங்கடந்த துரியாதீதத்தில் தூங்காமல் தூங்குபவர் அவரே. பரமாத்மாவோடு வேறற ஒன்றுபோல் தாமே தாமாய் சகலத்துக்கும் சாட்சியாய் இருப்பவரே மகான்கள். எதனிடத்திருந்து இப்பிரபஞ்ச காரியங்களெல்லாம் தோன்றி நிலைத்து ஒடுங்குகின்றனவோ அதனுண்மையை அதனருளால் அறிந்திருந்தின் புறுபவரே மகான்கள்.

காலதேச வர்த்தமானங்களால் கட்டுண்டு, நிலையிலா வாழ்வினை நிலையென வெண்ணிச் சிக்குண்டு, வாழ்பவரே மனிதர். காமம், குரோதம், மோக முதலாயவற்றுல் கட்டுண்டு, கருத்தினைச் சுருக்கிக் காலையும் மாலையும் காசே கடவுளெனக் கருதிக் காசினியெங்கும் தேட்டத்தில் நாட்டமாய் ஓடியாடித் திரிந்து, போகத்தில் திளைப்பவர் மனிதர்.

மாற்றிப்பிறக்க வழிதெரிந்தவரே மகான்கள். முட்டையோடு வெளிவந்து, பின் முட்டையிலிருந்து வெளியேறலால் பறவைகளுக்கு இருபிறப்பு உண்டென்பர். பிறக்கும்போது கொடுவந்த சிறு தொழிலையும் சிறு குணங்களையும் கைவிட்டு அகம் மலர்ந்து அன்புடையராய் எங்கும் என்றும் எல்லார்க்கும் இதமுடையராகத் தம்மை மாற்றிய பண்புடையவரே மகான்கள். தன்னல மிலராய், ஈரநெஞ்சினராய், யாதும் வேண்டாதவராய் வாழும் இவர்களே வீரர். இவர் தன்மை எவராலும் எடுத்தோத முடியாதது

"நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன நீ மனமே
மாற்றிப் பிறக்க வழி யறிந்தா யல்லையேல்"

எனப் பட்டினத்தடிகளும், 'நீ மறுதரமும் பிறக்கவேண்டும் என்று கிறிஸ்துநாதரும் கூறியதைச் சிந்தை செய்வீராக. 'புருஷோத்தமனை அறிபவனும் புருஷோத்தமனுக வேண்டும்,' என உபநிடதம் உரைக்கும். எனவே எல்லோரும் மகனுகப் பிறக்கின்றனர், ஆயின் வெகு சிலரே மகானுக மலர்கின்றனர்.

பொருளீட்டுவதிலும் போகவின்பத்திலும் பொழுதெல்லாம் போக்கி வாணுளை வீணுளாகக் கழிப்பவரே மனிதர். ஆசைகளுக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் அடிமைகளாகிக், கண்டனவற்றுக்கெல்லாம் கலங்கி, கோத்திரம் குலம் சாத்திரம் என்பார் சழக்கில் சறுக்கி, போர் பொருமை முதலியவற்ருல் அல்லற்பட்டுச் சதா சஞ்சலமுறுபவரே சாதாரண மனிதர். காசே கடவுளென்றும், பணமில்லாதவர் பிணமனையர் என்றும் இவர் இறுமாந்திருப்பர்.

உயிரினை ஓம்புதற்பொருட்டு ஊண், உடை, உறையுளாகிய இம் மூன்றினையும் சமூகத்திலிருந்து பெற்று வாழும் மகான்கள் அச் சமூகத்தின் முன்னேற்றத்திற்காகச் சதா முயற்சி செய்து கொண்டேயிருப்பர். தினையளவு பெறினும் பனையளவு உதவுவது இவர் பண்பு. தன்னலமற்ற தொண்டினைத் தூயதுறவிகள் மாத்திரமே சிறப்புற ஆற்றுவர். இவர்கள் **நற்சிந்தனை** யொன்று மட்டுமே நானிலத்திற்கு நனிநலன் புரியுமெனில் ஏனையவற்றைப்பற்றி விரித்துக்கூறவும் வேண்டுமோ? ஏனையோர் கடைத்தேறுவதற்காக இவர்கள் எளியர்க்கும் எளியராய் யாண்டும் இயங்குவர். இவர்களுக்குச் சாதி, குலம், பிறப்பென்னும் வேறுபாடில்லை. யாதும் ஊரே, யாவரும் கேளிர். மெய்ப்பொருளை நேராகக்கண்டு காசினிக்கு அதன் சோதிசொரூபக் கதிர்களைப்பரப்பி அறிவை அளிக்கின்றனர். இவர்கள் வருங்காலத்துக்கென யாதொரு பொருளையும் சேமித்து வைப்பதில்லை. கணத்துக்குக் கணம் சங்கடம் செறிந்த வாழ்க்கையே இவர் வாழ்வு. அடுத்தவேளை உணவுதானும் கிடைக்குமோ என்பதும் சந்தேகம். அப்படியிருந்தும் எந்நாளும் இன்பமேயன்றித் துன்பத்தைத் தெரிகிலர். மறுமை வாழ்வின் மேன்மைக்கு இவ்வுலகவாழ்வு ஓர் பயிற்சிச்சாலையென எண்ணி வாழ்கின்றனர். ஆற்றிய கருமம் கைகூடலே இவர்கள் எதிர்பார்க்கும் கூலி. பொன்னையும் பொருளையும் எதிர்பார்ப்பவரல்லர். தொண்டொன்றே துணையெனவாழ்வர்.

சிறிதளவு இன்பந்தரும் விடயங்களில் சிந்தை களிகொண்டும், துன்பங்களால் சிந்தை தளர்ந்தும் வாழ்பவர் மனிதர். இன்பம், துன்பம், விருப்பு வெறுப்பு முதலாகிய துவந்துவங்களால் தாக்குருது, மனவுறுதியுடன் மலையினைப்போல் மலையாது நிற்பர் மகான்கள். "துன்பத்தில் துடியாத, இன்பத்தில் நாட்டமில்லாத, பற்று, அச்சம், சினமற்ற உறுதியான உள்ளத்தை யுடையவன் முனி எனப்படுகிருன்" எனக் கீதை கூறும்.

குருடரால் வழிநடத்தப்படும் குருடரைப்போல் மக்கள் பிறப்பதும் இறப்பது மன்றி, எங்கிருந்து பிறந்தோம், எங்கினிச் செல்வோம் என எதனையும் ஆராய்கின்றிலர். இந்திரிய உலகாகிய அந்தகாரத்தில் மூழ்கி ஏங்கித்திரிவதன்றி இலக்கினையடையும் உறுதியற்றவராகின்றனர். மகான்கள் சலனமற்ற சமத்துவ புத்தியுடையோராய்ச் சதா ஆத்ம ஸ்வரூபத்தில் கண்ணுடையராய் கலங்காது வாழ்கின்றனர். நரகத்தைச் சுவர்க்கமாக்குவதும், சுவர்க்கத்தை நரகமாக்குவதும், மனிதனது மனமேயாகும். மனிதனைப் பிறந்து, பகுத்தறிவைக் கொண்டு ஞானம் கைவரப் பெற்று, மாறிப்பிறந்தவர்களே மகான்கள். வாள்முனையில் நடப்பவர்போன்று ஒருமைப்பாடுடையவராய், சமத்துவ புத்தியுடன் உறுதியாய் உயர்ந்தவர் மகான்கள்.

இவர்கள் என்றும் சமுதாயத்துக்குப் பயன்தரத்தக்க வாழ்வையே வாழ்ந்தனர்.

மனிதன் சுயநல முள்ளவனகவே இருப்பான். தனது இனம், சனம், நாடு, முதலியவற்றின் முன்னேற்றத்தில் அக்கறை கொள்வதன்றி, சாதி, குலம், தேசம் முதலிய பேதங்களைக் கடந்து எல்லாருக்கும் இன்பம் தேடுவதில் அக்கறை கொள்கின்றிலன். எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணியிரங்குபவர் மகான்கள். அடியார் உறவுகொண்டு, அடிமைத் தொண்டராய், அல்லும் பகலும், தீமையை நன்மையினுலும், அறியாமையை அறிவினுலும், பகைமையை அன்பினுலும் ஆட்கொண்டு அமைபவர் மகான்கள். இறைவன் ஒருவனே சச்சிதானந்த மயமானவன். பூக்களைச்சுற்றிவரும் வண்டுகள் போன்றும், சூரியனைச் சுற்றிச் சுழலும் கோளினம் போன்றும் மகான்கள் என்றும் அரனடி நீழலிலேயே அமைவர். இறையடி நாடும் இந்த இடையருச் சிந்தனையே, அவர்களை எல்லாரிடத்தும் அன்பாகவும் ஆதரவாகவும் இருக்க அருளைப் புரிகின்றது. மனிதன் படும் கஷ்டத்தைக் கண்டு மகான் மௌனியாக இருப்பவரல்லர். இவனடையும் இன்னலை நீக்கவே வாழ்நாள் முழுதும் சலியாதுழைப்பவர். உத்தமமகானுக்கு எடுத்துக்காட்டாக மகாத்மா வாழ்ந்து மறைந்தார். ஹரிசனங்களை—தாழ்த்தப்பட்டவர்களை—அரியின் சனங்கள், அதாவது கடவுளின் பிள்ளைகள் எனச் சிலாகித்துப் பேசியிருக்கிருர்.

சாதாரண மனிதனுக்கு நாடும், சாதியும் உண்டு. மகான்களுக்கோ இவையில்லை. அவர் எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓரினம் என்று எண்ணுபவர். யாது மூரே யாவரும் கேளிர் எனக் காண்பவர் அவர். இவர்களே உலகின் உண்மையான குடிகள்; கலையின் உண்மையான கலன்கள்; கடவுளின் உண்மையான மைந்தர்கள். இவர் தன்மையை யடையவே யாவரும் முயற்சி செய்தல் வேண்டும்.

---

# 19. குருபரன் திருமொழிகள்

குரங்குபோல் மனங் கூத்தாடுகின்றதே. இதன் கூத்தை எப்படி யடக்குவதென்று தெரியவில்லையே என்பையாயின், நன்று சொன்னாய். இதற்கு நல்ல மருந்து உன்னிடமுண்டு. நீயதை மறந்து போனாய் சொல்லுதும் கேள். சிவத்தியானம் என்னும் மருந்தைத் தினந்தோறும் உண்ணுதி. மனக் குரங்கின் பிணி மாறும். அதனை உண்ணும்போது அநுபானத்தைக் கூட்டி உண். அதுவுமுன்னிட முண்டு. அதுவென்னவெனின், நாவடக்கம் இச்சையடக்கமென்னுஞ் சரக்கோடு சேர்த்து உண்ணுதி. இதுவும் போதாது. பத்திய பாகத் திலேதான் முற்றுந் தங்கியிருக்கிறது. அதுவு முன்னிடமுண்டு. அது வென்னவெனின் மிதமான ஊண், மிதமான நித்திரை, மிதமான தேக அப்பியாசம் என்பவையே. வெற்றி நிச்சயம். ஆன்ம லாபத் தின் பொருட்டு இதைச் செய்.

மனத்தை யொருவன் அடக்கி வெற்றிகொள்ள முழுமனத்தோடு விரும்புவானாயின் சிவத் தியானத்தைத் தினந்தோறும் செய்துவரக் கடவன். படிப்படியாக அவன் மனமொடுங்கி வருவதை யவன் கண்கூடாகக் காணுவான். சாந்தம், பொறுமை, அடக்கம் முதலிய நற்குணங்கள் அவனிடத் துதிக்கும். அவன் மனம் எந்த நேரமும் மகிழ்ச்சியுடையதாகவே யிருக்கும். இகழ் புகழ் இரண்டினாலும் இழிவடையான். அந்தராத்மாவிலே சுகிப்பான். பிறர் சுகம் தன் சுகமென்ற எண்ணம் பெருகும். கைவிளக்கை ஒருவன் கொண்டு செல்வானாயின், இராக்காலத்தில் அவன் மனங்கலங்குவானா? அன்று. அவ்வாறே சிவத்தியானத்தைச் செய்துவருவானாயின் மாயவிருள வனை யடையுமா? அடையாது. போதனையினுஞ் சாதனை சிறந்தது. ஒரு பொல்லாப்புமில்லை.

ஆன்ம லாபமே பொருளெனக் கண்ட அறிஞர் அநித்திய மான இந்த உலக இன்ப துன்பத்தில் மயங்காமல் தாமரையிலை யில் நீர்போற் சகத்துடன் கூடிவாழ்வர். ஆன்மலாபத்தைப் பெற நினையாதவர் இந்த உலக துன்ப இன்பத்தினாற் கலங்கித் தியங் கித் திரிவார்கள்.

ஆன்மலாபத்தையே குறிக்கோளாகக்கொண்டு நன்மை தீமையை வென்று வண்டுகள் பூவைக்கல்லித் தேனையுண்டு ஒன்றுமறியாது கிடப்பதுபோலப் பக்தனும் சித்தமாகிய பூவைச் சிவத்தினாற் கல்லி ஆங்குவரு மானந்தத் தேனையுண்டு ஒன்று இரண்டு நன்று தீதென் றறியாமல் தேக்கிக் கிடக்கின்றான்.

கமக்காரன் ஒருவன் தன்னுடைய நிலத்திலே நல்ல வித்தை யிட்டு அதிலுண்டாகுங் களையைக் களைந்து விளையுந் தானியத்தை யொன்று சேர்க்கின்றான். அதுபோலப் பக்தனும் சிவமாகிய நிலத் திலே பக்தி யென்னும் வித்தை வித்திக் காமக் குரோத மோக மதமாற்சரியமென்னுங் களையைக் களைந்து சிவபோக மென்னுந் தானியத்தைச் சேர்த்து வைத்துப் புசிக்கின்றான்.

பூலோகமாகிய நந்தவனத்திலே சீவர்களாகிய மலர்கள் மலர்ந்து கிடக்கின்றன. சிவன் அதைக் கண்டு மகிழ்கின்றான்.

பொற்கொல்லன் பொன்னை யெடுத்துப் பல பூண்களைப் படைக்கின்றான். சிவனாகிய பெரிய பொற்கொல்லன் ஆன்மாவா கிய பொன்னை யெடுத்துச் சீவர்களாகிய பல பணிகளையு மாக்கு கின்றான். வைத்தியன் பல மூலிவகைகளையு மெடுத்து ஒன்றாக்கி நோய்க்கு மருந்து கொடுத்து நோயை மாற்றுகின்றான். பெரிய ஞானவைத்தியனும் தனுகரணபுவன போகங்களை ஆன்மாவுக்குக் கொடுத்து அதன் நோயை மாற்றி இன்ப வீட்டில் வைக்கின்றான்.

தாய் தனது குழந்தைகளுக்கு விளையாட்டுச் சாமான்களைக் கொடுத்து மகிழ்கின்றாள். சிவபெருமானுந் தமது குழந்தைகளாகிய எங்களுக்குப் பலவிதமான இன்பங்களையுந் தந்து மகிழ்விக்கின் றான்.

பொறிவழியே போந்து மனம் அலைய அறிஞர் இடங்கொடார். ஏனெனில், ஆத்மாவே தானென அறிந்தவர்கள் ஆசைநோய்க்கி இடங்கொடுப்பாரா? அன்று. அவர்தம் பெருமையை வேத சிவாக மங்களும் புகழ்கின்றன. அவர்களைக்கண்டால் கல்லுங் கரையும். அனைத்தினும் வெற்றியுண்டு.

ஓ மனிதனே! நீ உண்மைப் பொருள். கேடற்றவன். உனக்கு ஒருவருங் கேடுவிளைவிக்க முடியாது. நீ இங்கும் அங்கும் எங்கும் உள்ளவன். நித்தியன். உறுதியுடனே சிங்கம் கானகத்தில் திரிவது போல உலகமாகிய கானகத்தில் திரி. எந்தவிதத்திலும் தளர்வடை யாதே. ஒரு நூதனமு மிங்கில்லை. முழுதுமுண்மை. ஒரு பொல் லாப்புமில்லை. ஓம் தத் சத் ஓம். ஓ மனிதனே! வானம்வந்தாலும் பூமி வந்தாலும் ஆட்சி செய்யக் கருதாதே. சாட்சியாயிரு. மாட்சியுன் பிறப்புரிமை. அது என்ன உபாயத்தாலும் அடையப்படுவதொன் றன்று. அப்படியுள்ள காரியம். மற்றனைத்துஞ் செப்படிவித்தை. அறிவு அறியாமை உன்னிடமில்லை. நீ பரமாத்மா. ஓம் தத் சத் ஓம்.

ஓ மனிதனே! சற்றுப் பொறுமையாயிருந்து பார். நீ யாரெனத் தெரிந்துகொள்ளுவை. துயருறத் தகாத காரியங்களில் துயருருதே. துன்பமு மின்பமும் உலக நடவடிக்கைகள். நீ சித்துப் பொருள்.

உன்னை ஒன்றுந் தாக்கமாட்டாது. எழுந்திரு. விழித்துக் கொள். சிவத்தியானமென்னும் திறவுகோலால் மோக்ஷவீட்டின் கதவைத் திறந்து பார். எல்லாம் வெளியாகும்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

ஓ நண்பனே! உன்னை யார்தான் பாபியென்று சொல்ல வல்லவர். ஏன்!

நீ சிவத்தின் அம்சமல்லவா? மறந்துபோனுய். ஓம் தத் சத் ஓம் என்று ஓயாமல் சொல்லு. உன் முழுமனத்தோடும் இறைவனுக்கு உன்னை ஒப்புக்கொடு.

சிவத்தியானத்தை அசட்டை பண்ணுதே. ஈற்றில் யாவும் நன்மையாய் முடியும். சோம்பலுக்கும் சோம்பரின்மைக்கும் நீ கட்டுப்படாதே.

அதிகப் பேச்சில் என்ன பயன். பண்படுத்தப்பட்ட தரையிலன்றே நல்ல பயன் வரும். அஞ்சாதே.

நாங்கள் சிவனடியார்கள். சிவபெருமான் என்றுள்ளவரோ அன்று நாமும் உள்ளோம்.

வெப்பம் தட்பம், இன்பம் துன்பம் இளமை முதுமை என்னுமிவை இயற்கையின் குணங்கள்.

இவைகளின் தீண்டுதலால் நாமேன் கவலைப்படவேண்டும்? இவைகள் தோன்றி மறைவன. நாமோ தோன்றுவதுமில்லை மறைவதுமில்லை.

உண்மை யின்மையாகாது. இன்மை உண்மையாகாது.

எல்லாஞ் சிவன் செயலென்ற எங்களுக்குக் குறையுமுண்டோ? நிறைவுமுண்டோ? நாம் சிவபெருமானென்ற நூலிலே கோக்கப்பட்ட பல நிறமுள்ள மணிகளை யொப்போம். நூலறுவதுமில்லை. நாங்கள் சிதறிப்போவதுமில்லை. பலபடக் கூறுவதாற் பயனில்லை.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

ஓ சிநேகிதா! நீ சிவனடியானென்று முழுமனத்தோடும் நினை. எல்லாவெற்றியு முன்னிட முண்டு. அதற்குமேல் வேறொன்றுமில்லை. யாவுமுன் காலடியில்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

ஸ்ரீ லங்கா அச்சகம்
யாழ்ப்பாணம்.